817

தாகுதி 18]   வைகாசி௴ : :   May, 1926   [பகுதி 5

விவேக போதினி

VIVEKA BODHINI

பொருளடக்கம்

	பக்கம்
முருகன் வழிபாடு	161
கௌடல்ய அர்த்த சாஸ்திரம்	162
ஸ்ரீகிருஷ்ண கர்ணாம்ருதம்	164
காளிதாஸ மஹா கவி	167
தேசிங்கு ராஜன்	169
காரைக்காலம்மையார்	174
இரஞ்சிதம்—(நாவல்)	177
சிறுத்தொண்டர்—(நாடகம்)	190
சிறுவர்களுக்கான பக்கங்கள்— (4) நரஸிம்மாவதாரம்	193
ஸ்திரீகளுக்கான பக்கங்கள்	197
வர்த்தமானக் குறிப்புகள்	200

சித்திரப் படங்கள்

முருகப்பெருமான் உலகத்தை வலம் வந்தது.

OFFICE OF THE REGISTRAR OF ... 10 NOV 1926 MADRAS

JL
Jm211, N08 VB
N26.18.5
218378

விவேக போதினி சந்தாதார்க்கு ரூ. 1-8-0 விலையுள்ள புத்தகங்கள் இனாமாய்த் தரப்படும்.

என் கொழுப்புள்ள ஆகாரம்?

சரீரம் அல்லது மூளையினால் செய்யப்படும் ஒவ்வொரு காரியத்திலும் குறைகிற சக்தியை திரும்பவும் நாம் அடையவேண்டும். உடம்பில் நிரம்பவும் வியர்த்தால் வெளியில் போன ஜலத்திற்கு பதில் ஜலம் உள்ளே செலுத்தவேண்டும். அதுபோல நரம்புகளும் தசைகளும் தேய்ந்து போனால் அவைகளை சீர்படுத்த ஆகாரம் வேண்டும்.

உணவில் குணமேயன்றி அளவு முக்கியமல்ல

ஒரு கொதிப்பரை (பாய்லர் Boiler) தண்ணீர் காய்ச்ச உபயோகமற்ற கட்டைகளை ஏராளமாக எரித்தால் நெருப்பு திணியடைவதைத் தவிர, நீராவி நிரம்ப வருவது கிடையாது. அம்மாதிரிதான் உடம்பும். நிரம்ப உணவு சாப்பிடுவதால் உபயோகமற்ற சாமான்களை வெளியே தள்ள உடம்புக்குக் கஷ்டமுண்டாகி அதனுடைய சக்தியைக் குறைக்கிறது. பலத்தைக் கொடுக்கும் உணவைக் கொஞ்சம் உட்கொண்டாலும் உடம்புக்கு சிரமத்தைக் கொடுக்காததோடு விருத்தி செய்கிறது.

அதனால் தான் நெஸ்லேஸ் பால் ஆகாரம் (Nestle's Milk Food) உண்மையான பால் கஞ்சியாய் உடம்பினாலும், மூளையினாலும் வேலை செய்கிறவர்களுக்கு உபயோகப்படுகிறது. அதில் ஒருமித்திருக்கும் ஸத்து அவ்வளவும் சரீரத்தில் பரவி மனதிற்கும் விருத்தியடைய வேண்டியதற்கு இன்றியமையாத உத்ஸாகத்தையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கிறது.

பெரிய டின் 1-க்கு விலை ரூபா 1-6-0 (தான்.)

வலதுபுறத்தி லிருக்கும்
மேல் விலாசத்திற்கு
எந்த பாஷையில்
எழுதி விசாரித்
தாலும் பதில்
அனுப்பப்படும்.



கீழ்க்கண்ட விலாசத்தைக்
கிழித்து கவர் அல்லது
கார்ட் மேல் ஒட்டி
அனுப்பவும்.

NESTLÉ & ANGLO S ISS
CONDENSED MILK CO.,
POST BOX No. 396
CALCUTTA.

திருப்புகழ்

பாராயணத் திருமுறை

" திருப்புகழ்ப் பாராயணத் திருமுறை " என்னும் இந்நூல், இத்தமிழ் நாடெங்கும் திருப்புகழ் என்னும் தேனை, மாரியாகப் பொழிபவரும், திருப்புகழடியார் திருவடிச் சென்னியார் என்னுங் காரணப் பெயர் வாய்ந்தவருமாகிய பிரம்மஸ்ரீ **வள்ளிமலை ஸ்வாமி சச்சிதாநந்தா** அவர்களால் தொகுக்கப்பட்ட தொன்றாகும். திருப்புகழ்த் தொகுப்புக்கள் பலவுளவே, இத்தொகும்பு ஏனோ எனின் திருப்புகழ் என்னும் அருட் பிரபந்தமானது ஸகல ஜீவர்களுக்கும் இம்மை மறுமை வீடுகளைத் தரும் கற்பக விருக்ஷமாகும். அதில் ஒவ்வொரு சந்தப்பாவும் ஒவ்வொரு மஹா மந்திரமாகும். ஆதலாற்றான் திருப்புகழ் படிப்பதை "பாராயணம்" என்று பெரியோர் வழங்குகின்றார்கள். இப்பாராயணத்தினால் வீட்டின்ப மொன்றினையே நாடும் உத்தமாதிகாரிகளுக்கு இம்மைச் சுக முண்டாவதோடு, பல கோடி சமயப் பொதுக் கடவுளாகிய முருகப் பெருமானது அருளும், தரிசனமும், ஞானமும், அநுபவமும் உண்டாகும். இம்மை, மறுமைகளை நாடும் மத்திய அதிகாரிகளுக்கு இகத்தில் சகல செல்வ யோக மிக்க பெரு வாழ்வும், பரத்தில் வானவர் போற்றும் துறக்க வின்பமும் உண்டாகுமென்பது திண்ணம். இம்மைப் பயனொன்றையே நாடும் அதம அதிகாரிகளுக்குக் கல்விப் பெருக்கும், நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் இன்னவை பலவும் ஏற்படும். இதில் அணுவளவும் ஐயமின்று, 10-படங்களுடன், சாதா பைண்ட் ரூ. **1**; கலிகோ ரூ. **1-4-0**

பெண்களுக்கு! ஆபரணமே அழகு!

ஜர்மனி தேசத்து "டைமன் எக்ஸ்ட்ரா" என்னும் கமலம்.

சீமைக் கமலம் போன்றது. "**Diamond-extra**" மிக்கப் பிரகாசமுடையது.

லூஸ் தனி கமலம் விலை :—சன்னம் காரட்டு ரூபா.	7	8	0	
,, ,, ,,	5	8	0	
ஷை உருசைஸ் காரட் விலை ரூபா.	4	0	0	
,, ,, ,,	2	8	0	
கம்மல் or தோடு சிறு ஜதை விலை	ரூ. 18	முதல்	ரூ. 22	
ஷை நடுத்தரம் சைஸ்	ரூ. 25	...	ரூ. 30	
ஷை பெரிய சைஸ்	ரூ. 32	...	ரூ. 40	

3-கல்வைத்த பேசரி விலை ரூ.	6	0	0	கிளாவர் ஜதை கடுக்கன்	ரூ. 12
8-கல்வைத்த பேசரி விலை ரூ.	9	8	0	ஒத்தக்கல் கடுக்கன்	ரூ. 16
கிளாவர் மூக்குத்தி விலை ரூ.	5	0	0	புலாக்கு	ரூ. 12
மூக்கு முத்து விலை ரூ.	4	0	0	மூக்குத் திருகு	ரூ. 4, 5

நகைகள் பவுன் தங்கத்தில் கட்டியவை.

கேட்லாக் தமிழில் கிடைக்கும் இதர நகைகளும் ஆர்டர்மேல் செய்துகொடுக்கப்படும். மாட்டல், பில்லை, முகப்பு, அட்டிகை முதலியவைகள் இதே ஜர்மன் கமலத்தில் கட்டித் தரப்படும். அசல் சீமைக் கமலம்போலவே யிருக்கும்.

கிரந்தி. சுப்ரமண்யஞ் செட்டி & சன்,
69-நாராயண முதலி தெரு, சௌகார்பேட்டை, சென்னை.

A. (No. 963) **Aletris Cordial**

அல்லெட்டரிஸ் கார்டியல்

ஸ்திரீகளின் பலஹீனத்தைத் தீர்க்கும் மருந்து

உலகெங்கும் வைத்தியர் யாவராலும் ஸ்திரீகளின் சகலவிதமான நோய்களுக்கு உபயோகிக்கப் படுவது. ருது அடையநிற்கும் சிறுமிகளுக்கும் இம்மருந்து மிகச் சிறந்தது.

அளவு:—தேபிலேக் கரண்டி மருந்தை, உண்ட பின்னும், நித்திரைக்குப் போவதற்கு முன்னும் உட்கொள்ளவேண்டும். உஷ்ணமான ஜலத்துடன் கலந்துகொண்டால் விசேஷ குணம் உண்டு.

Celerina

ஸிலரீனு

பலமற்றவர்க்குக் கைகண்ட மருந்து

உண்பதற்கும், உறங்குவதற்கும் ஒரு மணி முன்பு ஒரு தேபிலேக் கரண்டியளவு, நாளுக்கு மும்முறை சாப்பிட்டால், மனத்தளர்ச்சி, அலட்டல், புரட்டல், தூக்கமில்லாமை, மூர்ச்சை, மயக்கம், நரம்புக்கேடா லாகும் அஜீர்ணம், பலஹீனம், குடிக்கேடால் விளையும் நோய்கள் இவை யாவும் ஒழிந்து உடம்பு புஷ்களமடையும். லாகிரி வஸ்துக்கள் கலவாது, மூளை வஸ்து விருத்தியடைய, கவனத்துடன் செய்யப்பட்டது.

இப்பிரசித்திபெற்ற மருந்துபோல் போலியாக இருக்கும் மருந்துகளைப் பார்த்து ஏமாறுமல்

RIO CHEMICAL COMPANY, NEW YORK CITY, U. S. A.

என்ற லேபிலேப் பார்த்து வாங்கவும். இது மருந்துக்கடைகளில் எங்கும் கிடைக்கும்.

(A. No. 2278)

பாலாஜி அண்டு கம்பெனி, காசி.

புதிய சரக்குகள்! உடனே எழுதுங்கள்!! சகாய விலேகள்!!!

புதுமாதிரி பட்டுப் புடவைகள்

இந்தப் புடவைகள் மெல்லிய பட்டினுல் பளபளப்பாகவும் அழுத்தமாகவும் நெசவு செய்யப்பட்டுள்ளது. சிவப்பு, பச்சை, ரோஜா, நீலம் முதலிய கலர்களில் விழிம்பு முந்திகளும் அழகான ஜரிகை வேலேயும் செய்யப்பட்டுள்ளது. 8 கஜம் $2\frac{1}{2}$ முழம் அகலம், புடவை 1-க்கு விலே ரூ. 25, 30, 35-முதல் 45-வரை.

பட்டு ரவிக்கைகள்

உடல் சாதா விழிம்புக்கு அழகான ஜரிகைவேலே செய்யப்பட்டு பலவித புதுமாதிரி கலர்களில், ரவிக்கை 1-க்கு விலே ரூ. 3-முதல் ரூ. 5-வரை.

விளேயாட்டுப் பாத்திரங்கள்

பித்தளே வெங்கலத்தால் செய்த 32-வித சாமான்கள் அடங்கியதும், குழந்தைகளுக்கு சந்தோஷத்தை உண்டுபண்ணக் கூடியதுமானவை:

1 நெ. பெரிய செட் 1-க்கு	ரூ.	5 0 0
2 நெ. மத்திம செட் 1-க்கு	ரூ.	3 0 0
3 நெ. சிறிய செட் 1-க்கு	ரூ.	2 8 0

அன்னபூர்ணி அம்மன் ஸ்தோத்திரம் இனும்.

Balajee & Co., Silk Merchants,

Benares City.

248378

உ வேலுமயிலுந் துணை

ஷண்முக விஜயம்

திருப்புகழ் விருத்தியுரை

படங்களுடன்

விலை அணா 12

முதல் தொகுதி : : 6-படை வீடுகள்

டெமி அளவில், 64-பக்கங்கள்கொண்ட 12-சஞ்சிகைகளாக வெளிவருகிறது. கிளேஸ் காகிதத்தில் ஒரு பதிப்பும், பெதர்வெயிட் எனும் விலையுயர்ந்த காகிதத்தில் ஒரு பதிப்பும், ஆக இரண்டு பதிப்புகள் வெளிவருகின்றன.

வருஷ சந்தா (தபாற் செலவுடன்)

கிளேஸ் காகிதப் பதிப்புக்கு ரூ.	4 12	கிளேஸ் தனிச்சஞ்சிகை அணா	7
பெதர்வெயிட் காகிதப்பதிப்பு ,,	6 0	பெதர்வெயிட் ஷ ,,	9

பத்திரிகை அபிப்பிராயங்கள்

சுதேசமித்திரன்.— * * நமக்குக் கிடைத்துள்ள விருத்தி உரை, முதனூலின் அழகிற் கியைந்ததா யிருக்கிறது. முருகன் அழகன், திருப்புகழ் அழகியது. இந்தப் புத்தகமும் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. * சில பாடல்களின் உரை, மிக்க விசேஷமானதென்று அறிவிக்கப்பட்டோம். ஆனல் ஒவ்வொரு பாட்டின் உரையும் அப்படியேதான் இருக்கிறது.

லோகோபகாரி.— * * இது கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பம் விளைக்கிறது. அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழின் பெருமையை நாம் சொல்லவல்லோ மல்லேம். அதனைத் தமிழ் மறை என்பார் அறிஞர். பண்டிதரும் பாமரரும் போற்றும் திருப்புகழுக்கு உரையில்லாத குறை நெடுநாளாக இருந்து வந்தது. அந்தக் குறை முருகன் அருளால் இப்பொழுது நீங்கிவிட்டது. * * இதனைப் படிப்போர் திருப்புகழின் உட்கருத்தைத் தெளிவாக அறிந்துகொள்ளலாம். * * முருகன் அடியார்களும் திருப்புகழ் விருப்புடையார்களுமான தமிழர்கள் இதனை ஆதரிக்கவேண்டு மென்பதை நாம் சொல்வது மிகையாம். * * இந்த நன்முயற்சியைத் தமிழர்கள் போற்றுவார்களாக.

ஸ்வராஜ்யா.— * * பெயர் மாத்திரையில் விருத்தியுரையாய் இராமல், உட்பொருளையும் பலரும் அறியக்கூறும் விருத்தியுரையாய் உளதென்பதைக் குறிப்பிடவேண்டும். பொருள் விளங்காது திருப்புகழைப் பாடவும் படிக்கவும் பேரவாக் கொண்டிருப்போர், இவ்விருத்தியுரை கண்டு இதயம் கனிவரெனக் கருதுகிறோம்.

குமரன்.— * * அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் போன்ற நூல்களுக்கு நல்ல பதிப்புகள் வெளியிடப் பெறுவதும் ஓர் ஆனந்தமே யாகும். இத்தகைய ஆவல் அல்லயன்ஸ் கம்பெனியாருக்கு ஏற்பட்டதைப்பற்றி நாம் மகிழ் வெய்துகிறோம். * * தமிழைப் புதிதாகக் கற்கும் மாணவருக்கும் திருப்புகழ் படிப்பதில் துணை செய்வதாகும். பொதுவாகத் தமிழ் மக்களும், சிறப்பாக முருகக் கடவுளது அடியார்களும் திருப்புகழுக்கு விருத்தியுரை காணும் நன்முயற்சியினை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

இந்து சாதனம்:—* * உரை மிக நுட்பமாகவும் விரிவாகவும் பல தக்க பிரமாண சகிதமாகவும் இனிது எழுதப்பட்டுள்ளது. பிரதி, கண்டோர் கண்கவரும் வனப்பினதாய் அழகுற அச்சிடப்பட்டிருக்கின்றது. சிவபெருமானுக்குக் குமாரக் கடவுள் பிரணவப் பொருளை ஓதிச் சிவகுருமூர்த்தமான திருவுருவப் படம் திருவருள் விலாஸத்தோடு கூடியனவாய் எவ்வகைக் கன்னெஞ்சினரையும் கண்ட மாத்திரத்தே உருகச்செய்யுட பான்மையனவாய் அமைக்கப்பட்டுள்ளது.

ஸமரஸ போதினி:—* * * திருப்புகழுக்கு இதுவரை, நமக்குத் தெரிந்தமட்டில், இத்தகை உரை இலது. இவ்வுரை மிகவும் அழகிய நடையில், பொருள் நுட்பங்களை மழுப்பிவிடாது நன்குவிளக்கி எழுதப்பட்டிருக்கின்றது. பொதுவாகவே இந்த புலவர் விருந்தாகத்தக்கதே என நாம் கூறுவோம்.

விலாஸம்:— அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

கந்தபுராணச்சுருக்கம்

மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்

இந்நூல் ஸ்ரீமத் - சம்பந்தசரணாலய சுவாமிகளால் சொற்சுவை, பொருட்சுவை, சந்தச்சுவை முதலியன ததும்ப 1000 பாடல்களாகப் பாடப்பட்டது. கடல்போல் பரந்து கிடக்கும் பெரிய கந்தபுராணக் கதையை இனிது விளக்குவது. மூலத்திற்கேற்ற பொழிப்புரையும், விருத்தியும் பலநூற் பிரமாணங்களுடன் எழுதப்பட்டுள்ளன. டிம்மி 8-பக்கம் அளவில் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டது. 496 பக்கங்கொண்டது.

காலிகோ பயிண்டு விலை ரூ. **3**

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் ...	0	12	0
குசலோபாக்கியானம் மூலமும் அரும்பதவிளக்கமும் ...	0	12	0
உத்தியோகம் (நாடகம்)	0	6	0

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

பாதி விலை! **ஒரு மாதம் வரை** பாதி விலை!!



அசல் விலை ரூ. **14**.

பாதி விலை ரூ. 7.

22 காரட்ரோல்டு கோல்டு கைக் கெடியாரம் 5-வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயிருக்கும். இக் கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பி வைக்கப் படும். பாதி விலை ரூ. 7.

ஒவ்வொரு கடியாரமும் ஒரு பட்டுப் பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

ஸ்வான் ஹவுஸ்,

தபால் பெட்டி 508,

பி. டி. மதராஸ்.

ஷண்முகம் மூக்குத்தூள்

A. (No. 2700)

70-வருஷ காலமாக குணத்தில் உயர்ந்ததாயும், மணத்தில் இதர பொடியைவிட மேன்மையாயுமிருந்து, இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களில் ஏராளமாய் விற்பனையாய் வருகிறது.

4 பலம் **13** அண. **5** பலம் **15** அண.

ஆர். கே. பரிமள மூக்குத்தூள் 1புட்டி அண 4.

(போஸ்டேஜ் உள்பட)

மறந்துவிடுமுன் எழுதவும்

ஷண்முகம் ஸ்னப் கம்பெனி, லிமிடெட்.

தபாற்பெட்டி நெ. 140, சென்னை.

பெரிய கம்பெனி! பெரிய கம்பெனி!!

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி

நாணயமான சரக்குகள்.

சுத்தமான பட்டு! சகாய விலை!!

உயர்தரமான

பட்டு பீதாம்பர சேலைகள் ரவிக்கைகள்

துப்பட்டாக்கள், வெண்பட்டு வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள், உருமால்கள் முதலிய எல்லாத் தினுசுகளும், சிவப்பு, ரோஸ், ஊதா, பச்சை, மஞ்சள், மேகவர்ணம், வெள்ளை, சிலேட் கலர், ஆரஞ்சு, கத்தரிப்பூக் கலர், கிரிம்ஸன் முதலிய எல்லா இங்கிலீஷ் கலர்களிலும் மிகவும் சரச விலைக்குக் கிடைக்கும்.

பட்டு பீதாம்பர கேட்லாக் இனும்.

உடனே எழுதுங்கள்.

Address.—**Manager,** (A. No. 2914)

Silk Pitamber Co., *Benares City.*

விலாஸம்:—மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி.

குணப்படுத்துவதற்கு மாத்திரமல்ல

(இன்னும்)

வியாதிகள் அணுகாவண்ணம் தடுப்பதற்கும்

எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

பெரும் புகழும் பெற்றிருக்கின்றன!

அஜீரணம், பலஹீனம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, மூளைக்கொதிப்பு இன்னும் இவைபோன்ற மற்ற வியாதிகளை குணப்படுத்தி அவைகளை அணுகாதபடி செய்யும்.

32-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூபாய் 1.

விவரம் வேண்டுவோர்

கீழ்க்கண்டவருக்கு எழுதவும்:—

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26-பிராட்வே, மதராஸ்.

இனாம்! இனாம்!! முற்றிலும் இனாம்!!!

'C' ரிஜிஸ்டர்

டைம்பீஸ்

இனாம்



'C' Regd.

டைம்பீஸ்

இனாம்

எங்களின் "தாராலீவர் 18 காரட்டு ரோல்டு கோல்டு, பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்ட பாக்கட் கடியாரம் வாங்குகிறவர்களுக்கு "C" டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ. 5. இக்கடியாரத்தில் உள்ள டயலின்பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிடப்பட்டிருக்கிறது, முந்துங்கள்.

காப்டன் வாட்ச் கம்பெனி,

தபால் பெட்டி நெ. 265, மதராஸ்.

லோகோபகாரி

முப்பத்திரண்டு ஆண்டுகளாய் நிலவும்

வாரப் பத்திரிகை.

பத்திராதிபர்:—பரலி - சு. நெல்லியப்ப பிள்ளை.

தமிழர்கள் புத்துயிரும் புதுவாழ்வும் பெறுவதற்காகப் பாடுபட்டு வரும் வாரப் பத்திரிகை. உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். சிறந்த பாடல்களும், சித்திரப் படங்களும் அவ்வப்போது வெளிவரும். பாரத தேசம் சகல துறைகளிலும் சுயராஜ்யம் பெற்று, லோகமெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டுமென்பதே லோகோபகாரியின் நோக்கம். உலகத்தில் அறநெறியும் அன்பு நெறியும் வளர்ந்து இன்பம் நிலவுமாறு லோகோபகாரி நெடுங்காலமாக உழைத்து வருகிறது. இதனைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும்.

வருஷ சந்தா ரூபாய். 4—0—0 வெளி நாட்டுக்கு ரூபாய். 6—0—0.

மாதிரிப் பிரதி இனாம்.

லோகோபகாரி பத்திரிகாலயம்,

கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

20 - பதிப்புகளுக்குமேல் வெளிவந்திருக்கின்றன. சுமார் **1,00,000** பிரதிகள் வரை செலவாயிருக்கின்றன ஆகையால் இவைகளின் சிறப்புக்கு வேறு அத்தாக்ஷியும் வேண்டுமோ? எலிமெண்டரி உபாத்தியாயர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

ஆரியமத உபாக்கியானம்

புதிய பதிப்புகள்

முதற் பாகம் = = = = விலை அணா **8**	துரைத்தனத்தார் அங்கீகரித்தவை	இரண்டாம் பாகம் = = = = விலை அணா **10**

ஒவ்வோர் பாகத்திலும் நமது இராமாயண, பாரத, பாகவத கிரந்தங்களிலிருந்து எழுதப்பட்ட பற்பல நீதிக் கதைகள் அடங்கியிருக்கின்றன. அநேகம் அழகிய ஆப்டோன் படங்கள் கொண்டது. பள்ளிக்கூடச் சிறுவர் சிறுமியரும் வாசிக்கத் தகுந்த எளிய நடையில், இனிய தமிழில் இவை எழுதப்பெற்றிருப்பது பாராட்டத்தக்கது. யாவருக்கும் உபயோகமான நூல்கள்.

சில முக்கிய அபிப்பிராயங்கள்

Sir P. S. Sivaswami Ayyar, K. C. S. I. C. I. E.—* *The stories are such as to appeal to all boys and are told in an easy popular style. *The work is very well adapted for the lower forms of our Schools.*

The Madras Mail.— *The book is well adapted for use in the lower forms of schools as a Text - Book of Morals.*

---

*The Hindu.— * Can be profitably introduced into Elementary Schools for Moral Instruction.*

தேசபக்தன்:—மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத வேண்டற்பாலனவாய ஒழுக்கம், பக்தி கடமை முதலியவற்றைச் சரித்திரவடிவாகப் படிப்போர் மனதில் பசுமரத்தாணிபோல் பதியுமாறு எளிய தமிழ் நடையில் எழுதியிருக்கிறர். இளமையில் இந்நூலை வாசிப்போர், வயதில் எல்லாவித நறுங் குணங்களையும் பெற்றுத் தேசத்துக்கு நலஞ் செய்பவராவர் என்பதிற் சந்தேகமில்லை. தற்கால நாகரிகம் என்னும் விஷயம் இந்தியாவை எரித்து வரும் இந்நாளில், இந்தியாவின் பண்டைப் பெருமைகளை நிறுத்தவல்ல இத்தகைய நூல்கள் வெளிவருதல் வேண்டுமென்பது நமது கோரிக்கை. இந்நூல் வாசக பாடமாகவும், சமய பாடமாகவும் ஆண், பெண் பாடசாலைகளில் போதிக்கப் படல் வேண்டும். இந்நூல் சிறுவர் சிறுமியர் உள்ளத்தைக் கவரத் தக்கவாறு எழுதப்பெற்றிருப்பது பாடசாலை அதிகாரிகள் கவனிக்கத்தக்கது.

சுதேசமித்திரன்.—புராதனமான நமது புராண இதிகாசங்களில் பொதிந்து கிடக்கும் நீதியைப் புகட்டக்கூடிய அநேக கதைகள் இச்சிறந்த நூலில் அடங்கியுள. நமது சிறுவர்களை ஆதி முதலே நல்வழிப்படுத்தி நீதி மார்க்கங்களை அவர்களுக்கு அறிவூட்ட இத்தகைய புத்தகங்கள் தக்க கருவிகளாகுமென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. இத்தகைய சிறந்த நூலை நமது கல்விச் சாலைகளில் பாடப் புத்தகமாக ஏற்படுத்தல் மெத்த அவசியம். கீழ்தரப் பாடசாலை மாணவர்களுக்குத் தகுந்தபடி இப்புத்தகம் நன்றாக எழுதப்பட்டிருக்கிறது. இது பாலியர்களுக்கு நீதி மார்க்கங்களைப் போதிக்கும் அருமை நூலாகும்.

* * * *

வைசிய மித்திரன்.—* * நம் தமிழ் நாட்டில் "தேசியக் கல்வி" என்ற சொல் பரவு முன்னமேயே, நமது இந்து மதத்தின் சிரோரத்தினமாய் விளங்குகின்ற வேதம், உபநிஷத், மகாபாரதம், புராணம் முதலிய உயர்தர நூற்களினின்றும் உத்தம தரும தத்துவங்களைக் கதைகளின் மூலமாக சிறுவர் சிறுமியருக்கும் கற்பிக்க விரும்பி, கல்வி பயிலும் மாணவர்க்கெல்லாம் சிறந்ததோர் ஞானவுணவளித்து தேசியக் கல்வியின் அஸ்திவாரத்தை ஆஸ்திக முறையில் வலுப்படுத்தி விட்டதைக் குறித்துப் பெரிதும் மகிழ்ச்சி யுறுகின்றோம். தமிழ் நாட்டு மக்களும், கல்விச்சாலைத் தலைவர்களும் இதன் பயனை நன்குணர்ந்து ஆதரிக்கிறார்களென்றே கருத இடமுண்டு. ஒவ்வொரு குடும்பத்திலும் ஸ்திரீ புருஷர்களால் பெரிதும் ஆதரித்தும் படிக்கத் தக்கனவாம்.

விலாசம்:— மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

(A. No 1819) THE MOST CHARMING PERFUME

OTTO DILBAHAR (Registered.)

எல்லோருடைய மனதையும் அதியுற்சாகப்படுத்தும் சுகந்தம்

ஆடோ தில்பஹாரர் (ரேஜிஸ்டார்ட்.)

நீடித்திருக்கக் கூடியதும், நிகரில்லாத உன்னத வாசனையுடையதும், மனதிற்கு சந்தோஷ முண்டாக்கக் கூடியது. ஆல்கஹால், சாராயம் முதலிய சம்பந்தமில்லாத பொறுக்கான சில சுகந்த புஷ்பங்களிலிருந்து இறக்கிய சத்தினால் சேர்க்கப்பட்டது. உம்முடைய கைகுட்டையில் சில துளிகள்விட, புஷ்பத்தோட்டத்தின் மத்தியிலிருந்து அனுபவிக்கக்கூடும் வாசனையை தரக்கூடியது. விவாக காலங்களிலும், பூஜாகாலங்களிலும், இன்னும் மற்ற சென்டுகள் அத்தர்களைவிட இத்த ஆடோ டில்பஹாரர் அதிக இன்பத்தைக் கொடுக்கும்.

அடியில் வருமாறு அளவு புட்டிகளில் நிறப்பி விற்கப்படுகிறது.

பெரிய புட்டி 1-க்கு	(4-டிராம் அல்லது ½-அவுன்ஸ்)	விலை ரூ.	2—0—0
வேறு ,,	(2-டிராம்)	,,	1—4—0
நடுத்தரம் ,,	(1-டிராம்)	,,	0-12—0
சிறிய புட்டி ,,	(½-டிராம்)	,,	0—8—0
மாதிரி ,,		,,	0—2—0
வாசனைக் கார்ட் 1-க்கு		,,	0—1—0

பிரசித்தமான எல்லா வியாபாரிகளாலும் விற்கப்படுகிறது. இதே மாதிரி அநேக பெயர்கள் மார்க்கட்டில் இருப்பதால், வாங்கும்போது புட்டிகள் பேரில் ஆடோ டில்பஹாரர் என்னும் பெயர் இருக்கிறதா என்று கவனித்துப் பார்த்து ஜாக்கிரதையுடன் வாங்கிக்கொள்ளவும்.

சோல் ஏஜண்டுகள்:—

ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,

155, ஜும்மா மஸித், மார்க்கட், பம்பாய்.

முருகப்பெருமான் உலகத்தை வலம் வந்தது

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி 18 { அக்ஷய௵ வைகாசிமீ :: 1926-௵ மேமீ } பகுதி 5

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

இலகிய களபசு கந்த வாடையின்
ம்ருகமத மதனைம கிழ்ந்து பூசியெ
இலைசுருள் பிளவைய ருந்தியேயதை யிதமாகக்
கலவியி லவரவர் தங்கள் வாய்தனி
விடுபவர் பலபல சிந்தை மாதர்கள்
கசனையை விடுவது மெந்த நாளது பகர்வாயே
சிலைதரு குறவர்ம டந்தை நாயகி
தினைவன மதனிலு கந்த நாயகி
திரள்தன மதனில ணைந்த நாயக சிவலோகா!
கொலைபுரி யசுரர்கு லங்கள் மாளவே
அயிலயி லதனையு கந்த நாயக
குருபர பழநியி லென்று மேவிய பெருமாளே!

(ப-ரை) சிலை தரு குறவர் மடந்தை நாயகி-மலையில் வளரும் வேடுவர்களுடைய மகளாக வளர்ந்த பெண்மணியும், தினை வனம் அதனில் உகந்த நாயகி-தினைப்புனத்தில் வசித்துச் சந்தோஷித்த நினது தலைவியுமான வள்ளி நாயகியின், திரள் தனம் அதனில் அணைந்த நாயக-பருத்து வளர்ந்த தனபாரங்களை அணைந்து கொள்ளும் தலைவனே!, சிவலோகா-சிவலோகத்தில் இறைவனாய் எழுந்தருளியிருப்பவனே!, கொலை புரி அசுரர் குலங்கள் மாள (எ-அசை)-கொலைகளைப் புரிந்து வந்த அசுரர்களது குலங்கள் அழியுமாறு, அயில் அயில் அதனை உகந்த நாயக-கூர்மை பொருந்திய வேலாயுதத்தை உயர்த்திப் பிரயோகித்த வீரசிகாமணியே, குருபர-பரமகுருவே "பழநியில் என்றும் மேவிய பெருமாளே-பழனி என்னும் திருத்தலத்தில் நிலையாய் எழுந்தருளியிருக்கும் பெரியோனே; இலகிய களப சுகந்த வாடையின் ம்ருகமதம் அதனை-ஒளி வீசும் கலவைச்சாந்தையும் நல்ல வாசனை வீசும் கஸ்தூரியையும், மகிழ்ந்து பூசி (எ-அசை) சந்தோஷமாகப் பூசிக்கொண்டு இலை சுருள் பிளவை அருந்தி (எ-அசை) வெற்றிலைச்சுருளையும் பாக்கையும் தின்று, அதை இதமாக கலவியில் அவரவர் தங்கள் வாய்தனில் இடுபவர்-அத் தாம்பூல எச்சிலைத தம்மைச் சேரும் ஆடவர்கள் இன்பமடையும்படி கலவிசெய்யுங் காலத்தில் அந்தந்தச் சமயங்களில் புணரும் ஆடவர்களின் வாயினில் இடுபவர்களும், பல பல சிந்தை மாதர்கள்-பலவிதமான எண்ணங்களை யுடையவர்களுமான விலை மாதர்களது, கசனையை-குற்றம் பொருந்திய நட்பை, விடுவது (உம் அசை) விட்டு விடுவது, எந்த நாள் அது பகர்வாயே-எக்காலமென்று கூறியருளவேண்டும்.

(வி-ரை) சிவலோகா என்ற பதம் சிவமும் சுப்ரமண்யமும் வேறு வேறன்று என்பதை உணர்த்துகிறது. முருகப்பெருமான் பிரணவத்தின் பொருளையறியாமல் தாமே பரம்பொருள் என்று அகங்காரமடைந்த பிரமதேவரைச் சிறையிலடைத்து, தாம் சிருஷ்டிகர்த்தாவாக விருந்து சிருஷ்டித்து வந்ததைச் சிவபெருமான் உமாதேவியாரிடம் சொல்ல, உமாதேவியார் மிகுந்த ஆச்சரியமுற்றுச் சிவபெருமானைநோக்கி "மகாப்பிரபு, ஷண்முகனுடைய உருவம் எப்படிப்பட்டது? அவன் பராக்கிரமம் எப்படிப்பட்டது? அவன் யார்? அவன் மகிமை என்ன? இவைகளை எல்லாம் அடியேனுக்கு உரைத்தருள வேண்டும்" என்று கேட்டுப் பிரார்த்தித்தார். அப்போது சிவபெருமான் முருகக்கடவுளது பெருமையைப் பலவாறு புகழ்ந்து, இறுதியில் "முருகன் ஞான சொரூபனும் சச்சிதானந்த சொரூபனும் களங்கமற்றவனுமாய் இருக்கிறான். இரண்டு நூல்களில் ஒரு நூல் கோக்கப்படுவதுபோல அவனிடத்திலும் என்னிடத்திலும் விளங்கும் ஆன்மா ஒன்றே" என்று கூறி தாம் வேறு முருகப்பெருமான் வேறன்று எனத் தெரிவித்தருளினார். அது காரணத்தினால்தான் சுவாமிகள் முருகப்பெருமானைச் சிவலோகா என்று விளித்திருக்கிறார். மற்றும் "ஆனாதபிருதிவி என்று தொடங்கும் பாடலில் பரம்பொருளாகிய சிவபெருமானுக்குரிய குணங்கள் முருகப் பெருமானிடத்திலும் காணப்படுவதை உணர்த்தி யிருப்பதைக் காண்க.

விவேக போதினி

தொ. 18] அக்ஷயஹு வைகாசிமீ [ப. 5

கௌடல்ய அர்த்த சாஸ்திரம்
KAUTALYA'S ARTHA SASTRA

பிரகரணம் 3. இந்திரியஜயம்: ராஜரிஷி நடத்தை.

அரசனுயிருந்தும், ரிஷிபோல் இந்திரியங்களை அடக்கி ஆள்பவன் ராஜரிஷி எனத்தகுவான். இவன் ஒழுகவேண்டிய விதமாவது:—

ஸகஜ விரோதிகளான காமக்குரோதாதிகளை ஒழித்து, இந்திரியங்களை ஜயித்தல், கல்வியில் தேர்ந்த பெரியோர்களோடு கூடி பிரஞ்ஞையை விருத்தி செய்துகொள்ளல்; சார புருஷர்களைக் கொண்டு தனது இராஜ்யத்திலும், சத்துரு அரசாங்கத்திலுமுள்ள தகவல்களை யதார்த்தமாய் அறிதல்; தக்க முயற்சிகள்செய்து யோகக்ஷேமங்களைச் சம்பாதித்தல்; பிரஜைகளைத் தத்தம் கடமைகளைச் சரிவர அனுஷ்டிக்கும்படி செய்து, தர்மத்தை நிலை நிறுத்தல்; வித்யைகள் கற்று விநயத்தை விருத்திசெய்து கொள்ளல்; ஐசுவரியங்களை ஸத்பாத்திரங்களில் செலவிட்டு வெகு ஜனப்ரீதி சம்பாதித்தல்; லோகஹிதமான விருத்தியை அனுஸரித்தல்; இவையெல்லாம் ராஜரிஷி நடத்தையின் லக்ஷணங்களாகும். மேலும், அரசன் இவ்வித இந்திரிய ஜயம்பெற்று, பரஸ்திரீ, பரத்திரவியம், ஜன ஹிம்ஸை இவற்றை ஒழிக்க வேண்டும்; மிகுந்த நித்திரை, மனச்சபலம், பொய்யுரைத்தல், வணக்கமற்ற ஆடைமுதலியன தரித்தல், அதர்மமும், கேடுவிளைவிக்கக்கூடியதுமான விவகாரத்தில் பிரவேசித்தல், இவற்றை விலக்க வேண்டும்.

தர்மம், அர்த்தம், இவற்றிற்கு விரோதமன்னியில், வேந்தன் காமபோகங்களை யனுபவிக்க வேண்டும்; முற்றும் ஸுகங்களைத் துறந்தவனுயிருத்தல் கூடாது. தர்மாதி மூவித புருஷார்த்தங்களையும் சமமாய்க் கைக்கொண்டு நடக்க வேண்டும். இவற்றுள் ஏதாவது ஒன்றை விசேஷமாய் நாடி நடந்தால், மற்ற இரண்டிற்கும், தனக்கும் அநர்த்தம் நேரிடும் என்பது சாதாரணக் கொள்கை.

ஆனல், அர்த்தம் பிரதானமென்பதும், தர்மமும், காமமும் அர்த்தத்தைப் பொருத்துள்ளவை என்பதும் கௌடல்யனது அபிப்பிராயம்.

முடிசூட்டப்பெற்ற மன்னனது நடத்தை: அரசன், தான் அத்துமீறி நடக்காமலிருக்கும் பொருட்டு, ஆசிரியர்களையும், மந்திரிகளையும் தக்கதோர் எல்லைக் கற்போல் ஏற்படுத்தவேண்டும். இவர்கள் அவனை அநர்த்தம் விளைவிக்கக் கூடிய காரியங்களை செய்யாமல் தடுக்கவேண்டும்; அவன் இரகசியமாய்க் கெட்ட காரியங்களில் பிரவர்த்திக்கும்போதும், தக்க வியாஜங்களை முன்னிட்டு, அவனை அவற்றிலிருந்து திருப்ப வேண்டும்.

"ஸஹாய ஸாத்யம் ராஜத்வம்
சக்ரமேகம் ந வர்த்ததே
குர்வீத ஸசிவாம்ஸ்தஸ்மாத்
தேஷாம் ச ச்ருணுயான்மதம் ||"

: அரசியலானது மந்திரி முதலானோரின் ஸகாயத்தால் செய்யக்கூடியது. வண்டியின் ஒரு சக்கரமானது மற்றொன்றின் ஸகாயமில்லாமல் சுழலாது. ஆகையால் அரசன் முற்கூறிய ஆசிரியர்களையும் அமாத்தியர்களையும் உபதேசகர்களாக நியமித்து, அவர்கள் உபதேசப்படி காரியங்களை அனுஷ்டிக்கவேண்டும்'.

பிரகரணம் 4
அமாத்தியர்களை நியமித்தல்

முற்கூறியவாறு, வேந்தன் வித்யைகள் கற்று, பெரியோர்களுடன் கூடி விநயம் பெற்று, இந்திரிய ஜயம் அடைந்துள்ளவனுயிருந்தபோதிலும், ராஜ்ய பரிபாலனம் செய்வதில் அவனுக்குச் சகாயம் அவசியம் வேண்டும். ஆனல், எவர்களைத் தோழராகத் தேர்ந்தெடுப்பது என்னும் விஷயத்தில், அர்த்த சாஸ்திரக்காரர்கள் வெவ்வேறு அபிப்பிராயங்கள் கொண்டுள்ளார்.

தன்னுடன் அத்யயனம் செய்துள்ளோரை அமாத்தியர்களாக நியமிக்கவேண்டும்; ஏனெனில் இவர்களது மனச்சுத்தி, ஸாமர்த்தியம் முதலியவற்றைக் கவனித்து ஆராய்வதற்கு, கூட வித்-

இகலிற் கெதிர்சாய்த லாக்க மதனை மிகலூக்கி னூக்குமாங் கேடு.

தியாப்பியாசம் செய்யுங்காலத்தில் தக்க சமயங்கள் நேரிடும். இவர்கள் வேந்தனது நம்பிக்கைக்குப் பாத்திரமாவார்கள். இது பாரத்வாஜரது மதம்.

(ii) விளையாடிக் கூடப்பழகினவர்கள் அரசனை அவமதிப்பார்கள். ஆகையால், அவர்களை அமாத்யராகச் செய்தல் யுக்தமல்ல என்பது விசாலாக்ஷரின் கொள்கை. சீலமின்மை முதலிய இரகசியமான இழிகுணங்கள் விஷயத்தில் எவர்கள் சமமானவர்களோ, அவர்களைத்தான் அமாத்தியராக்கவேண்டும். அரசன் இவர்கள் நடத்தையின் மர்ம மறிந்தவன் என்னும் காரணத்தால், அவர்கள் பய முற்றும், நன்னடைபைக் கைக்கொண்டும் தத்தம் கடமைகளைச் சரிவர செய்வார்கள்.

(iii) மேற்கூறியவாறு செய்தால், அரசனும் அவர்களிடம் அச்சமுற்று, தமது துர்க்குணத்தை அவர்கள் வெளிப்படுத்தாமலிருக்கும் பொருட்டு, அவர்களது துஷ்கிருத்தியங்களைக் கண்டிக்காமல், அவர்கள் இஷ்டப்படி நடக்க வேண்டிவரும். ஆகையால் பிராண சங்கடம் முதலிய ஆபத்துக்களிலிருந்து அரசனைக் காத்து ரக்ஷிக்க விரும்புவோரையே அமாத்தியாராக நியமிக்க வேண்டுமென்பது பராசரரது அபிப்பிராயம்.

(iv) ஆபத்துக்காலத்தில் தன்னுயிரை விடுத்தாவது அரசனைக்காப்பது பக்திவிசேஷத்தைக் குறிக்கிறது. இது புத்திக் கூர்மையின் லக்ஷணமல்ல. எவர்கள் தங்களுக்கேற்பட்ட காரியங்களை யாதொரு குறைவன்றியும், ஒருக்கால் விசேஷமாயும் சாதிக்கவல்லவரோ, அவர்களே தக்க தோழராவார்கள் என்பது நாரதரின் கொள்கை.

(v) வெகுகால பரம்பரையாய் வந்துள்ள அமாத்ய வம்சங்களிலிருந்து தேர்ந்தெடுக்கவேண்டுமென்பது கௌணபதந்தரின் கொள்கை. இவ்விதம், முன்னடத்தை அனுபவத்தில் நன்கறியப்பட்டுள்ள சந்ததியில் ஏற்படும் அமாத்பர்கள், அரசன் கெட்டவழியில் சென்றாலும், தங்களுக்கு அபகாரம் செய்தாலும், அவனைக் கைவிடாது வெகுகால பரிசயத்தை முன்னிட்டு உதவிபுரிவார்கள். பசுக்களும் பரிசயமற்ற கூட்டங்களை விட்டு, பழக்கமுள்ள பசுக்களோடேயே கூடி நிற்கும்.

(vi) மேற்கூறியவாறு செய்வது அயுக்தமென்பது வாதபியாதி என்பவரின் அபிப்பிராயம். குலக்கிரமமாய் வந்துள்ளவர் அரசனது விபவங்களைக்கிரகித்துக் கொண்டு, தாங்களே எஜமான் போல் ஒழுகுவார்கள். ஆகையால், நீதிசாஸ்திர மறிந்துள்ளோரைப் புதிது புதிதாய் அமாத்யர்களாக நியமிக்கவேண்டும். இவர்கள், தாங்கள் தவறிநடந்தால் அரசன் கடுந்தண்டனை விதிப்பான் எனப் பயந்து, நல்வழியில் நடப்பார்கள்.

(vii) இதுவும் சரியல்ல என்பது பாகுதந்தீ புத்திரரின் பக்ஷம். நீதிசாஸ்திர நிபுணர்கள் காரிய அனுஷ்டான விஷயத்தில் சாமர்த்தியமற்றவர்களாயிருக்கலாம். ஆகையால், நற்குலம், புத்திக் கூர்மை அந்தரங்கசுத்தி, உத்ஸாகம், எஜமான பக்தி இவ்வித நற்குணங்கள் பொருந்தியவர்களே அமாத்தியராகத் தக்கவர்கள்.

மேற்கூறிய பக்ஷங்களில் குறிக்கப்பட்டுள்ள குணதோஷங்கள் ஸஹஜமாய் ஏற்படக்கூடியவையே. கூடப்பழகி கல்வி பயின்றுள்ளோரை அடியோடு நிராகரித்தல் கூடாது. ஆனால், இவர்களது உபதேசத்தை அனுசரித்தே நடப்பதும் தவறு. மேற்கூறியவர்களை உபதேசஞ் செய்யத் தக்க மந்திரிகளாக நியமிக்காமல், அவரவர்களது குணங்கள், சாமர்த்தியம் முதலியவற்றிற்கு ஏற்றவாறு அந்தந்தக் காரியங்களில் சகாயகர்களாக ஏவி, காரியசித்தி பெற வேண்டுமென்பது கௌடல்யனது அபிப்பிராயம்.

''விபஜ்யாத்மவிபவம் தேசகாலௌ ச கர்ம ச ।,
அமாத்யா: ஸர்வ ஏவைதே கார்யா: ஸ்யுர் ந து
மந்த்ரிண: ॥''

'ராஜ விசுவாசம் முதலிய அமாத்ய குணங்களை நன்கு பகுத்தறிந்து, காலம், தேசம், காரிய சொரூபம் இவற்றிற்கு ஏற்ற குணமுள்ளோரை அந்தந்தக் காரியங்களில் சகாயகர்களாகச் செய்ய வேண்டும். இவர்கள் அனைவரும் கர்ம ஸசிவர்களாகத் தக்கவர்களே ஒழிய, மந்திரி பதவியில் நியமிக்கத் தகாதவர்கள்.'

கௌடல்யனது கொள்கைகளையும், அவருக்கு முன்னருள்ள அர்த்த சாஸ்திர ஆசிரியர்களின் அபிப்பிராயங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அவரது தீர்க்காலோசனை, புத்திக்கூர்மை, ராஜ்ய தந்திர சாமார்த்தியம் முதலிய விசேஷ குணங்கள் நன்கு விளங்கும். மௌரிய சந்திரகுப்த வம்சத்தை ஸ்தாபித்து, மகததேசம் வெகுகாலம் சிறப்புற்று ஓங்கி வழங்கும்படி செய்ததே இம்மகானது அர்த்த சாஸ்திர நைபுண்யத்துக்குத் தக்கதோர் அத்தாட்சியாகும்.

ஸ்ரீ கிருஷ்ணகர்ணாம்ருதம்
SRI KRISHNA KARNAMRUTAM

"த்ரிபுவனகமனம் தமாலவர்ணம்
ரவிகரகௌரவராம்பரம் ததானே ||
வபு ரளககுலாவ்ருதானுப்ஜே
விஜயஸகே ரதிரஸ்து மே நவத்யா"

154. யன்னுபீஸரஸீருஹாந்தரபுடே
ப்ருங்சாய மாணோ விதி:
யத்வக்ஷ: கமலா விலாஸஸதனம்
யச்சக்ஷு-ஷீ சேந்த்வினௌ |
யத்பாதாப்ஜ வினி: ஸ்ருதா ஸு-ரநதீ
சம்போ: சிரோபூஷணம்
யந்நாமஸ்மரணம் துனோதி துரிதம்
பாயாத் ஸ ந: கேசவ: ||

ஆயர்பாடியில் இடைச்சிறுவனுய் அவதரித்து, மாடுமேய்த்து, கோபியர்கள், கோபிகள் முதலானேரைக் காத்தருளிய கார்வண்ணன், வாசாமகோசரமான பெருமை பொருந்திய பரமபுருஷன் என்றும், அவரது சாதாரண மானுஷலீலைகளால் அவரை அவமதிப்பது தகாதென்றும் லீலாசுகர் வற்புறுத்திக் கூறுகிறார்:—"ஆதிசிருஷ்டி காலத்தில் உண்டாய சதுர்முகப் பிரம்மாவானவர் எந்தப் பெருமானது நாபியிலுதித்த தாமரைப்புஷ்பத்தின் மத்தியிலகப்பட்டு வண்டு போல் விளங்கினரோ, எவரது வக்ஷஸ்தலத்தில் ஸர்வைசுவரியத்திற்கும் அதிஷ்டான தேவதையாகிய ஸ்ரீ மகா லக்ஷ்மீ நித்தியம் வசிக்கிறாளோ, எவருக்குச் சூரிய சந்திரர்கள் நேத்திரங்களோ, எவரது பாதகமலங்களிலிருந்து பிரவகித்த ஆகாய கங்கையானது சிவபெருமானுக்குச் சிரோபூஷணமாக விளங்குகிறதோ, எவரது நாமத்தை ஸ்மரித்த மாத்திரத்தில் ஸர்வ பாபங்களும் தொலைந்து நற்கதி ஏற்படுமோ, அவ்வித மகிமை வாய்ந்த கேசவன் நமது துரிதங்களைப் போக்கிக் காத்தருள்வாராக!"

155. ததிமதன நினதைஸ்த்யக்தநித்ர: ப்ரபாதே
நிப்ருதபதமகாரம் வல்லவீனும் ப்ரவிஷ்ட: |
முககமல ஸமீரைராசு நிர்யாப்ய தீபான்
கபளித நவநீத: பாது கோபாலபால: ||

கார்வண்ணனது பாலசேஷ்டைகளில் ஒன்றை விவரித்துக் கூறுகிறார் லீலாசுகர்: 'எந்த இடைப் சிறுவன், விடியற்காலத்தில் கோபிகைகள் தயிர் கடையும் சமயத்தில் எழுந்திருந்து, ஒருவருக்கும் தெரியாமல் அவர்கள் வீட்டுக்குள் சென்று, தமது அழகிய வாயால் ஊதி விளக்குகளை அவித்துவிட்டு, அங்கிருந்த வெண்ணெயை எடுத்து ஒரே வாயாய்ச் சாப்பிட்டருளினரோ, அவன் நம்மைக் காப்பாற்றுவானாக!'

156. ஸ்தேயம் ஹரேர்ஹரதி நவநீத சௌர்யம்
ஜாரத்வ மஸ்ய குருதல்ப க்ருதாபராதம் |
ஹத்யாம் தசானன ஹதிர் மதுபான தோஷம்
யத்பூதனு ஸ்தனபய: ஸ புனது க்ருஷ்ண: ||

எந்தப் பகவான் வெண்ணெய் திருடி உண்டது களவு செய்த பாவத்தை போக்கக்கூடியதோ, எவரது ஜாரகிருத்யமானது குருதாரகமனதோஷத்தை நீக்குமோ, எவரால் செய்யப்பட்ட ராவண ஸம்ஹாரஸ்மரணமானது கொலையாலுண்டாகும் பாவத்தைத் தொலைக்குமோ, எவர் பூதனையின் ஸ்தன்யபானம் செய்தது கள் குடித்த தோஷத்தைப் போக்கடிக்குமோ, அந்தக் கிருஷ்ணன் நம்மைப் பரிசுத்தமாக்கட்டும். கார்வண்ணனது லீலைகள் சாதாரண உலகரீதியாய்ப் பார்க்கில், அனுசிதமானவைகளாகவே காணக் கூடும். அப்ராகிருதமான இவ்வித கிருத்தியங்கள் நிந்திக்கத் தக்கவையல்ல. இவற்றின் சிரவணமும், ஸ்மரணமும் மகாபாதகங்களையும் போக்கவல்ல அவ்வளவு பரிசுத்தமானவை என்பது கருத்து.

157. மார மா வஸ மதீயமானஸே
மாதவைகநிலயே யத்ருச்சயா |
ஸ்ரீ ரமாபதி ரிஹாகமே தஸௌ
க: ஸஹேத நிஜவேச்ம லங்கனம் ||

கோடி மன்மதன் போல் ஜ்வலிக்கும் பகவானது ரூபலாவண்யம் நிகரற்றது என்பதைச் சமத்காரமாய்க் கூறுகிறார் லீலாசுகர்.

"ஹே மன்மதனே, மாதவனுக்கே தக்கதோர் ஸ்தானமாகிய எனது மனத்தில் நீ வசிக்காதே. ஒருக்கால் ஸ்ரீலக்ஷ்மீபதியானவர் இங்கு வருவார். தமது வீட்டில் மற்றொருவன் அக்கிரமமாய்ப் பிரவேசிப்பதைக் கண்டு அவர் பொறுக்கார்."

158. ஆகுஞ்சிதம் ஜானு காஞ்ச வாமம்
ந்யஸ்ய க்ஷிதௌ தக்ஷிண ஹஸ்தபத்மே |
ஆலோகயந்தம் நவநீதகண்டம்
பாலம் பஜே க்ருஷ்ணமு பாநதாங்கம் ||

"முழங்காலை மண்டியிட்டு, இடது கையைத் தரையில் ஊன்றி, அழகிய வலது கையிலுள்ள வெண்ணெயை உற்று நோக்கிக்கொண்டு, வளைந்துள்ள அவயவங்களோடு விளங்கிவரும் பாலரூபியான கண்ணனைப் பஜிக்கிறேன்."

159. ஜானுப்யாமபிதாவந்தம்
பாணிப்யா மதிஸுந்தரம் |
ஸுகுண்டலா லகம் பாலம்
கோபாலம் சிந்தயேதுஷ: ||

"ஜ்வலிக்கும் குண்டலங்களுடனும், அழகிய கூந்தல்களுடனும் கூடி, முழங்கால்களாலும் கைகளாலும் தவிழ்ந்து விளையாடும் அதி சுந்தரமான இடைச்சிறுவனை அதிகாலையில் ஸ்மரிக்க வேண்டும்."

160. விஹாய கோதண்ட சரௌ முகூர்த்தம்
க்ருகாண பாணௌ மணிசாரு வேணும் |
மாயூர பர்ஹஞ்ச நிஜோத்த மாங்கே
ஸீதாபதே த்வாம் ப்ரணமாமி பச்சாத் ||

திருமாலின் அவதார வைபவங்கள் அநேகமிருப்பினும், ஸ்ரீ கோபாலனது அவதார லீலைகளிலேயே லீலாசுகரின் மனம் ஈடுபட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுகிறார். "ஸீதாபதியான ராமச்சந்திரனே! ஒரு முகூர்த்தகாலம் தங்களது கோதண்டம், பாணங்கள் இவற்றை விட்டுவிட்டு, இரத்தினங்களிழைத்த அழகிய புல்லாங்குழலைக் கையில் ஏந்திக்கொண்டு, சிரத்தில் மயில்தோகை ஆபரணத்தை அணிந்துகொள்ளும்; பிறகு நான் உம்மைப் பணிந்து வணங்குவேனாக!"

161. அயம் க்ஷீராம் போதே:
பதிரிதி கவாம் பாலக இதி
ச்ரிதோஸ்மாபி: க்ஷீரோபனயன
தியா கோபதனய: |
அனேன ப்ரத்யூஹோ வ்யரசி
ஸததம் யேன ஜனனீ
ஸ்தனதப்யஸ்மாகம் ஸக்ருதபி
பயோ துர்லப மபூத். ||

"ஸ்ரீ கோபாலன் திருப்பாற்கடலுக்கு அதிபதியாதலாலும், பசுக்களைக் காத்து ரக்ஷிப்பவனதலாலும், ஏராளமான பால் கிடைக்குமென்று நினைத்தும் அவரை ஆச்ரயித்தோம். ஆனால், அவர் விளைவித்த இடையூறால், எங்களுக்குத் தாய் முலைப்பால் ஒருதரம்கூட கிடைப்பது அரிதாய் விட்டது." பரமபுருஷனை கார்வண்ணனைப் பஜித்தால் மறுபிறப்பற்று, மோக்ஷமெனும் பேரானந்தம் கிடைக்குமென்னும் மகிமையை நிந்தாஸ்துதி ரூபமாய் வெளியிடுகிறார் லீலாசுகர்.

162. ஹஸ்தமா க்ஷிப்ய யாதோஸி
பலாத் க்ருஷ்ண கிமத்புதம் |.
ஹ்ருதயாத் யதி நிர்யாஸி
பௌருஷம் கணயாமி தே ||.

"ஹே கிருஷ்ணா, நான் பிடித்திருந்த கையைத் திமிறிக்கொண்டு நீ போனால் அது என்ன பெரிய காரியமா? என் மனத்திலிருந்து நீ போகக் கூடுமேயானால், அப்போதுதான் உனக்குப் பௌருஷமிருக்கிறது என்று நான் எண்ணுவேன்." தாம் பகவானைத் தியானித்து, அவரது திருமேனி ஸௌந்தரியாதிகள் தம் மனத்தைவிட்டு அகலாதிருக்கும்படி பஜனம் செய்கிறார் என்பதைச் சமத்காரமாய்க் கூறுகிறார் லீலாசுகர்.

163. தமஸி ரவிரிவோத்யன் மஜ்ஜதா மம்புராசௌ
ப்லவ இவ த்ருஷிதானாம் ஸ்வாது வர்ஷீவ மேக:|
நிதிரிவ விதனானாம் தீர்க்க தீவ்ராமயானாம்
பிஷகிவ குசலம் நோ தாதுமாயாது சௌரி: ||

ஸம்ஸார துக்கங்களிலகப்பட்டுத் தவிப்பவர்களைக் கார்வண்ணன் எல்லாவிதத்திலும் காப்பாற்றி, நற்கதி யடைவிப்பார் என்பது குறிப்பிடப் படுகிறது:—"இருளில் சூரியன் போல் உதித்தும், ஸாகரத்தில் மூழ்கித் தவிப்போருக்கு ஓர் ஓடம்போலும், ஜலமில்லாமல் வருந்துவோருக்கு நன்னீரை வர்ஷிக்கும் மேகம் போலும், தனமின்றி, தாரித்திரியத்தால் வாடுவோருக்கு ஒரு பெரும் நிதிபோலும், வெகுகாலம் கொடிய நோய்களால் அடிபட்டுத் தவிப்போருக்குத் தகுந்த வைத்தியன் போலுமிருந்து எங்களுக்கு க்ஷேமத்தை யளிக்கும்பொருட்டுத் திருமால் வந்தருள்வாராக."

164. ஸாயங்காலே வனாந்தே குஸுமிதஸமயே
ஸைகதே சந்த்ரிகாயாம்
த்ரைலோக்யாகர்ஷணங்கம் ஸுரநரகணிகா-
மோஹனு பாங்க மூர்த்திம் |
ஸேவ்யம் ச்ருங்காரபாவைர் நவரஸபரிதை:
கோபகன்யா ஸஹஸ்ரை:
வந்தேஹம் ராஸகேளீ ரதமதிஸுபகம்
வச்யகோபால கிருஷ்ணம் ||.

நிலா வெளிச்சமுள்ள "ஸாயங்காலத்தில், உபவனங்கள் புஷ்பித்திருக்கும் ஸமயத்தில், மணற்றரையில், மூவுலகோரும் அப்ஸரஸ்திரீகளும் மோகிக்கத் தக்க திவ்விய மங்கள விக்கிரகத்தோடு கூடினவரும், ஆயிரக் கணக்கான கோபஸ்திரீகளால் பற்பல சிருங்கார பாவங்களால் அனுபவிக்கப்பட்டவரும், அவர்களோடு ராஸலீலை செய்வதில் திருப்தி யுடையவரும், ஸௌந்தரியம் பொருந்தியவரும், பக்த பராதீனனுமான கார்வண்ணனை நமஸ்கரிக்கிறேன்"

165. பாலம் நீலாம்பு தாபம் நவமணி விலஸத்-
கிங்கிணீஜால பத்த-
ச்ரோணீ ஜங்காந்த யுக்மம் விபுலருருநக-
ப்ரோல்லஸத்கண்டபூஷம் |
புல்லாம் போஜாம்பவக்த்ரம் ஹத சகடமருத்—
பூதனுத்யம் ப்ரஸன்னம்
கோவிந்தம் வந்திதேந்த்ராத்ய மாவரமஜம்
பூஜயேத் வாஸராதௌ ||

இந்தச் சுலோகத்தாலும் அடுத்த இரண்டு சுலோகங்களாலும் ஸ்ரீ கிருஷ்ணனை, முறையே காலை, மத்தியானம், சாயங்காலம் இம்மூன்று காலங்களிலும் தியானிக்கும் விதம் கூறப்படுகிறது :—

"நீருண்ட மேகம்போன்ற நிறத்தோடு கூடினவரும், இடுப்பிலும் கணைக்கால்களிலும் ரத்தினங்களால் ஜ்வலிக்கும் சலங்கைகளால் அலங்கரிக்கப் பட்டவனும், புலிநகத்தால் செய்யப்பட்ட கண்டாபரணத்தோடு கூடியவனும், மலர்ந்த தாமரைப் புஷ்பம்போன்ற முகத்தோடு விளங்குபவனும், சகடாசுரன், த்ருணாவர்த்தன், பூதனை முதலானோரை ஹதம் செய்தவனும், இந்திராதி தேவர்களால் பூஜிக்கப்பட்டவனும், பசுக்களைக் காத்தருள்பவனும், மனமகிழ்ச்சியோடு கூடினவனும், பிறப்பில்லாதவனுமான பகவானைப். பிராதக் காலத்தில் பஜிக்கவேண்டும்."

166. வந்த்யம் தேவைர் முகுந்தம் விகஸித குருவிந்-
தாபமிந்தீவராக்ஷம்
கோ் கோபீவ்ருந்தவீதம் ஜிதரிபுநிவகம் குந்த
மந்தாரஹாஸம் |
நீலக்ரீவாக்ர்ய பிஞ்சக்ரதன ஸுவிலஸத்—
குந்தலம் பானுமந்தம்
தேவம் பீதாம்பராட்யம் பஜ பஜ தினசோ
மத்யமான்ஹே ரமாயை ||

"தேவதைகளால் வணங்கப் பட்டவனும், மலர்ந்த குருவிந்த புஷ்பம்போல் சோபையுற்று விளங்குபவனும், நீலோத்பலம் போன்ற திருக்கண்களுடையவனும், இடையர்கள், கோபஸ்திரீகள் இவர்களின் கூட்டங்களால் சூழப்பட்டவனும், குந்தபுஷ்பம்போன்ற புன்சிரிப்பின் சோபையோடு கூடினவனும், அழகிய மயில்தோகைகளால் அலங்கரிக்கப்பட்ட கூந்தலோடு பிரகாசிப்பவனும், பெருந்தேஜஸோடு விளங்குபவனும், திவ்ய பீதாம்பர ஆடையால் அலங்கரிக்கப்பட்டவனுமான முகுந்தபகவானை, அஞ்ஞானம் துலைந்து உத்தம ஞானமுதிக்கும் பொருட்டுத் தினந்தோறும் மத்தியான வேளையில் தியானித்துப் பஜிக்கவேண்டும்".

167. சக்ராந்த த்வஸ்த வைரிவ்ரஜ மஜிதமபாஸ்தா-
வனிபாரமாத்யை-
ராவீதம் நாரதாத்யைர் முனிபிரபிநுதம்
தத்வநிர்ணீதஹேதோ : |
ஸாயான்ஹே நிர்மலாங்கம் நிருபமருசிரம்
சிந்தயேந்நீலபாஸம்
மந்திரீ விச்வோதய ஸ்தித்யபஹரணபதம்
முக்திதம் வாஸுதேவம் ||

"சக்கராயுதத்தின் முனையால் துலைக்கப்பட்ட சத்துருக் கூட்டங்களுடையவரும், மற்றெவராலும் ஜயிக்கப்படாது எப்போதும் ஜயசீலனாய் விளங்குபவனும், அப்போதைக் கப்போது பூபாரத்தை நீக்கி வைத்துள்ளவனும், ஆதிதேவர்களால் சூழப்பட்டவனும், நாரதாதி முனிச்சிரேஷ்டர்களால் தத்வநிர்ணயம் பண்ணும் பொருட்டுத் துதிக்கப்பட்டவனும், மாசற்ற அவயங்களோடு கூடினவனும், நிகரற்ற காந்தியோடு ஜ்வலிப்பவனும், கார்வண்ணனும், ஸர்வப் பிரபஞ்சத்தின் உற்பத்தி, ரக்ஷணம், லயம் இவற்றிற்குக் காரணமாயுள்ளவனும், மோக்ஷமளிக்க வல்லவனுமான வாஸுதேவனைப் புத்திமான் ஸாயங்காலத்தில் தியானித்து வணங்கவேண்டும்."

168. அங்குள்யா க: கவாடம் ப்ரகாதி,குடிலே! மாதவ:
கிம் வஸந்தோ
நோ சக்ரீ, கிம் குலாலோ, ந ஹி தரணதர :,
கிம் த்விஜிஹ்வ: பணீந்த்ர: |
நாகம் கோராஹிமர்தீ, கிமஸி ககபதிர்
நோ ஹரி:, கிம் கபீந்த்ர:
இத்யேவம் கோபகன்யாப்ரதிவசனஜித:பாது வ:
சக்ரபாணி: ||

கார்வண்ணன் இடைச்சேரியில் செய்துவந்த பாலலீலைகளுள், ஒரு சமயம் அவர் கோபிகையின் வீட்டில் நுழைய முயன்று அகப்பட்டுக் கொண்டபோது, அவள் கேட்கும் கேள்விகளுக்குச் ச்லேஷையாய் வேறு பொருள் ஏற்படும்படி பதங்களை உபயோகித்துத் தர்க்கமாடினதை வர்ணித்துக் கூறுகிறார் லீலாசுகர்:—"விரலால் மெல்லக் கதவைத் தட்டுகிறது யார் ஐயா? க்ரூரசுபாவமுள்ளவளே, நான் மாதவன்; ஓ வஸந்தனா? இல்லை, சக்ரமுடையவன்; ஆனால் குயவனா! இல்லை இல்லை பூமியைத்தரிப்பவன்; ஆதிசேஷனா என்ன? நான் பாம்பு இல்லை. கொடிய ஸர்ப்பத்தைக் கொன்றவன்; ஓ, பக்ஷிராஜனா கெருடனா? இல்லை, நான் ஹரி. ஓகோ, வானரச் சிரேஷ்டனா? இவ்வாறு கோபஸ்திரீயால்

தார்க்கத்தில் ஜயிக்கப்பட்ட சக்கரபாணியான கார் வண்ணன் நம்மை ரக்ஷித்தருள் வாராக !"

169. யா ப்ரீதிர் விது ரார்ப்பிதே முராரிபோ
குந்த்யர்ப்பிதே யாத்ருசீ
யா கோவர்த்தன மூர்த்னி யாச ப்ருதுகே
ஸ்தன்யே யசோதார்ப்பிதே |
பாரத்வாஜ ஸமர்ப்பிதே சபரிகாதத்தே-
தரே யோஷிதாம்
யா ப்ரீதிர் முனி பத்னி பக்தி-
விரசிதேப்யத்ராபி தாம் தாம் குரு ||

பக்தவத்ஸலனான பகவான் ஆங்காங்கு விதுராதி பக்தர்களிடம் காட்டியுள்ள கிருபா விசேஷத்தைத் தம்மிடமும் காட்டி அனுக்கிரகிக்கும்படி லீலாசுசர் பிரார்த்திக்கிறார் :— "முராஸுரனை வதைத்த பகவானே ! விதுரரளித்த விருந்தில் உமக்கு எவ்வளவு ப்ரீதியிருந்ததோ, குந்தியளித்ததில் எவ்வளவு திருப்தியோ, கோவர்த்தனகிரி சிகரத்திலும், குசேலர் ஸமர்ப்பித்த அவலிலும், யசோதையின் ஸ்தன்யத்திலும் எவ்வளவு சந்தோஷமோ, பாரத்வாஜர் அளித்த ஆதித்தியத்திலும், சபரி ஸமர்ப்பித்த பழங்களிலும் கோபஸ்திரீகளின் அதரபானத்திலும், கௌதம பத்தினி செய்த ஸத்காரத்திலும் எவ்வளவு விசேஷப்ரீதியோ, அவ்வித கிருபை நிறைந்த வாத்ஸல்யத்தை என்னிடம் காட்டியருள்வீராக !"

170. க்ருஷ்ணனுஸ்மரணதேவ
பாபஸங்காத பஞ்சர: |
சததா பேதமாயாதி கிரிர்
வஜ்ராஹதோ யதா ||,

"வஜ்ராயுதத்தால் பிளக்கப்பட்ட பர்வதம் போல், பாபக் கூட்டங்களால் செய்யப்பட்ட கூடானது கார்வண்ணனை ஸ்மரிப்பதனலேயே துண்டுதுண்டாய் உடைந்துபோகும்!" அந்தரங்க பக்தியுடன் ஸ்ரீ கிருஷ்ணனை ஸ்மரிப்போருக்கு எல்லாப் பாவங்களும் தொலைந்து, மோக்ஷ ஸாம்ராஜ்யம் கிடைக்கு மென்பது தமது திடமான அபிப்பிராய மென்பதை முடிவில் குறிப்பிட்டிருக்கிறார் லீலாசுகர்.

அனுபவ ஸங்கீத ரத்னகரம்:—பீகனேர் ஸம்ஸ்தானத்து அனுபவிங் ஆஸ்தான ஸங்கீதவித்வான் பாவபட்டர் எழுதிய ஸங்கீத கிரந்தம். இது எழுந்ததும், அஹோபலர் எழுதிய 'ஸங்கீத பாரிஜாதம்' மகிமையில் குறைந்தது. இதில் 20 மேளகர்த்தாக்களை அங்கீகரித்து ராகங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

காளிதாஸ மகாகவி

KALIDASA THE GREAT POET

ரகுவம்சம்:—

'தசரத சக்கரவர்த்தியானவர் ஸ்ரீராமசந்திரனது யௌவராஜ்ய பட்டாபிஷேகம் செய்யப்போகிறார் என்கிற செய்தியானது, சிங்காரவனத்திலுள்ள நீர்வாய்க்காலானது அங்குள்ள ஒவ்வொரு விருக்ஷத்தையும் குளிரச் செய்வதுபோல், ஜனங்களின் ஒவ்வொருவரது மனத்தையும் களிப்படையச் செய்தது ராமனது பட்டாபிஷேகத்துக்குச் செய்யப்பட்ட ஏற்பாட்டை க்ரூரஸ்வபாவமுள்ள கைகேயியானவள் தடுத்துவிட்டாள். தசரதர் என்ன சொல்லியும் அவள் கேளாது, அவர் ஏற்கெனவே அவளுக்களித்திருந்த இரண்டு வரங்களையும் இப்போது வரிக்கலுற்றாள். 'ராமன் பதினன்கு வருஷம் காட்டில் தபஸிபோல் வஸிக்க வேண்டும் ; பரதன் அகண்டபூமியை அரசாள வேண்டும், என்ற இவ்விரு கொடிய வரங்களையும், மழையால் நனைக்கப்பட்ட புற்றானது உள்ளே பதுங்கி யிருந்த ஸர்ப்பங்களை வெளியேறச் செய்வதுபோல், அவள் வெளியிட்டாள்' ஸ்ரீராமனது குணம் என்னே ! பூமியாளும்படி தசரதர் முதலிற் சொன்ன கட்டளையை ஸ்ரீராகவன் அழுது கொண்டும், 'வனத்துக்குப் போ' என்று பின்னர் ஏற்பட்ட ஆஞ்ஞையை வெகு சந்தோஷத்தோடும் அங்கீகரித்தார். பட்டாபிஷேகத்துக் குரிய பீதாம்பரம் தரித்துள்ளபோதும், பின்னர் வனம் போவதற்காக மரவுரி அணிந்தபோதும் ஸ்ரீராமனது முகசோபை மாறாது ஒரே வர்ணமாயிருந்தது கண்ட ஜனங்கள் ஆச்சரியமுற்று, அவரது நற்குணத்தை மெச்சினர். உடனே ஸ்ரீராமன், தம் பிதாவை ஸத்யம் தவறாமலிருக்குமாறு காக்கும்பொருட்டு, ஸீதையுடனும் லக்ஷ்மணனுடனும் புறப்பட்டுத் தண்டகாரண்யத்தில் புகுந்தார்; அவர் பெரியோர்கள் ஒவ்வொருவரின் மனத்திலும் பிரவேசித்தார். தசரதரும், தமக்கு முன்னரே ஏற்பட்டுள்ள சாபத்தை நினைந்து புத்திரசோகத்தால் வாடி, ஸ்வர்க்கஞ் சென்றார். இவ்வாறு அரசனற்ற ராஜ்யத்தைச் சத்துருக்கள் ஆக்கிரமிக்க ஆரம்பித்தனர். இதுகண்ட வஸிஷ்டாதி மந்திரிகள், மாமன் வீட்டில் வசித்துவந்த பரதனுக்குச் செய்தி சொல்லியனுப்பி வரவழைத்தனர்.

பரதன் வந்து சங்கதிமுழுவதும் அறிந்தான்; தன் மாதாவான கைகேயியையும், ராஜ்யச்ரீயையும் வேண்டாமென்று வெறுத்தான். உடனே

அஞ்சு மறியா னமைவில னீகலான் றஞ்ச மெளியன் பகைக்கு.

சைந்நியங்களுடன் புறப்பட்டு, ஸ்ரீராமனைத்தேடிக் கொண்டு சென்றான். ஆங்காங்குள்ள ரிஷிகளை வணங்கி, ராமனது இருப்பிடத்தைக் கேட்டறிந்து சித்திரகூடம் போய்ச்சேர்ந்தான்; அங்கு அவன் ராகவனைக் கண்டு, தசரதரின் மரணத்தைத் தெரிவித்தான்; பின்பு ராமனை அயோத்திக்கு வந்து ராஜ்யபரிபாலனம் செய்யுமாறு கண்ணும் கண்ணீருமாய்ப் பிரார்த்தித்தான். தமையனிருக்கும் போது, தம்பி அரசுபுரிவது தகாது என்று பன்முறை எடுத்துரைத்தான். பரதன் எவ்வளவோ மன்றாடிக் கேட்டுக் கொண்டும், ராமன் பித்ருவாக்யபரிபாலனத்திலிருந்து சிறிதும் நழுவ மனம்வராது, அயோத்திக்குத் திரும்பிவர முடியாதென்று கூறினர். அதுகேட்ட பரதன், அவரது பாதுகைகளையாவது தந்தருளும்படி வேண்ட, ராமனும் அதற்கு இணங்கினர். பின்னர், பரதன் அவற்றைச் சிரசால் வகித்துக் கொண்டு நந்திக்கிராமம் சென்று, அங்கு அவைகட்குப் பட்டாபிஷேகம் செய்வித்தான். 'தான் ராமனுக்கு ஒரு பிரதிநிதிபோலிருந்து ராஜ்யகாரியங்களைப் பார்த்து வந்தான்.' இவ்வாறு பரதன் ராமனிடம் பரம பக்தி பாராட்டி, ராஜ்ய ஆசையை ஒழித்தது, கைகேயி ராமனிடம் செய்த பாவத்துக்கு ஒரு பிராயச்சித்தம் செய்தது போலிருந்தது.

பிறகு, ராமன் ஸீதையுடனும் லக்ஷ்மணனுடனும் கூட வனங்களிலுண்டான காய்கனிவர்க்கங்களைப் புஜித்து, சாந்தமனதுடன் ஸஞ்சரித்து வந்தார். இதனால் அவர் யௌவனத்திலிருந்தாலும், இக்ஷ்வாகு வம்சத்தினர் முதிர்ந்த வயதில் அனுஷ்டிக்கும் விரதத்தைக் கைக்கொண்டவரானர். இவ்வாறிருக்கையில், ஒருநாள் அவர் கொஞ்சம் சிரமத்தால் ஸீதையின் மடியில் படுத்துறங்குகையில், இந்திர புத்திரனான ஜயந்தன் காக்கை உருக்கொண்டு, அவளது ஸ்தனங்களைக் கொத்தி உபத்திரவித்தான். ராமன் எழுந்து, தர்ப்பையை எடுத்து அவன் மீது அஸ்திரப் பிரயோகஞ் செய்யவே, அவன் அங்குமிங்கும் ஓடி மூவுலகிலும் தன்னைக் காப்பவரில்லாமல், அவரையே சரணமடைந்தான்; தனது கண்ணொன்றை அந்த அஸ்திரத்திற்கு இரையாக அளித்து உயிர்தப்பினான்.

பின்பு ராகவன் சித்திரகூடத்தை விட்டுப் புறப்பட்டு, தண்டகாரண்யத்தில் பிரவேசித்தார். அவரைப் பின்தொடர்ந்து செல்லும் ஸீதாதேவியானவள், கைகேயியால் தடுக்கப்பட்ட போதிலும், ராஜ்ய லக்ஷ்மிதேவியே ராமனது குணத்தில் ஈடுபட்டு அவ்வுருக்கொண்டு சென்றதுபோல் விளங்கினள். பிறகு அத்ரி மகரிஷி அவர்களுக்கு ஸத்காரமளித்தார். அவரது பத்தினியான அனஸூயா தேவியும் ஸீதைக்குப் பலவித அலங்காரங்கள் செய்து உபசரித்தாள்.

அப்பால் செல்லுகையில், 'சந்திரனது மார்க்கத்தை ராகு தடுப்பதுபோல், ராகவனது வழியில் விராதன் என்னும் அஸுரன் குறுக்கிட்டு மறைத்தான்; ஸீதையை தூக்கிச்சென்றான். அவனை ராமலக்ஷ்மணர்கள் ஸம்ஹரித்தனர். பின்னர் அவர்கள் பஞ்சவடி தீரத்தில் வஸித்து வருகையில், 'ராவணனது சகோதரியான சூர்ப்பநகை என்பவள் ராமன்மீது காதல்கொண்டு, கோடைகாலத்தில் உஷ்ணாதிகத்தால் வருந்திய ஸர்ப்பமானது மலய பர்வதத்திலுள்ள சந்தன விருக்ஷத்தை நாடுவதுபோல், நல்லுருவத்துடன் அவரையணுகினள்;' ஸீதையின் முன்னாலேயே, தனது ப்ரபாவத்தைக் கூறி தன்னை மணக்கும்படி அவரை வேண்டினள். "ஸ்திரிகளுக்கு மன்மத விகாரம் அதிகரித்தால் இது காலம், இது அகாலம் என்கிற விவேகமும் அவர்களுக்கு ஏற்படாதல்லவா?," லக்ஷ்மணனும் அவளை நிராகரிக்க, அவள்மீண்டும் ராமனை அடைந்தாள். இச்சமயம், "மைதிலியின் சிரிப்பானது, காற்றில்லாமையால் ஸ்தப்தமாயிருந்த சமுத்திர ஜலத்தைச் சந்திரோதயமானது பொங்கியெழச்செய்வது போல், சாந்தமாயிருந்த சூர்ப்பநகையை கோபாவேசமுள்ளவளாய்ச் செய்தது.'' 'இந்தநகைப்பின் பலனை உடனே நீ யடைவாய்' என்று கூறி, சூர்ப்பநகையானவள், தனது நிஜமான கோர ரூபத்தை எடுத்துப் பயமுறுத்தினள். உடனே லக்ஷ்மணன் வாளையெடுத்து, அவளது காது முதலிய அங்கங்களைச் சேதித்து, அவளை முன்னினும் அதிகபயங்கரமான ரூபமுடையவளாய்ச் செய்தார். பின்னர் அவளது தூண்டுதலின் பேரில், கரதூஷணாதிகளான ஜனஸ்தானத்திலுள்ள அரக்கர்கள் ராமனை எதிர்த்து, அவரால் அடிபட்டு மாண்டனர். இவ்வித ஆபத்தைச் சூர்ப்பனகை ஓடி, ராவணனிடம் தெரிவித்தனள்.

இதனால் சினங்கொண்ட ராவணன், தங்க மானுருக்கொண்ட மாரீசனால் ராமலக்ஷ்மணர்களை வஞ்சித்து, ஸீதையைத் தூக்கிச்சென்றான். இச்சமயம் அவனை எதிர்த்துப் போராடின ஜடாயு என்னும் கழுகானது, இறக்கைகள்

அறுபட்டு இறக்கும் தருவாயில், இராமலக்ஷ்மணர்கள் அதைக் கண்டு, ஸீதாவிருத்தாந்தமறிந்தனர். பிறகு இராமனால் கொல்லப்பட்ட கபந்தன் என்பவன் சாபம் விடுபட்டு, நல்லுருவம் பெற்றான். இராமன் போல், தானும் பத்தினியை விட்டுப் பிரிந்து தவிக்கும் சுக்ரீவனுடன் அவர் சிநேகம் செய்துகொள்வது நலமென்று கூறினான். அவ்வாறே ராமனுக்கு சுக்ரீவசிநேகம் ஏற்பட்டது. இராகவன் வாலியைக்கொன்று, சுக்ரீவனுக்கு வானர ராஜ்ய பட்டாபிஷேகம் செய்வித்தார். பின்னர் ஸீதையைத் தேடுவதற்காக வானரர்கள் நாலுதிக்குகளிலும் அனுப்பப்பட்டனர்; தெற்குதிக்கில் சென்ற ஹனுமான் முதலானோர், ஸம்பாதி மூலமாய் ஸீதை லங்கையிலிருப்பதை அறிந்தனர். 'அகங்காரமற்ற ஞானி, ஸம்ஸாரத்தைக் கடப்பதுபோல், ஹனுமான் ஸாகரத்தைத் தாண்டினார்.' லங்கையில் சீதையைத் தேடிக்கண்டார்; இராமனது மோதிரத்தை அடையாளமாக அவளுக்கு அளித்தார்; அவரது செய்திகளைக் கூறிக் களிப்பித்தார்; பின்னர் தன்னை எதிர்த்த அக்ஷய குமாராதிகளை வதைத்து, லங்கையைக் கொளுத்தினார்; பிறகுஸீதையினிடமிருந்துசூடாமணியைப் பெற்றுத்திரும்பி, இராமனிடம் அதை ஸமர்ப்பிவித்தார். இராமன் அதை அடைந்து ஸீதையை நேரில் காடாலிங்கனம் செய்வதாலுண்டாகக்கூடிய பரமஸௌக்கியத்தையனுபவித்தார். பின்னர் அவளை யடைவதற்காக, வானர ஸைன்னியங்களுடன் புறப்பட்டுச் சமுத்திரக்கரை யடைந்தார். அவர் சேனைகளுடன் சமுத்திரத்தின் வடகரையடைந்து, அங்குத் தண்டிறங்கினார். அச்சமயம், இராவணனது சகோதரனான விபீஷணன், தன் தமையனால் நிராகரிக்கப்பட்டவனாய், இராமனிருக்குமிடம் வந்து, அவரைச் சரணமடைந்தான். 'ராக்ஷஸ ராஜ்ய லக்ஷ்மியே சிநேகிதத்தால் அவ்வாறு விபீஷணனைத்தூண்டி, இராகவனிடம் சரணாகதி செய்யச் சொன்னது போலிருந்தது.' ஸ்ரீராமனும் இவ்வாறு தம்மை யடைந்துள்ள விபீஷணனுக்கு லங்கா ராஜ்யாபிஷேகம் செய்து வைப்பதாய் வாக்களித்தார். "தக்க சமயங்களில் செய்யப்பட்ட பிரயத்தினங்கள் பயனையளிப்பது திண்ணமல்லவா?"

தேசிங்கு ராஜன்

DESINGH RAJAN

(142-ம் பக்கத் தொடர்ச்சி.)

பிறகு, "நல்லது நவாபை வெட்டி நானும் வருகிறேன். எனக்கு நல்ல இடம் தேடிவையும்" என்று, தனக்குத் தானே தைரியம் செய்து கொண்டு ஒரு பெரிய குழி தோண்டச் சொல்லி நீலவேணியை இரண்டு துண்டாய் வெட்டி மோவுத்துக்காரனையும் அதையும் சேர்த்துப் புதைத்து அதன் மேல் பெரிய கோரி கட்டச் சொன்னான். பிறகு தன் சகோதரர்களைக் கூட்டிக்கொண்டு நவாபு சைன்னியத்தில் புகுந்தான். அவன் வருவதைக் கண்ட நவாபு பங்காரு நாயக்கனை சீக்கிரமாகவே பீரங்கி திருப்பச் சொன்னான் அஃதொன்றையும் கவனியாது பாராசாரி குதிரை தண்டு நடுவில் வந்துசேர்ந்தது. அங்கு சேனா நாயகனாகி விருந்தவன் சேத்துப்பட்டு தாவுதுகாரன் (தாஉத்கான்) அவன் உத்திரவின் பேரில் அநேகம் குதிரைவீரர் தேசிங்கு ராஜனை வளைத்துக்கொண்டனர்.

அக்குதிரையை எல்லாம் சுற்றிப்பார்த்து ராஜா தேசிங்கு கலகல வென்று சிரித்து இரண்டுகை யிலே பட்டாவாங்கி,

"ராமு ராமுரே தேவாவென்று
போட்டான் ஒரு வெட்டு ......
துண்டு துண்டாய் தூக்கி வெட்டுகிறான்
ராஜாதேசிங்கு"

அப்பொழுது அவனுடன் கூடவந்த,

"ஜயராமு கங்காராமுபுகுந்து வெட்டுகிறார்கள்.
ராமுவிங்கு லக்ஷ்மணசிங்குபுகுந்து வெட்டுகிறார்கள்
சிற்றப்பதுரைதரணிசிங்கு புகுந்துவெட்டுகிறாராம்"

தாவுத்துக்காரன் கணக்கில்லாமல் அவர்கள் மீது துப்பாக்கிகொண்டு சுட்டான்.

"நெருப்புமாறியாய் பொழிகிறானையா
தாவுத்துக் காரனும்"

அதை எல்லாம் தப்பிக்கொண்டுவரும் பாராசாரிக் குதிரைமீது ஆயிரம் குதிரைவந்து விழுந்தது.

"ஒருகத்திமேல் ஆயிரம்கத்தி வந்துவிழுந்தது
கலகலகலகலைகலகலவென்று கத்திகள்மின்னுதுபார்
மிகுமிகுமிகுமிகுமிகுமிகுவென்று பீறங்கிபறக்குது
[பார்"

அத்தனைகத்தியையும் வெட்டித்தள்ளிக்கொண்டு, குண்டுகளுக்கெல்லாம் தப்பி, மருந்துப்புகையிலே புகுந்து,

வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான் பண்பிலன் பற்றார்க் கினிது.

தென்னங்குலைபோல் புகுந்துவெட்டுகிறான்
ராஜாதேசிங்கு.
சோளத்தண்டை வீசினாற்போலே
அறுத்துபோடுகிறானும்.

நாழிகை பதினைந்து ஆகிவிட்டது.

சோறுசோறுஎன்று துடிக்குதையா
நவாபுபாளையமும்.

இந்த வேளையில் தன்னை எதிர்த்த பல்லாயிரம் துருப்புக் குதிரையையும் தாண்டிக் கொண்டு ராஜாதேசிங்கு தாவுத்துக்காரன் ஏறி யிருந்த யானையினிடம்வந்து சேர்ந்தான்.

இருப்புலக்கை வாங்கி அடிக்குது பட்டத்து
[யானையும்

அப்பொழுது தேசிங்கு ராஜன் பாலா உருவி கையிலே பிடித்து மாவெட்டியானை வெட்டி, நடுங்கிக்கொண்டிருந்த நவாபுவின் முக்கிய சிநேகிதனான அவ்வீரனை ஒரே வெட்டாய் வெட்டித் தள்ளினான். அவன் கொல்லப்பட்டு நிலத்தில் விழவும்,

கண்டபடியே ஓடிப்போச்சுது நவாபு பாளயமும்.

இந்தச்செய்தி நவாபுக்கு எட்ட
இனி யிருந்தால் தலையே போகும் தேசிங்கு
[கையாலே,

எனப் பயந்து

ஓடிஓடி ஒளிக்கிறானையா நவாபு சைதுல்லா.

பிறகு தேசிங்கு ராஜனும் தன்னைச் சுற்றி யிருந்த சைன்யத்தை எல்லாம் வெட்டித்தள்ளிக் கொண்டு திரும்பவும் தன்னுடைய ஜனங்கள் சண்டைசெய்துகொண்டிருந்த இடத்திற்கு வந்தான். இவ்வீரர்கள் பெரும்பாலும் இறக்க,பாக்கி ஐவர்தான் இருந்தனர்.

ஐந்து குதிரை யோடேவாரான் ராஜா தேசிங்கு

சங்கராபரணிக் கரைசேர்ந்து முழங்கால் வரையில் ஓடும் தண்ணீரில் கத்தியைக் கழுவி உரையிலே போட்டு

மரத்து நிழலிலே உட்கார்ந்தானையா ராஜா
[தேசிங்கு

அப்பொழுது அவன் தாயாதியாகிய தன்சிங்கு மகாராஜன் எதிரே ஓடிவந்து திரும்பிவந்த காரணம் என்னவென்று கேட்க, தேசிங்கு ராஜனும் நவாபு செத்துப்போனான் என்று சொல்ல, தன்சிங்கு செத்துப்போனவன் சேத்துப்பட்டு தாவுத்துக்காரன் என்றும், நவாபு மலையடிவார மூலை ஓரத்தில் ஒளித்திருக்கிறான் என்றும் சொல்லி, மறுபடியும் சண்டைக்குப் போகும்படி தேசிங்குராஜனைத் தூண்டினான். அவன் மறுபடியும் எதிர்த்துவருங்கால்

அவன் மார்பிலிருந்த ரங்கநாதர் வழியிலே நின்று
[ராம்
அவன் தோளிலிருந்த ரங்கநாதர் தூரத்தில் நின்று
[ராம்.

அத்தேவனும் தன்னைத் தொழுதுநின்றதேசிங்கு ராஜனைப் பார்த்து, "குழந்தாய் இன்று சண்டையை நிறுத்திப்போடு, நாளை வைத்துக்கொள்ளலாம். நானும் கூடவருகிறேன்" எனச்சொல்ல, தேசிங்கு

"என்னைவிட்டு நீர்பிரிந்து போனீர் ரங்கநாதரே
என்னிட பாதிபலமும் போச்சுது ரங்கநாதரே

முன்வைத்த காலை பின்வைப்பேனோ? நான் போய் வருகிறேன். உத்தாரம் தாரும்" என்று சொல்லிக்கொண்டு யுத்தத்திற்குப் போனான்.

ராஜதேசிங்கு திரும்பின சேதி கேட்ட நவாபு சமாதானத்திற்குத் தோன்றமல்லனை அனுப்பி வைத்தான். அவனும் நாமத்தைப் போட்டு தேசிங்கு முன்னே குதிரையைவிட்டுக் குதித்து, மண்டிபோட்டு சலாம் வாங்கிச் சொல்லுகிறான்:—

"ஒன்பது கோடி சீமை உமக்கு
நவாபு தாரோமென்றார்
ஒரு கொள்ளைக்கு ஒன்பது கொள்ளை
நவாபு தாரோமென்றார்"

இவை முதலியன நயமாகச்சொல்லி சமாதானம் பேசினான். ஆனால் அதையெல்லாம் தேசிங்கு ராஜன் ஒப்புக்கொள்ளவில்லை.

"என்னுடன் வந்த மோவத்துக்காரன்
அவனே போனானும்

என்னுட ஜீவன் என்னத்துக்கு இருக்குது" என்று சொல்லி தோன்றமல்லனை திருப்பிவிட்டான். அதற்குப் பிறகு அவனை முதலில் எதிர்த்தவர் ஆரணி வெங்கிட்டராயர்.

"ஆனையின் மீது அம்பாரி வைத்து
உட்கார்ந்து கொண்டிருக்கிறான்"

அப்பொழுது தேசிங்கு ராஜன் வாளை உருவி அவரை வெட்டப்போனான்.

"ஓங்கின பட்டா விழுந்ததேயானால்
அவனே போய்விடுவான்

ஆனால் வெங்கிட்டராயன் அப்பொழுது வாய்ப்பேச்சுப் பேசவில்லை. மார்பிலிருந்த பூணூலைக் காட்டினான்.

பூணூல் போட்ட பிராமணனையா
வெங்கிட்டராயனும்

அப்போது தனதத்தனுருடைய குலத்துக்கு ஒத்த பழைமையாகிய குடிப்பிறப்பினையுடைய வணிகர்கள் அநேகர் அவ்வம்மையாரைக் கேட்க வந்தார்கள். அவர்களுள் சிலர் அந்த கடற்கரையிலேயுள்ள நாகப்பட்டினத்து நிதிபதி செட்டியாரால் அனுப்பப்பட்டவர்கள். நிதிபதி செட்டியார் நல்ல குலத்திலே பிறந்தவர். நாடெங்கும் பரந்த கீர்த்தியையுடையவர்; அவருக்குப் பரமதத்தன் என்னும் ஒரு புதல்வன் இருந்தான். நிதிபதி செட்டியார் அந்தப் புதல்வனுக்கே புனிதவதியாரைக் கட்டிக்கொள்ள விரும்பியிருந்தார். நாகப்பட்டினத்திலிருந்து வந்து நல்லோர்கள் தனதத்தருடைய மாளிகைக்குச் சென்றார்கள். தனதத்தர் அவர்களை வரவேற்று, உபசரித்து, வந்த காரியம் யாதென வினவினர். அவர்கள் தனதத்தரை நோக்கி, "ஐயா! நாங்கள் இருப்பது நாகப்பட்டினம். உங்கள் அருமைச் செல்வியை எங்கள் தலைவராகிய நாகப்பட்டினத்து நிதிபதி செட்டியார் குமாரர் பரமதத்த செட்டியாருக்கு மணம்பேச வந்தோம்; நிதிபதியின் குலமுங் குணமும் பரந்த புகழும் நிறைந்த கீர்த்தியும் நீடிய செல்வமும் தங்களுக்குத் தெரிந்தவைகளே யாகும். அவருடைய அருமைப் புதல்வனே அழகன்; வலிமிக்கான்; வாணிபத்தில் வல்லான்; கல்வியிற் றேலான். தங்கள் செல்விக்கு ஒற்ற செல்வன் அவனே. ஆகலின் தாங்கள் அதற்கிசைய வேண்டும்" என்று பேசினார்கள். தனதத்தர் தமக்குரியவர்களோடு நன்கு யோசித்துப் புனிதவதியாரை அவர்கள் கருத்தின்படி கலியாணஞ் செய்து கொடுக்க உடன்பட்டார் பிறகு நாகப்பட்டினத்திலிருந்து வந்த பெரியோர்கள் திரும்பிச்சென்று தாங்கள் பெண் பேசிவந்த விஷயங்களை தங்கள் தலைவர் நிதிபதிக்குக் கூறினார்கள். உடனே நிதிபதி உயர்ந்த சிறப்பைப் பெற்றவரைப் போல் மிக மகிழ்ந்து, சுற்றத்தாரோடு கலந்து, கலியாணத்தைச் செய்யத்தொடங்கினர். நிற்க,

பெண் வீட்டிலேயே கலியாணஞ் செய்து கொடுத்தல் தொன்று தொட்டுவரும் முறையேயாகலின், அவ்வாறே செய்வதற்கு தனதத்தனார் வேதியர்களை யழைத்துத் தம்முடைய ஒப்பற்ற புதல்விக்குத் திருமணம் நாளைக் குறிப்பிடும்படிச் சொன்னார். அவர் திருமண நாளை நிச்சயித்துக் கொண்டு திருமணப் பத்திரிகையைச் சுற்றத்தாருக்கும் மற்றவர்களுக்கும் அனுப்பினார். தம்முடைய மாளிகையிலே மணக்கால்நாட்டிக் காரைக்காலெங்கும் கவின்பெற அலங்கரித்தார். நாட்டிலுள்ள நல்ல பொருள்களையும், இந்த நாட்டில் கிடையாத ஆடையாபரண முதலிய அரும்பொருள்களையுஞ் சேகரித்துச் சித்தப்படுத்தினார். உறவினர் நண்பர் முதலிய யாவரும்வந்து நகரத்தில் நிரம்பினார்கள். நாகப்பட்டினத்திலுள்ள நிதிபதியும் மணமகனை அலங்கரித்து அழைத்துக்கொண்டு தம் சுற்றத்தாரோடும் மற்றவர்களோடும் வந்து காரைக்காலென்னும் நகரத்தை யடைந்தார். பிறகு முகூர்த்தநாளிலே பெண் வீட்டாரும் பிள்ளை வீட்டாரும் அளவில்லாத ஆனந்தமடைந்து நல்ல சுபமுகூர்த்தத்திலே பெண்ணையும் பிள்ளையையும் கல்யாண மண்டபத்திலே அமர்த்தி, முழுமுதற் கடவுளை வணங்கி, வேதியர்கள் வேதமுறைப்படி சடங்குகளைச்செய்யவும், மணமுரசானது அதிகரித்து முழங்கவும், பெண்களும் பிறரும் வாழ்த்துப் பாடல்களைப் பாடவும் திருமண விழாவை நன்கு நடத்தினார்கள்

மணவினை மங்களகரமாக நடந்தேறிய பின்னர், அங்கு வந்திருந்த சுற்றத்தாரும் பிறரும் தங்கள் தங்களுடைய ஊர்களுக்குச் சென்றார்கள். பரமதத்தன் காரைக்காலிலேயே சிலநாளிருந்து புனிதவதியாரோடு நாகைக்குப் போகநினைந்தான். அப்போது தனதத்தருடைய குடிக்குப் புனிதவதியார் ஒரே புத்திரியாகலின் அவருக்கு அவ்வம்மையாரைப் பிரிந்திருக்க மனமில்லை. அவர் காரைக்காலிலேயே தம்முடைய மகளும் மருமகனும் வாழவேண்டுமென்று விரும்பினார்; நிதிபதியின் சம்மதத்தைப் பெற்றார்; அவர்களுக்காக ஒரு அழகிய மாளிகையை அமைத்துக் கொடுத்தார்; இன்னும் தம்முடைய அருமைப்புதல்வியார் மகிழும்படியாக அளவில்லாத பொருள்களைக் கொடுத்து அவரை அவ்விடத்திலேயே வசிக்கும்படிச் செய்தார்.

பரமதத்தன் புனிதவதியாரோடு காரைக்காலிலேயே வாழ்ந்து வரும்போது தன்னுடைய பொருள்களை வாணிபத்தால் ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கிக்கொண்டு மிக மேன்மையாக இல்வாழ்க்கையை நடத்தினான். பரமதத்தனுடைய இல்வாழ்க்கைக்கு நல்ல துணையாக அமர்ந்த புனிதவதியம்மையார், தாம் இளமையிலேயே சிவபெருமானுடைய திருவடிகளில் வைத்த அன்பானது மேலும் மேலும் பெருக, அறவாழ்க்கையை நடத்தினர்; தன் காதலன் விரும்புகின்ற

வைகளையெல்லாம் அன்போடு செய்து இன்புற்றார்; சிவபெருமானுடைய அடியார்கள் வந்தால் அவர்களுக்கு நல்ல திருவமுது படைத்தும், அவர்கள் வேண்டியவைகளைக்கொடுத்தும் மகிழ்ந்தார். அம்மையாருடைய இன்ப வாழ்வில் அன்பும் அருளும் அளவு கடந்திருந்தன. இவ்வாறு பரமதத்தனும் புனிதவதியாரும் உயிரும் உடலும் போலவும் அரசும் அமைச்சும் போலவும் அக மகிழ்ந்து வாழ்ந்தார்கள்.

ஒருநாள் பரமதத்தன் வியாபாரஞ் செய்ய வெளியே போயிருந்தபோது, அங்கே அவரைப் பார்க்க வந்த சிலர் இரண்டு நல்ல மாங்கனிகளைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். பரமதத்தன் அந்த மாங்கனிகளைத் தன் மாளிகையிற் சேர்க்கும்படியாக ஏவலாளரிடங் கொடுத்தனுப்பினான். புனிதவதியம்மையார் கணவன் அனுப்பிய கனிகளை வாங்கி வீட்டில் வைத்துவிட்டுச் சமையற்றொழிலைக் கவனித்துக் கொண்டிருந்தார். புனிதவதியார் தனதத்தருடைய மகள்; நிதிபதியின் மருமகள்; பரமதத்தனென்னும் பணக்காரனுடைய மனைவி; அவ்வம்மையாரும் ஏவலாளரில்லாமல் தாமே சமையல் செய்வதோ? எனின் அன்புடைய காதலி தன் காதலனுக்குத் தான் சமைத்த அன்னத்தையே ஊட்டி அகமகிழ்வாள். அவ்வன்னத்திலேயே அவனுடைய உடலுக்கு நலத்தைச் செய்தற்குரிய அன்பானது கலந்திருக்கும். பணத்திற்குப் பணிசெய்யும் பணியாளர் சமைத்த சோறு பண்புடையதேயாயினும் அன்புடையதாமோ? "ஒரு பெண் தன் கணவன் பசித்திருப்பானென்று நினைத்து விரைந்து சமையல் செய்கின்றாள்; அவள் கட்டித் தயிரை பிசைந்து கொண்டிருக்கின்றாள்; அப்போது இடுப்பிலுள்ள உயர்ந்த ஆடை அவிழ்கின்றது; கையைக் கழுவிவிட்டு அந்த ஆடையைக் கட்டிக் கொள்ளக்காலந்தாழ்க்கும் என்று எண்ணி அந்தக் கையோடு அதைக் கட்டிக்கொள்ளுகின்றாள்; தான் பிசைந்து திருத்திய தயிர்ப் பச்சடியைத் தாளிக்குப்போது உண்டாகின்ற புகை மேலெழுந்து கண்களிற் படவும் முகத்தை அப்புறந் திருப்பினால் பதங் கெடுமென்று நினைத்து முகத்தைத் திருப்பாமல் அதனை விரைந்து துழாவுகின்றாள். இவ்வளவு வருத்தத்தோடு சமைத்ததைத் தன் கணவன் நன்றாயிருக்கிறதென்று சொல்லிக் கொண்டே உண்ண, அது கண்ட அவள் முகம் உள்ளுக் குள்ளே மலர்ந்தது." இச்செய்தியைப் பழைய தமிழ்ப் புலவர் ஒருவர் படம் எழுதிக் காட்டினார்போல ஒரு பாட்டினால் எழுதிக்காட்டினார். அந்தப் பெண் செய்த சமையலில் அன்பு கலந்திருந்த தென்பதை எவர் மறுப்பார்? புனிதவதியார் தன் காதலனுக்கு அன்போடு சமையல் செய்து கொண்டிருந்தபோது சிவபெருமானுடைய அடியவர் ஒருவர் அவ்வீட்டிற்கு வந்தார்.

அப்போது அம்மையார் விரைந்து வந்து அவரை உபசரித்து நின்றார்கள். அவர், தாம் மிகவும் பசித்திருப்பதாகத் தெரிவித்தார். அம்மையார்.

"செல்வருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு"

என்று திருவள்ளுவனார் கூறியவாறு, வந்த விருந்தை உபசரித்துப் பின்வரும் விருந்தை எதிர்நோக்கி யிருக்கும் சிறப்புடையவராகலின், உடனே முகமலர்ந்து, அடியவருடைய திருவடிகளை விளக்கி ஆசனத்தில் அமர்த்தி, வாழையிலை விரித்து நல்ல அன்னத்தைக் கொண்டுவந்து வைத்தார். பிறகு அடியவர்க்குப் படைக்கக் கறியமுது பாகம் பண்ணப்படவில்லையே யென்று வருந்தினார். சிவனடியாரே விருந்தினராகவந்தால் அதைப்பார்க்கிலும் பெறவேண்டிய பேறு ஒன்றுமில்லையென்று உணர்ந்தார்; அடியவர் மிகவும் பசித்திருப்பதால் அவர்கறியமுதாகும் வரை தாமதிக்க முடியாதே என்று எண்ணினார்; அப்போது அம்மையாருக்குத் தம்முடைய கணவன் கொடுத்தனுப்பிய கனிகளிரண்டும் நினைவிற்கு வந்தன; உடனே அம்மையார் சிவபெருமானுடைய திருவருளைப் பெற்றவரைப்போல மிகமகிழ்ந்து அதிவிரைவாக ஓடி அக்கனிகளுள் ஒன்றைக்கொண்டு வந்து அவர் பரிகலத்திலே படைத்தார்; அமுது செய்ய வேண்டுமென்று அவரை வேண்டினார். கொடிய பசியினால் வருந்தி வந்த பெரியார் மாம்பழத்தோடு கூடிய உணவையுண்டு புனிதவதியாருடைய அன்பு நிறைந்த செய்கையைக் குறித்து மகிழ்ந்துபோயினார்.

பிறகு பரமதத்தன் வியாபார விடயங்களை முடித்துக்கொண்டு, உணவு கொள்வதற்காக வழக்கம் போல நடுப்பகலிலே வீட்டிற்கு வந்தான். கற்பரசியாராகிய புனிதவதியார் தம்முடைய கணவனைக் கண்டதும் முகமலர்ந்து அவனை அன்போடு வரவேற்று நல்ல நீரிலே ஸ்நானஞ் செய்வித்தார். (இன்னும் வரும்.)

இரஞ்சிதம்

[ஸ்ரீமான் ஆ. இராமசாமி முதலியார், பி. ஏ.]

மூன்றும் அத்தியாயம்

சோம்பேறிகளுக்கெல்லாம் அதிபதியான மதன கோபன் ஒருநாட் சாயங்காலம் தன்னுடைய மாளிகையின் மேன்மாடியிலுள்ள கூடத்தில் கையிற் சுருட்டொன்றைப் பிடித்துக்கொண்டு சோபாவி லமர்ந்திருக்க, அவனுடைய நண்பர்களிற் சிலர் அவனுக்கு எதிர்புறத்தில் விரிக்கப் பட்டிருந்த கம்பளத்தின்மீது உட்கார்ந்திருந்தனர். அங்கிருந்தவர்களிற் கோபால பிள்ளையு மொருவன். தன் தந்தையால் தேடி வைக்கப்பட்டிருந்த அவ்வளவு ஆஸ்தியையும் மதனகோபன் துர்வினியோகஞ் செய்துவிட்டான். அவன் நுழையாத தாசிவீடு மதுரையில் ஒன்றேனு மில்லை. செல்வச் செருக்கால் அவ்வாறு ஆடினன். கையிலிருந்தன வெல்லாவற்றையுஞ் செலவழித்தான். ஒரு வேளை சாப்பாட்டிற்குங் கூடத் திண்டாட்டம் போடும் நிலைமைக்கு வந்தான். இவனை நம்பி ஒரு தம்படி கடனைக் கொடுப்போர் அவ்வூரில் ஒருவருமில்லை. இவ்விழிவான நிலைமைக்கு வந்தபின்னும் துன்மார்க்கத்தை விட்டு நீங்கி நல்வழியைக் கைக்கொள்ளுவோமென்ற எண்ணம் அவனுக்குண்டாக வில்லை. ஒவ்வொருவரும் தத்தம் குணத்திற்கும் புத்திக்கும் தகுதியாமாறு ஜீவனோபாயத்தைத் தேடிக் கையாண்டு வருவதுபோல் நம் மதன கோபனும் தனக்குப் பொருத்தமான ஒரு வழியைத் தேடிக்கொண்டான். அது யாதென்பது பின் வருவனவற்றால் விளக்கமுறும்.

சோபாவில் சாய்ந்து கொண்டிருந்த மதன கோபன் நிமிர்ந்துட்கார்ந்து "நண்பர்களே! இன்று இங்கு நம் மீட்டிங் நடக்குஞ் செய்தியறிந்திருந்தும் நம்மவர்களில் அநேகர் இன்னும் வரவில்லை. காரண மின்னதென்பதும் விளங்கவில்லை. நிற்க, நாமெல்லோரும் தாசிகளாற் கெட்டவர்கள். எவர்களால் நாம் இந்த நிலைமைக்கு வந்தோமோ அவர்களுடைய உதவியைக்கொண்டே நாம் வாழ்வதென்னும் வைராக்கியத்தைக் கொண்டிருக்கிறோம். நம்மை யறியாமல் இவ்வூரிலுள்ள தாசிகள் வீட்டிற்கு ஒருவன் போவதென்றால் முடியாது. அவ்விதமிருப்பினும் நம்முடைய வரவு நம் செலவிற்குக் கட்டிவருவதாகவில்லை. 'சரியான கேசுகள் அகப்படுவதில்லை. தக்க ஆசாமிகளுங் கிடைப்பதில்லை. எனினும் நாம் மிக்க ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இந்தத் தாசிகள் நம்மை ஏமாற்றி ஏதேனுஞ் செய்தாலுஞ் செய்து விடுவார்கள். இன்று ஏதேனும் வேட்டை கிடைக்குமென்றே என் மனதிற்குப்படுகிறது. அது யார், மாணிக்கம்பிள்ளையா? ஏன் இவ்வளவு நேரம்? வாரும்; உட்காரும். தம்முடைய முகத்தைப் பார்த்தால் ஏதோ விசேஷமிருப்பதுபோல் தெரிகிறது. ஏதாவது இருந்தாற் சொல்லலாம் என்றான்.

மாணி:—திண்டுக்கல்லிலிருந்து ஒரு செட்டி வந்திருக்கிறான். அவன் முதல் நெம்பர் வீதியிலிருக்கும் நம் பாக்கியத்தின் வீட்டிற்குச் சென்றான். அதைக் கவனித்துக் கொண்டிருந்து விட்டேன். அதனால்தான் நேரமாகிவிட்டது என்று சொன்னான்.

மதன:—இப்பொழுது நேரமானதைப்பற்றிக் கேள்வியில்லை. ஆசாமி தக்க பேர்வழிதானே. சரி, ஆகவே இன்றிரவு நமக்கு வேலையிருக்கிறது. தவிர, பட்டு நூல்காரர் தெருவில் யாரோ ஒரு மைனர் இருக்கிறதாகக் கேள்விப்பட்டேன். உங்களில் யாரேனும் அந்த ஆசாமியைப் பார்த்ததுண்டோ? என்று கேட்டான்.

கோபா:—இன்று காலையில் அந்த ஆளை நான் சந்தித்தேன். சந்தர்ப்பம் சரியாக இல்லை என்றான்.

மதன:—தம்முடைய கண்ணுக்குக் கிடைத்த ஆள் உருப்படப் போகிறானா? இல்லை. இனி நான் அதைப்பற்றிக் கவனிக்க வேண்டியதில்லை. சொல்லவும் வேண்டியதில்லை. இது நிற்க; நமது இரத்தினத்தின் சமாசாரம் எவ்வளவு தூரமிருக்கிறது என்று கேட்டான்.

கோபா:-அம்புஜத்தின் வீட்டைவிட்டு வெளியில் வருகிறது கிடையாது. வியாபார விஷயத்தை நான்தான் கவனித்து வருகிறேன், நம்முடைய ஆட்கள்தான் வேலை செய்கிறார்கள். நல்ல வரும்படி கிடைக்கும்போ லிருக்கிறது. நாம் அந்த வியாபாரத்தைச் சரிவர நடத்தினாலே போதுமென்று நினைக்கிறேன் என்று சொன்னான்.

மதன:—ஓகோ! புத்தி கெட்டுவிட்டாற்போலிருக்கிறதே. முதலில்லா வியாபாரமும் கஷ்டமில்லா வரும்படியும் நம்முடைய கொள்கையாயிருக்க, இவ்வியாபாரத் தொல்லை நமக்கெதற்கு.?

ஏமுற் றவரினு மேழை தமியனாய்ப் பல்லார் பகைகொள் பவன்.

கூடிய சீக்கிரத்தில் கடையை மூடுவதற்கான வழியைத் தேடுங்கள். என்ன? நான் சொல்வதின் கருத்தை யறிந்துகொண்டீர்களா? என்று கேட்டான்.

கோபா:—தெரிந்து கொண்டேன். தங்கள் சித்தம் போலவே முடிக்கிறேன், எனக் கூறினான்.

மதன:—சரி; இனி மீட்டிங் கலையலாம். மாணிக்கம்பிள்ளை! இன்றிரவு எல்லாம் தயார் செய்து வைத்திருக்கவேண்டியது உம்முடைய கடமை என்று சொல்லி எழுந்தான். மற்றவர்களும் எழுந்து ஒவ்வொருவராக விடைபெற்றுக் கொண்டு சென்றனர்.

எல்லோரும் சென்றபின் மதனகோபன் தனியாக உட்கார்ந்துகொண்டு பின்வருமாறு சிந்திக்கலானான். இந்தச் சிறுக்கி இரஞ்சிதத்திற்கு இவ்வளவு தூரமாகியும், இன்னும் அவன்மீது தானே அவளுடைய எண்ணம் போகிறது! அவளுடைய செய்கையை நோக்குமிடத்து நாம் செய்தன வெல்லாவற்றையும் கெடுத்துவிடுவாள் போலன்றோ இருக்கிறது. இரத்தின மிருக்கு மிடந் தெரிந்தால் அங்கேயே செல்லுவாள் போலுமிருக்கிறது. இனி இதற்கென்னசெய்வது?(யோசிக்கிறான்) ஆம் அவளை எவ்விதமேனும் இந்த ஊரைவிட்டு நீக்கவேண்டும். அதற்கும் வழியிருக்கிறது என்று எதையோ நினைத்துக்கொண்டு எழுந்து வெளியிற் சென்றான்.

அன்றிரவு சுமார் மணி பத்திருக்கும். அப்பொழுது மாணிக்கம் பிள்ளை கூறின முதல் நெம்பர் தெருவில் நாட்டுக்கோட்டைச் செட்டி ஒருவன் தலையில் முக்காடிட்டுக்கொண்டு அதி விரைவாகச் சென்றுகொண் டிருந்தான். அவனுக்கு எதிர்ப்புறமிருந்து வந்துகொண்டிருந்த மற்றொருவன் இவன் வருவதைப்பார்த்து நின்று யார் அங்கே வருகிறது? என்று அதட்டிக் கேட்டான். செட்டியார் பதிலளிக்காமல் வந்துகொண்டிருப்பதைக் கண்ட அம்மனிதன் அருகில் வந்ததும் செட்டியாரைப் பிடித்து நிறுத்தி முகத்தை நன்றாக உற்று நோக்கி, "ஆகா! செட்டியாரா! எங்கு இவ்வளவு விரைவாகச் செல்லுகின்றீர்? என்று கேட்டான்.

செட்:—நான் எங்குச் சென்றால் தான் உனக்கு என்ன? கையை விடு என்று சொல்லி விடுவித்துக்கொண்டு நடந்தான்.

மனிதன்:—(செட்டியார் வஸ்திரத்தைப்பிடித்து நிறுத்தி) என்னிடத்திலேயே தம்முடைய கைவரிசையைக் காண்பிக்கிறீரே. எனக்குக் கொடுக்கவேண்டிய பாக்கியைக் கொடுத்துவிட்டால் விட்டுவிடுகிறேன் என்று சொன்னான்.

செட்:—பாக்கியா! உன்னைக் கண்டதார்? என்னை யாரென்றுகாணும் நினைத்துக்கொண்டீர்? மரியாதையாக உன் வழிபார்த்துக்கொண்டு நீ போ என்றான்.

மனி:—இல்லாவிட்டால் என்று சொல்லும் பொழுது, எதிர்புறமிருந்து வந்துகொண்டிருந்த இன்னொருவன் யார் அங்கே என்று கூவினான். அப்பொழுது முதல் மனிதன், "என்ன செட்டியார்! மரியாதையாக எனக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்கிறாயா இல்லையா?" என்று சொல்லிக் கன்னத்தில் ஒரு அடி பலமாகக் கொடுத்தான்.

செட்:—ஐயையோ! இப்பாவி என்னைக் கொல்லுகிறானே என்று கத்தினான்.

இதற்குள் இரண்டாவது மனிதன் அங்கு வந்து "ஏன் இருவரும் சண்டைப் போட்டுக் கொள்ளுகிறீர்கள். இது யார்! திண்டுக்கல் செட்டியார் போலிருக்கிறதே! ஏனய்யா பாபம் அவரை அடித்தீர் என்று கேட்டான்.

முதல் மனிதன்.—சென்ற மாதத்தில் என்னிடம் ஐந்து ரூபாய் கடன் வாங்கிக்கொண்டு சென்றான். இப்பொழுது கேட்டால் உன்னை யார் பார்த்தது என்கிறான். செட்டிப் பயலுக்குக் கொஞ்சம் திமிரேறி யிருக்கிறாப்போலிருக்கிறது என்று சொல்லி மறபடியும் அடிக்கப்போனான்.

இரண்டாவது மனிதன்:—(தடுத்து) பொறு, பொறு. என்ன செட்டியாரே ஏதேனுங் கொடுக்கவேண்டியிருந்தால் தொலைத்துவிடுகிறதுதானே. அவனுடன் ஏன் வீண் சண்டைபோட்டுக்கொள்ளுகிறீர் என்று சமாதானஞ் செய்தான்.

செட்.—கடவுள் சாட்சியாக இந்த மனிதனை இதற்குமுன் நான் பார்த்ததில்லை. அபாண்டமான பொய்யைச் சொல்லுகிறான் என்றான்.

மு-ம:—நானா பொய் சொல்லுகிறேன். பொய் சொல்லி ஜீவிப்பது உங்கள் தொழிலல்லவோ. உன்னிடம் அவ்வளவு வார்த்தை என்ன? இப்பொழுது என்ன சொல்லுகிறாய்? உண்டா இல்லையா என்று கடுங்கோபத்துடன் கேட்டான்.

செட்:—இந்த மிரட்டுக்கெல்லாம் பயந்துவிடுவேன் என்று நினைக்காதே என்றான்.

மு-ம:—செட்டியாருடைய குடிமியைப் பிடித்

துக் கீழே தள்ளி முதுகில் ஒரு குத்துவைத்தான்.

சேட்:—ஐயையோ! இந்த அநியாயமுண்டா என்று கத்தினன்.

இ-ம:—(இருவரையும் விலக்கிவிட்டு) செட்டியாரே! உமக்குக் கொஞ்சங்கூடப் புத்தியில்லே. ஏனே வீணுக உம்முடைய மானத்தைக் கெடுத்துக் கொள்ளுகிறீர். அவனுக்குக் கொடுக்கவேண்டியதை எறிந்து விட்டால் அவன் பேசாமற் போகிறான். நீரும் உம்முடைய வேலேக்குப் போகலாம். அவன் உமக்குக் கொடுத்திராவிடில் இவ்வளவு தூரம் வம்பு செய்வானு? பேசாமற் கொடுத்துவிடும் என்று சொன்னன்.

சேட்:—(வேறு மார்க்கமொன்றுந் தோன்ருமல்) சட்டைப் பையிலிருந்து ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துக்கொடுத்தான்.

மு-ம. வாங்கிக்கொண்டு மறுவார்த்தை பேசாமற் போய்விட்டான்.

செட்டியாரும் நடக்கலுற்ருர். இரண்டாவது மனிதன் "என்ன செட்டியாரே! பேசாமற் போகின்றீரே. எனக் கொன்றுமில்லேயோ" என்று கேட்க,செட்டியார், "இது ஏது பெருத்த சங்கடமாய் முடிந்தது; இவனுக் கில்லேயென்ருல் இவனும் அடித்தாலும் அடிப்பான்" என்று நினைத்தும் அவனுக்கு ஐந்து ரூபாய் கொடுத்து விட்டுச் செல்லலுற்ருன்.

இ-ம:—செட்டியாரே! தாம் எங்குச் செல்கின்றீர் என்று பின்தொடர்ந்துவந்து கேட்டான்.

சேட் (சனி இன்னும் விட்டபாடில்லே போலிருக்கிறது என நினைத்து) நான் எங்கு போனல் என்ன? உன் வழியைப் பார்த்துக் கொண்டு நீ போயேன் என்று சொன்னன்.

இ-ம:—அதற்காக அல்ல செட்டியாரே! தாம் இன்ன காரியமாகத்தான் போகிறீர்களென்பது தெரியும். நல்ல இடமாகக் காண்பிக்கலாமென்று பார்த்தேன் என்ருன்.

சேட்:—குற்றமில்லே. தாம் செல்லலா மென்ருன்.

இ-ம:—சரி அவ்விதமானல் தமக்குத் துணையாகவாவது வருகிறேன். போக்கிரிகளிருக்குமிடம் என்று சொன்னன்.

செட்டியாரும் அதற்குச் சம்மதிக்க இருவரும் கொஞ்சதூரஞ் சென்றனர். "இங்குதான் நான் செல்லவேண்டு"மென்று சொல்லிவிட்டு மாணிக்கம் பிள்ளே கூறின பாக்கியத்தின் வீட்டுக் கதவைச் செட்டியார் தட்டினன். கதவும் உடனே திறக்கப்படச் செட்டியார் உள்ளே சென்ருன்; மறுபடியும் கதவு சாத்தப்பட்டது.

பாக்கியமென்னும் தாசி செட்டியாரை அழைத்துக் கொண்டு போய்க் கட்டிலின் மீதிருத்தித் தாம்பூலம் வைத்தாள். செட்டியாரும் சந்தோஷமாகப் போட்டுக் கொண்டபின் இருவரும் வேடிக்கையாகக் கொஞ்சநேரம் வார்த்தையாடிக் கொண்டிருந்தனர். அச்சமயம் "பாக்கியம், பாக்கியம்" என்று கூவிக்கொண்டே கதவை யாரோ தட்டவும், தாசி கையைப் பிசைந்துகொண்டு கால்கள் நடுங்க, "ஐயோ, இனி என்ன செய்வேன்? என்னைக் குத்தகையாக வைத்துக்கொண்டிருக்கிறவர் வந்துவிட்டாரே. அவர் ஊரிலில்லேயென்று நினைத்தல்லவோ உமக்குச் சம்மதித்து விட்டேன். சரி இன்றுடன் என் உயிர் ஒழிந்தது. ஐயோ பாவம். உம்மைக்கண்டால் இலேசில் விடமாட்டாரே. நீர் தப்பித்துப் போவதற்கும் வழியில்லேயே என்று சொல்ல, மறுபடியும் பலமாகக் கதவு தட்டப்பட "இதோ வந்துவிட்டேன்" என்று கூறி, "செட்டியாரே என்னசெய்யப் போகின்றீர்" எனக் கேட்க, செட்டியார், "என்னை எவ்விதமேனும் தப்புவித்து விட்டால் ஐந்து ரூபாய் அதிகமாகக் கொடுக்கிறேன்" என்று சொல்லி நமஸ்கரித்தான். "என்னமோ நான் உறுதியாகச் சொல்லமாட்டேன். என் பின்னலேயே வாரும், கதவைத் திறந்து அவர் உள்ளே வந்தவுடன் நீர் வெளியிற் சென்றுவிடும். பிறகு உம்முடைய அதிர்ஷ்டம் எவ்வாறிருக்கிறதோ" என்று சொல்லிவிட்டு விளக்கைக் கையிலெடுத்துக்கொண்டு வந்து கதவைத் திறந்தாள். செட்டியார் கதவிற்குப் பின்னல் மறைந்தான். வந்த புதுமனிதன் "ஏண்டி! நான் இவ்வளவு தூரம் கத்திக் கொண்டும் உன் காதில் விழவில்லேயே, நட; உன் கொழுப்பை அடக்குகிறேன்" என்று சொல்லித் தானே கதவைச் சாத்தினன். செட்டியார் பாடு திண்டாட்டமாகி விட்டது. புது மனிதனும் அவனேப் பார்த்துவிட்டான். "ஆகா! அப்படியா சமாச்சாரம் ஏண்டி சிறுக்கி! இந்த வேலேயும் நீ செய்கிருயா?" என்று சொல்லிக் கன்னத்தில் பளீரென்று ஓரறை அறைந்தான். இதைப் பார்த்ததே செட்டியாருடைய பாதி உயிர் போய்விட்டது. "இவ்வளவு துணிகரமாக இந்த வீட்டில் நுழைந்த நீயாரடா" என்று செட்டியாரைப் பார்க்க, கைகால்கள் நடுக்க

தன்றுணை யின்ருற் பகையிரண்டாற் ருனெருவ னின்றுணையாக் கொள்கவற்றி னென்று.

முற்று வாய் குளற, "ஐயா! நான் அறியாமல் வந்துவிட்டேன். தயவுசெய்து என்னை மன்னிக்கவேண்டும்" என்று செட்டியார் சொல்லி நமஸ்கரித்தான். இந்தக் கள்ளக் கும்பிடுபோடும் பல்லோரை நான் பார்த்திருக்கிறேன்காணும். இருவரும் உள்ளே வாருங்கள்" என்று சொல்லிக் கைகளைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய் இருவரையும் நிறுத்திவிட்டுத் தான் கட்டிலின்மீது உட்கார்ந்துகொண்டான்.

புதுமனிதன்:—"ஏண்டி! ராஸ்கோல், இந்த வேலையையும் கத்துக் கொண்டிருக்கிறாயா? ஏண்டி பேசாமலிருக்கிறாய்?" என்று சொல்லிப் பல்லைக் கடித்துக்கொண்டு அங்கிருந்த பிரம்பால் நான்கு ஐந்தடி அடித்தான்.

பாக்கியம்:—"ஐயோ, சுவாமி! என்னை ஏன் வீணாக அடிக்கிறீர்கள். எனக்கொன்றுந் தெரியாது. தங்களுக்காகக் கதவைத் திறந்து வைத்திருந்தேன். இவனுடைய அகங்காரம் ஒருவரையுங் கேட்காமல் உள்ளே நுழைந்து கதவைத் தாளிட்டுக் கொண்டுவந்து என்னிடந் தொந்தரவு செய்தான். அதற்குள் தாங்கள் வந்துவிட்டீர்கள்" என்று சொல்லி அழுதாள்.

புதுமனிதன்:—(நாகம்போற் சீறிச் செட்டியாருடைய காதுகளைப் பிடித்துத் திருகிக் கன்னத்திலறைந்து குனியவைத்து முதுகில் முழங்கையாலூனிக் கீழேதள்ளி இரண்டு உதையுதைத்து) ஏண்டா, செட்டிப்பயலே! ஆண்பிள்ளைகளில்லாத வீடுபார்த்து நுழைவது உங்களுடைய ஜாதித் தொழிலோ? காமாட்டி நாயே. என்னடா பார்க்கிறாய், என்று மறுபடியும் அடிக்கப்போனான்.

செட்:—(தான் என்ன சொன்னாலும் நம்பிக்கையேற்படா தென்பதையறிந்து மண்டியிட்டு நமஸ்கரித்து) ஐயா! நான் என் அறிவீனத்தால் இக்காரியம் செய்துவிட்டேன். தயவு செய்து தாம் என்னை மன்னிக்கவேண்டும் என்று கெஞ்சிக் கேட்டான்.

பு-ம:—நீ செய்த காரியத்திற்கு உன்னை மன்னிப்பதாவது; விடுவதாவதுண்டா? உனக்கு மரியாதை இத்துடன் தீர்ந்து விட்டதென்று நினைத்துக் கொண்டாயா? இன்னுமென்ன செய்கிறேன் பார். அடி! தெருவில் நம்ம பையன் இருக்கிறான். கூட்டிக்கொண்டுவா என்று சொல்ல, பாக்கியம் வெளியிற் சென்றாள்.

செட்:—(கும்பிட்டு) "தாம் என்ன செய்யச் சொன்னாலும் செய்கிறேன். இந்த ஒரு தடவை என்னை மன்னிக்கவேண்டுகிறேன்" என மன்றாடினான்.

வெளியிற்சென்ற பாக்கியம் பருத்துத்திரண்ட தேகத்தையுடைய ஒரு மனிதனைக் கூட்டிக் கொண்டு அறைக்குள் வந்தாள்.

பு-ம:—(அவனைப்பார்த்து) "கருப்பண்ணா! இந்தச் செட்டிப்பயல் நாமில்லாத வேளையில் இங்கு வந்திருக்கிறான். அவனைக் கொஞ்சம் விசாரி" என்று சொன்னான்.

கருப்:—ஆகா! கருப்பண்ணசாமி இருக்கிறான் என்ற பயம் கொஞ்சமேனுமில்லாமல் இவன் இந்த வீட்டில் நுழைந்தானா என்று கூறிச் செட்டியாருடைய இடுப்பில் ஒரு உதைவைத்தான். செட்டியார், ஐயோ, என்று சுவற்றின் மீது விழுந்து இடுப்பைப் பிடித்துக்கொண்டழுதான். மறுபடியும் ஒரு உதை வைத்தான்.

செட்:—ஐயா, சாமி! ஏன் என்னை வீணாக இம்சிக்கிறீர்கள். நான் செய்த குற்றத்திற்குத் தண்டனையாக என்ன செய்யச் சொன்னாலும் செய்வதற்குத் தயாராக விருக்கிறேன். வீணாக என்னைக் கொன்றுவிடுவதில் உங்களுக்குண்டாகும் பலன் என்ன என்றுரைத்தான்.

பு-ம:—கருப்பண்ணா! பொறு. ஏண்டா செட்டி! நான் சொல்லும் விதம் செய்கிறாயா! என்று கேட்டான்.

செட்:—அவ்விதமே செய்கிறேன் என,

பு-ம:—உன்னிடத்தில் எவ்வளவு ரூபாய் இருக்கிறது. அதை என்னிடத்தில் கொடு என்றான்.

செட்:—என்னிடமிருப்பது இவ்வளவுதான் என்று இரண்டு ஐந்து ரூபாய் நோட்டுகளைக் கொடுத்தான்.

பு-ம:—செட்டிகளை நம்பக்கூடாது. கருப்பண்ணா சோதித்துப் பார் என்று கட்டளையிட, அவனும் அவ்விதமே செய்து ஒன்றுமில்லை என்று கண்டுகொண்டபின் உன் கடுக்கனையும் மோதிரத்தையுங் கழட்டிக்கொடு என்று சொல்லச் செட்டியார் மறு வார்த்தையின்றிக் கொடுத்து விட்டான்.

செட்:—"ஐயா! இனி எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்" என்று கேட்டான்.

பு-ம:—"ஏண்டா. இன்னும் மரியாதை வேண்டுமென்கிறாயா? அல்லது நம் எண்ணம் போல் நடக்கிறாயா" என்று கோபாவேசத்துடன் கேட்டான்.

சேட் :—(பயத்தால் நடுக்கமுற்று) தங்கள் இஷ்டம்போற் செய்கிறேன் என்றான்.

பு-ம :—இப்பொழுது நம்மிடத்தில் ஐந்நூறு ரூபாய் வாங்கிக்கொண்டதாக நீ ஒரு பிராமிசரி நோட்டு எழுதித் தரவேண்டும். என்னடா சொல்லுகிறாய் ? என்று கேட்க,

சேட் :—என்ன ஐயா ! ஆனாலும் இந்த அநியாய முண்டா ? தெய்வந்தான் பொறுக்குமா ? என்றான்.

பு-ம :—செட்டிப்பயலுக்குத் தெய்வமொரு கேடு. உங்களுடைய தெய்வம் ஒருவருமில்லா வீட்டில் நுழைந்து பெண்களைத் தொந்திரவு செய்யச் சொல்லுகிறதோ ? என்று சொல்லி கருப்பண்ணனைப் பார்த்தான்.

இரக்கமென்பதைத் தினைத்துணையுங் கொண்டிலாக் கருப்பண்ணன், செட்டியாருடைய முதுகைப் பார்த்துதைக்க மண்ணைக் கவ்விக்கொண்டு கீழே விழுந்த செட்டியார் மூக்கிலும் வாயிலும் உதிரம் வடிய எழுந்துட்கார்ந்து, "ஐயா தம் இஷ்டம்போல் எழுதித் தருகிறேன்" என்றான்.

பு-ம :—"புத்தி வந்ததா ? இப்பொழுது ஆயிரம் ரூபாய்க்கு எழுதித் தரவேண்டும் என்ன சொல்லுகிறாய்" என்று கேட்டான்.

செட்டியார் அதற்குச் சம்மதிக்கக் கருப்பண்ணன் அங்கிருந்த மேஜையைத் திறந்து மசிக்கூடு பேனா காகிதம் இரண்டு அணா ஸ்டாம்பு இவைகளை எடுத்துச் செட்டியாரிடம் கொடுத்தான். அவனும் அவர்கள் சொன்னவிதமே எழுதி ஸ்டாம்பு ஒட்டிக் கையொப்பம் வைத்துக்கொடுத்தான். கருப்பண்ணன் சாட்சி போட்டான். பாக்கியம் வெளியிற் சென்று மற்றொருவனை யழைத்துவர அவன் ஒரு சாட்சி கையொப்பம் வைத்தான்.

பு-ம:—செட்டியாரே! நாளை மறுதினம் உம்முடைய வீட்டிற்குக் கருப்பண்ணனை அனுப்புவேன். மறுவார்த்தை பேசாமல் ஆயிரம் ரூபாயைக் கொடுத்துப் பிராமிசரி நோட்டை வாபசு வாங்கிக் கிழித்தெறிந்துவிட வேண்டியது. நம்முடைய ஊர்தானே இவர்கள் என்ன செய்யமுடியும், போலீஸாருக்குத் தெரிவித்து விடுவோம் என்று ஏதேனுங் கெட்ட எண்ணங்கொண்டு இவனுக்குத் தொந்திரவு நேரிடும்படி செய்வாயானால் அப்புறம் உனக்கு என்ன நடக்குமென்று நான் இப்பொழுது சொல்லமாட்டேன். திண்டுக்கல் இங்கிருந்து மிகத்தூரமன்று. நமக்குத் தெரியாத போலீசார் அங்கு கிடையாது. நம்மால் முடியாத காரியமொன்றுமில்லை. பகற் கொள்ளையடித்தாலும் அடிப்போம். ஆதலால் நாம் சொன்னவாறு செய்வாயானால் உன்னுடைய மரியாதை நிலைக்கும். என்னடா பேசாமல் நிற்கிறாய் ?" என்று அதட்டினான்.

சேட்:—"நான் சொல்வதற்கென்ன விருக்கிறது. தங்கள் இஷ்டம் போலவே செய்கிறேன். இனி எனக்கு உத்தரவுதானே" என்று கேட்டான்.

பு-ம:—"பொறு பொறு, இவளுக்கு என்ன கொடுப்பதாகப் பேசினாய் ?" என்று கேட்டான்.

சேட்:—"ஐந்து கொடுப்பதாகச் சொன்னேன்" என்றான்.

பாக்:—"இன்னுமைந்து யார் கொடுப்பது" என்று கேட்டாள்.

பு-ம:—ஏதுகாணும், தாசி வீட்டிலுங் கூடப் பேரம் பேசுகிறாய்போலிருக்கிறது. சரி, நாளைய தினம் இந்தப் பத்து ரூபாயையுஞ் சேர்த்தனுப்பும். ஜாக்கிரதை. இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு வந்தீர். சும்மா போகக் கூடாது. இன்றிரவு இங்கு தங்கிப்போம். பாக்கியம்! செட்டியாருக்கு வேண்டியதைச் செய்" என்று சொல்லி மற்றிருவரையும் அழைத்துக்கொண்டு சென்றுவிட்டான்.

வாசிக்கும் நேயர்களே ! இந்தப் புது மனிதன் யாவனோ என்று சந்தேகப் படாதீர்கள். நம் மதனகோபனே இவ்வளவு வேலை செய்தவன்.

முற்கூறின விஷயங்கள் நடந்த மறுநாள் காலை சுமார் ஆறுமணிக்கு இருபது அல்லது ஒன்றிரண்டதிகமென மதிக்கத் தக்க வயதுடைய வாலிபனொருவன் நன்றாகச் சலவை செய்த வஸ்திரத்தை இடையிற் கட்டிக்கொண்டும், வெள்ளை அங்கியைப் போட்டுக்கொண்டும் தலையிற் பட்டங்க வஸ்திரத்தை அழகாகக் கட்டிக்கொண்டும் கையிற் சிறு பிரம்பொன்றைப் பிடித்துக்கொண்டும் வைகையாற்றின் கரையோரத்தில் கொஞ்ச தூரம் நடந்துசென்று காலைக்கடனை முடித்துக்கொண்டு ஆற்று நீரில் கைகால் முகம் சுத்திசெய்துக் கொண்டிருந்தான். இவைகளை யெல்லாம் சற்று தூரத்தில் நின்று கவனித்துக்கொண்டிருந்த நமது கோபால பிள்ளை அவ் வாலிபனிருக்கு மிடத்திற்குக் கொஞ்ச தூரத்திலுட்கார்ந்து தானும் தந்த சுத்தி செய்த பின் வாலிபன் புறப்படும் சமயம் அப்பொழுது

நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க மென்மை பகைவ ரகத்து.

தான் அவனைப் பார்த்தவன்போற் பாசாங்கு செய்து "குட்மார்னிங் பிரதர்! சிறிது நாட்களாகத் தாம் இங்கு காணப்படுகிறதில்லையே. ஒரு சமயம் ஊரிலில்லையோ?" என்று கேட்டுக்கொண்டே வாலிபனைப் பின்தொடர்ந்தான்.

வாலிபன்:—"ஆம்: சிறிது நாட்களாக ஊரிலில்லை. தாம் யாரோ தெரியவில்லையே" என்றான்.

கோபால பிள்ளை:—"என்ன பிரதர்! அதற்குள்ளாக மறந்துவிட்டீர் தினந்தோறும் தம்மை இங்குச் சந்திக்கிறேன். "கிருஷ்ண லீலை" என்னும் நாடகம் நடந்தபொழுது தங்களுக்குப் பக்கத்தில்தான் நான் உட்கார்ந்திருந்தேன். அப்பொழுது நாமிருவரும் ஏதோதோ பேசினோம். தவிர, தினந்தோறும் காபி கிளப்பில் தம்மைச் சந்திக்கிறேன். அதற்குமுன் ஒரு நாள் கோவிலில் தம்மைப் பார்த்தேன். அங்கு தங்களுடைய பெயரை அறிந்துகொண்டேன். தம்முடைய பெயர் இராஜாராம் அல்லவா?" என்று கேட்டான்.

வாலி:—என்னுடைய நாமதேயம் அதுவேயாகும் எனினும் தங்களை இதற்குமுன் பார்த்த நினைவு எனக்குக் கொஞ்சங் கூடவில்லை. இதனால் தாம் சொல்வதில் சந்தேக முறுகிறேனென்றாவதும் தம்மைக் கேவலமாக நினைக்கிறேனென்றாவதும் தாம் எண்ணிக் கொள்ளக்கூடாது. தாம் சொன்னவை யனைத்தும் உண்மையாகவே யிருக்கலாம். எனக்குக் கொஞ்சம் மறப்பதிகம். அதற்காக என்னை மன்னிக்கவேண்டும். தம்முடைய நாமதேயமென்னமோ?"என்று கேட்டான்.

கோபால:—என் பெயர் கோபால். எங்கள் வீடு மாசி வீதியிலிருக்கிறது. கடைத்தெருவில் "மாணிக்க விலாசம்" என்ற மளிகை எங்களுடையதுதான். என் தந்தை இறந்து சுமார் ஒரு வருஷமாகிறது. நான் அவருக்கு ஒரே மகன். குடும்பத்தையும் கவனிக்கவேண்டும்; வியாபாரத்தையும் நடத்திக்கொள்ள வேண்டும்; கழனிகளையும் பார்வையிட வேண்டும். போதாக் குறைக்கு என் தந்தை நடத்தி வைத்துப்போன லேவாதேவிக் கணக்குகளையுங் கவனிக்க வேண்டியவனாயிருக்கிறேன். உதவிக்குத் தக்க ஆள்வேண்டுமென்றால் கிடைப்பதாயில்லை. நம்ம ஊரோ எவனையும் நம்புவதற்கில்லை. நல்லவன்போல் பேசுகிறான். இரண்டு நாட்கள் ஒழுங்காக இருக்கிறான். மறுநாள் கிடைத்ததை அமுக்கிக்கொண்டு ஓடிவிடுகிறான். இத்தகையோரிருக்கும் ஊராக இருக்கிறது நம்ம ஊர். இரண்டு நாட்கள் உயிருடன் இருந்தாலும் சந்தோஷமாக இருந்து இறக்க வேண்டுமென்பது என்னுடைய கொள்கை. அதற்கு மீனாட்சி விடுவதில்லை. வீட்டிலும் எனக்குச் சந்தோஷமென்பது கிடையாது. எனக்குப் பிரியமில்லாத பெண்ணைப் பிடித்து விவாகஞ் செய்துவிட்டார் என் தந்தை. வெளியில் வந்தால் வியாபாரத் தொல்லை. எனக்கு அத்தியந்த நண்பர் ஒருவரிருந்தார். அவரால் சற்று நேரமாவது சந்தோஷத்தை யடைவதா யிருந்தேன். அவரும் இந்த ஒரு மாதத்திற்குமுன் இறந்துவிட்டார். என்ன உலகம் பிரதர் இது! சந்தோஷமில்லா வாழ்க்கை. ஒவ்வொரு சமயத்தில் அவ்விதமே யோசித்துப் பார்த்தால் காவிவேஷ்டி தரித்துக்கொண்டு சந்நியாசியாகிவிடலாம் போலிருக்கிறது. பிரதர்! என்னடா இவன், வாயில்வந்ததை எல்லாம் உளறிக்கொட்டுகிறான் என்று நினைக்கக்கூடாது. நமக்குத் தெரிந்தவர்களிடம் நம் குறைகளைச் சொல்லிக் கொண்டால் மனதிற்கு ஒருவிதமான தேறுதல். தங்களுக்கு மனவருத்தத்தை உண்டாக்கியிருந்தால் என்னை மன்னிக்கவேண்டும். நான் இதுகாறும் ஒருவரிடத்திலும் இவ்வளவு தாராளமாகப் பேசினதில்லை என்னை யறியாமலே இவ்வளவு பேசிவிட்டேன் என்று சொன்னான்.

இராஜாராம்:—"அதனால் குற்றமில்லை. எனக்கும் யாதொரு மனவருத்தமில்லை" என்று சொன்னான்.

இவ்வாறு இருவரும் பேசிக்கொண்டு மங்கம்மாள் சத்திரத்திற்குப் பக்கத்தில் வந்துவிட்டார்கள். அப்பொழுது கோபாலபிள்ளை "பிரதர்! சத்திரத்திலிருக்கும் காபிகிளப்பில் தாம் ஒரு சமயம் சாப்பிட்டிருக்கமாட்டீர். பஸ்டு கிளாசாக இருக்கிறது பிரதர். வேண்டுமானால் டேஸ்ட் செய்து பாருங்கள். வாரும் போவோம்" என்று இராஜாராமை யழைத்தான்.

இரா:—நான் இங்குச் சாப்பிட்டதில்லை. நான் மணியும் கொண்டு வரவில்லை. தாம் வேண்டுமென்றால் சென்று சாப்பிடலாம். நான் போய் வருகிறேன் என்று சொல்லிப் புறப்படவே,

கோபா:—(தடுத்து) "என்ன பிரதர்! இவ்விதஞ் சொல்லுகிறீர். மணியில்லாவிட்டாலென்ன என்னிடமிருக்கிறது. வேண்டுமானால் தாம் வீடு

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும் பகைவர்கட் பட்ட செருக்கு.

சென்றபின் கொடுங்களேன். இன்று தாங்கள் கண்டிப்பாக என்னுடன் வந்து சாப்பிடவேண்டும்'' என்று சொல்லிக் கையைப் பிடித்திழுத்தான்.

இரா:—''எனக்காக இப்பொழுதுதாம் செலவு செய்யும் பணத்தைத் திருப்பித் தாம் வாங்கிக் கொள்வதாயிருந்தால் வருகிறேன்'' என்ருன்.

கோபா:—''என்ன பிரதர்! கண்டிஷன்போட்டுப் பேசுகிறீர். அவ்விதமே யாகட்டும் வாரும் என்று சொல்லியழைத்துப்போய் வேண்டுமான வற்றை வாங்கிச் சாப்பிட்டபின் பணத்தைக் கொடுத்துவிட்டு இராஜாராமுடன் வெளியில் வந்தான்.

பிறகு இருவரும் காபி ஒட்டல்களைப்பற்றிப் பேசிக்கொண்டே போனுர்கள். கடைசியாக இராஜாராம் வீட்டண்டை வந்தார்கள்.

இரா:—இதுதான் எங்கள் வீடு. தயவு செய்து தாங்கள் உள்ளே வரவேண்டுமென்று கூப்பிட்டான்.

கோபா:—பிரதர்! மன்னிக்கவேண்டும். நான் அப்படியே கடைக்குப் போக வேண்டியவன்; தங்களுடன் பேசிக்கொண்டு மறந்தாற்போல் இவ்வழியே வந்துவிட்டேன். நான் கடைக்குப் போய்விட்டு ஒரு மணி நேரத்திற்குள் வருகிறேன் என்று சொன்னுன்.

இரா:—''குற்றமில்லை. ஒரு ஐந்து நிமிஷந் தான்'' என்று சொல்லிக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டுபோய் மேல்மாடிக்குச் சென்று கூடத்திலிருந்த சோபாவில் உட்கார வைத்துத் தானும் ஒரு சாய்வு நாற்காலியிலுட்கார்ந்தான்.

கோபா:—கூடம் மிகவும் அலங்காரமாக விருக்கிறது பிரதர் என்று சொல்லி எழுந்து அங்கு மாட்டப்பட்டிருந்த படங்களை ஒவ்வொன்ருகப் பார்த்துக்கொண்டு வந்து ஒரு போடோ படத்தைப் பார்த்து நின்று ''என்ன பிரதர்! இந்த போடோவிலிருப்பவர் தமக்கு என்னவாக வேண்டும்?'' என்று கேட்டான்.

இரா:—என்னுடைய தந்தையின் போடோ அது என்று பதிலளித்தான்.

கோபா:—எனக்குத் தம்மை முதல் முதல் பார்த்ததிலிருந்து இந்த சந்தேகமுண்டு. கேட்க வேண்டு மென்றிருந்தும் மறந்து விட்டேன். ஆகவே தாம் மோகனதாஸுடைய குமாரர், என்ருன்.

இரா:—''என் தந்தையை உமக்கு எவ்விதம் தெரியும்.?'' என்று கேட்டான்.

கோபா:—அடிக்கடி என் தந்தையிடம் கடைக்கு வருவதைப் பார்த்திருக்கிறேன். உமக்குச் சகோதரர்கள் எவ்வளவு பிரதர்? என,

இரா:—நான் ஒருவன்தான் என்ருன்.

கோபா:—என்னைப்போலவே தாமும் என்று சொல்லிக்கொண்டே அங்கிருந்த மேஜையருகில் வந்து அதின்மீது வைத்திருந்த ஒரு புஸ்தகத்தை எடுத்துப்பார்த்து ''இன்னும் தாம் கலாசாலையிற் படிக்கிறீரா''? என்று கேட்டான்.

இரா:—பாடசாலைக்குச் சென்று ஒரு வருஷமாகிறது, நிறுத்திவிட்டேன் என்ருன்.

கோபா:—''தாங்கள் இன்னும் வாசிக்கலாமே. விவாவகமாகிவிட்டதா பிரதர் உங்களுக்கு'' என்று கேட்டான்.

இரா:—''இன்னுமில்லை'' என்ருன்.

கோபா:—பின் ஏன் நிறுத்தி விட்டீர்களோ படிப்பை, என்று இவ்விதம் பல்வேறு விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்க, மணி பத்தடித்ததும் ''என்ன பிரதர்! ஐந்து நிமிஷமென்று கூட்டி வந்தீர். மணி பத்தாகி விட்டது. நேரம் போனதே தெரியவில்லை. இப்படித்தான் பிரதர், நான் சிநேகிதருடன் பேசிக்கொண்டிருந்தால் பொழுது போவது தெரிகிறதில்லை. வேறு எந்த நினைவும் வருவதில்லை. பிரதர்! நான் சென்று வருகிறேன்'' என்று சொல்லிப் புறப்பட்டான்.

இரா:—இனித் தம்மைத் தடுப்பது சரியாக வில்லை. மறுபடியும் தங்களை எப்பொழுது பார்க்கலாம் என்று கேட்டான்.

கோபா:—நான் சாயங்காலம் இங்கு வருகிறேன். அப்படியே எங்காவது வாக்கிங்கு போகலாம் என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு சென்றுவிட்டான்.

அன்று மாலை சுமார் மூன்று மணிக்கு நாகரிக உடை அணிந்துக்கொண்டு கோபாலபிள்ளை இராஜாராம் வீட்டிற்கு வந்து மிகத் தாராளமாய் மேன்மாடிக்குச் சென்று இராஜாராமைக் கண்டு மாலைவந்தனம் ஆங்கிலத்தில் கூறிவிட்டுச் சோபாவிலுட்கார்ந்தான்.

இரா:—ஏது? நேரத்திலேயே புறப்பட்டு விட்ட மாதிரியிருக்கிறது இன்னும் வெய்யிலதிகமாக விருக்கிறதே என்ருன்.

கோபா:—பிரதர்! இன்று நமது நண்பரொரு

இளைதாக முண்மரங் கொல்க களையுநர் கைகொல்லுங் காழ்த்த விடத்து.

வர் வீட்டில் பாட்டுக்கச்சேரி. தங்களையும் அங்கு அழைத்துக்கொண்டு போகலாமென்று வந்தேன். மூன்றரை மணிக்கு ஆரம்பம் டிரஸ் செய்து கொள்ளுங்கள் போவோம்.

இரா:—(பாட்டுக்கச்சேரியில் விருப்பமுடையவனுதலின்) நான் வருவதில் ஒன்று மில்லை. அழைப்புப் பத்திரிகை வரவில்லையே யென்று யோசிக்கிறேன்.

கோபா:—அவர் தம்மை யறியாததால் உமக்குத் தெரிவிக்கவில்லை. அதனுல் குற்றமில்லை பிரதர், நான் உங்களிருவரையும் அறிமுகஞ் செய்து வைக்கிறேன். நேரமாகிறது, புறப்படுங்கள் என்று சொன்னுன்.

இராஜாராமும் அதற்கிணங்கி உயர்தர உடை தரித்துக்கொண்டு கோபால பிள்ளையுடன் வெளியிற் புறப்பட்டான். வழியில் காபி ஓட்டலில் கொஞ்சம் தாக சாந்தி செய்துகொண்டு சென்றுர்கள். நமது வாசகர்கள் முன்னுடியே பார்த்திருப்பதும் மதன கோபனின் சொந்தமானது மான மாளிகைக்கு இருவரும் போனுர்கள். தலை வாசலின்முன் நின்று கொண்டிருந்த மதன கோபன் இவர்களைப் பார்த்ததும் சற்று தூரம் எதிர்கொண்டுவந்து மாலைவந்தனங் கூறி இருவருக்கும் கைலாகு கொடுத்துக் கோபால பிள்ளையைப் பார்த்து "என் இவ்வளவு நேரம்? அழைப்புப்பத்திரிகை சரியான காலத்தில் வரவில்லை போலும். இந்த நண்பர் யார்?" என்று இராஜாராமைச் சுட்டிக் கேட்டான். கோபாலபிள்ளை இருவருக்கும் அறிமுகஞ் செய்துவிக்க, மதன கோபன் "நிரம்ப சந்தோஷம். இது சங்கதி முன்னுடியே தெரிந்திருந்தால் பத்திரிகை அனுப்பியிருப்பேன். மன்னிக்க வேண்டும் பிரதர்!" என்று சொல்லி இராஜாராமின் கையைப் பிடித்துக்கொண்டே உள்ளே சென்று அங்குட்கார்ந்து கொண்டிருந்த எல்லோருக்கும் முன்னதாகவும் பாடிக்கொண்டிருக்கும் பெண்ணிற்கு எதிர் புறமாகவும் இருவரையும் உட்காரவைத்தான். பாடகியும் இருவருக்கும் நமஸ்காரஞ் செய்தாள். மதனகோபனு மருகிலுட்கார்ந்து கொண்டான்.

அங்குப் பாடிக்கொண்டிருந்த பெண் அவ்வூர் பிரபல தாசிகளில் ஒருத்தியே யாவள். கண்டோர் மனதைக் கவரத்தக்க அழைகையும் முக வசீகரத்தையும் மதுரமான குரலுடன் சங்கீத ஞானத்தையும் பெற்றிருந்தாள். அக்கணிகை பாட்டுக்கச்சேரி சிறப்பாக நடந்தது. அங்கு வந்திருந்தோரெல்லாம் கர்ணுமிர்தத்தாற் களிப்புற்றனர். சிலர் தத்தமக்குத் தோன்றினவாறு அவளுக்குப் பரிசளித்தனர். அவளும் வழக்கம் போல் தனக்கு வெகுமதி யீந்தோர்க்குச் சந்தனம் பூசினுள், கோபால பிள்ளை அவளுக்கு ஐந்து ரூபாய் கொடுத்தான். இதைப் பார்த்த இராஜாராம் தன்னுடைய நிலைமைக்குத் தக்கவாறு பரிசளிப்பது தன் கடமையென்று கருதினவனுய்ப் பத்து ரூபாய் அளித்தான். தாசியும் சந்தனம் பூசினுள். அச்சமயம் அவனுக்குக் குதூகலமான ஒருவித உணர்ச்சியுண்டாயிற்று. பாட்டுக் கச்சேரி முடிந்தது கூட்டமும் கலைந்தது. கோபால பிள்ளையும் இராஜாராமும் மதனகோபனிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியில் வந்தார்கள். சற்றுநேரம் உலவி வரலாமென்று ஆற்றங்கரையே நோக்கிச் சென்றுர்கள். வழியில் 'டிராமா' நோட்டீசு கொடுத்துக் கொண்டு வருவதைக் கண்ட கோபால பிள்ளை, நோட்டீசை வாங்கிப் படித்துப் பார்த்து "பிரதர்! இன்று கண்டிப்பாக டிராமாவுக்குப் போகவேண்டும். ஆரிய கான சபையார் ஞானசௌந்தரி என்னும் நாடகத்தை நடிக்கப் போகிருர்கள். அனந்த நாராயண ஐயர் ஞான சௌந்தரி. இது அவர்களுடைய மாஸ்டர் பீஸ் (Master Piece) பிரதர்! என்ன சொல்லுகிறீர்?" என்று கேட்டான்.

இரா:—எனக்கும் இந்த நாடகத்தை இந்தக் கம்பெனியிற் பார்க்கவேண்டுமென்ற பிரிய மிருந்து கொண்டிருக்கிறது. இன்று நாடகத்துக்குப் போவோம் நானும் வருகிறேன், என்றுன்.

கோபா:—"பிரதர்! உங்களிடத்தில் ஒன்று சொல்லவேண்டும். அதனுல் வேறு விதமாக என்னை நினைத்து விடக்கூடாது. எனக்கு இந்த டிராமா பித்து கொஞ்சமதிக மென்றே சொல்ல வேண்டும். தினந்தோறும் டிக்கட் வாங்கிக் கொண்டு செல்வதென்றுல் பணச் செலவுடன் சிரமமுண்டாகிற தெனக் கருதி பிரீ டிக்கட் (Free Ticket) வாங்கிக்கொண்டேன். கம்பெனியார் இந்த ஊரைவிட்டுப் போகும்போது அவர்களுக்கு ஏதேனும் வெகுமதி செய்துவிடவேண்டும். என்ன பிரதர்! இந்த ஏற்பாடு தமக்கு எவ்விதம் தோன்றுகிறது? என்று கேட்டான்.

இரா:—இரண்டிலும் செலவென்னமோ வொன்றுதான். தம்முடைய ஏற்பாடு பெயரை நிலை நாட்டுவதாக விருக்கிறது. மேலும் கௌரவமாகவு மிருக்கிறது என்று சொன்னுன்.

கோபா:—"நன்றாகச் சொன்னீர். தமக்கும் இம்மாதிரி இன்று ஏற்பாடு செய்து விடுகிறேன்'' என்றான்.

இராஜாராமும் அதற்கிசைந்தான். இருவரும் ஆற்றங்கரையை யடைந்தவுடன் ஜனக் கூட்டமில்லாத தனியிடத்தில் உட்கார்ந்தனர். அப்பொழுது கோபாலபிள்ளை, "பிரதர், இன்றைய பாட்டுக் கச்சேரி எவ்வித மிருந்தது?'' என்று கேட்டான்.

இரா:—நல்ல சமயத்தில் நினைப்பூட்டினீர். "அந்தப் பெண் யார்? இந்த வூர்தானா?'' என வினவினான்.

கோபா:—"இவ்வூர்த் தாசிதான் அவள். உருப்படி எவ்வித மிருந்தது?'' என்றான்.

இரா:—"அழகிற் சிறந்தவ ளென்பதை எவரும் மறுக்கார். அவளைப் பற்றி தமக்கேதேனும் தெரியுமோ?'' என்று கேட்டான்.

கோபா:—"அவளைப் பற்றி எனக்கொன்றுந் தெரியாவிடினும் அறியவேண்டுமெனில் ஒரு நொடியில் அவளைப்பற்றிய எல்லா சங்கதியையும் தெரிந்து கொள்ளலாம். அதற்கெல்லாம் ஆசாமிகளிருக்கிறார்கள் பிரதர். தமக்கேதேனும் எண்ணமிருந்தாற் சொல்லும்'' என்று கேட்டான்.

இரா:—"இத்தகைய தாசிகளெல்லாம் 'ஸ்டாக்காக' ஒவ்வொரு ஆசாமிகளை வைத்துக்கொண்டிருப்பார்களே யன்றித் தம் குலத் தொழிலைச் செய்யமாட்டார்களே'' என்று சொன்னான்.

கோபா:—"தாம் கூறுவது உண்மையே. எனினும் நமக்கிஷ்டமிருக்குமானால் ஒரு தாசியை நம் வழித் திருப்புவது அசாத்தியமான காரியமன்று. பணத்தால் முடியாத காரியம் இவ்வுலகிலொன்றுமில்லை, பிரதர். தாம் அந்த வகையிற் சந்தேகப்படவேண்டியதில்லை. ஆனால் ஒரு விஷயம் முன்னாடியே கவனிக்கவேண்டி யிருக்கிறது. இவளைக் குத்தகையாக வைத்திருக்கக் கூடிய ஒரு ஆசாமியிருப்பான். அவனிடத்திலிருந்து பிரித்து இவளை நம் வசப்படுத்திவிட்டால் மறுபடியும் இவளைக் கைசோர விடாமற் காப்பாற்ற வேண்டிவரும்'' என்று சொன்னான்.

இரா:—"தாம் கூறுவது நிஜமே. நியாயமும் அதுவேயாகும்'' என்றான்.

கோபா:—"ஆகவே தமக்கு அந்தப் பெண்ணைக் குத்தகையாக நியமிக்கவேண்டுமென்ற இஷ்டம். சரி. மற்ற விஷயங்களை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். நாளை காலையில் முடிவுசெய்துவிட்டுத் தமக்குத் தெரிவிக்கிறேன். எழுந்திரும். போவோம். இனி போய் டிக்கட் விஷயமாகக் கொஞ்சம் ஏற்பாடு செய்யவேண்டும்'' என்று சொல்லி எழுந்தான்.

இருவரும் புறப்பட்டனர். சத்திரத்தருகில் வந்தவுடன் கோபால பிள்ளை, "பிரதர்! தாம் சென்று சாப்பிட்டுவிட்டுத் தயாராக விருங்கள். நான் சரியாக ஒன்பது மணிக்குத் தங்கள் வீட்டண்டை வருகிறேன்'' என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு நீங்கினான். இராஜாராமும் வீடுவந்து சேர்ந்து சீக்கிரத்தில் சாப்பிட்டுவிட்டு தன் புதிய நண்பனுடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டு மேன்மாடியில் உட்கார்ந்திருந்தான். மணி ஒன்பதடிக்கவும் கோச்சு வண்டியொன்று வீட்டண்டை வந்து நின்றது. அதிலிருந்து கோபாலபிள்ளை இறங்குவதைக் கண்டவுடன் இராஜாராம் மேல்மாடியிலிருந்து கீழே யிறங்கிவந்தான். பிறகு இருவரும் வண்டியிலமர்ந்துகொள்ள குதிரையும் வேகமாயோடிற்று. ஐந்து நிமிஷத்திற்குள் நாடகக் கொட்டகைக்கு வந்து விட்டார்கள் முன்னமேயே சொல்லியிருந்த பிரகாரம் கோபால பிள்ளை இராஜாராமுக்கு பிரீ டிக்கட்டு வாங்கிவந்திருந்தான். ஆகவே இருவரும் உடனே கொட்டகைக்குட் சென்று முதல் வகுப்பு நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டனர். நாடக மாரம்பிக்க அரை மணி நேரமிருந்தது. இவர்கள் உட்கார்ந்திருந்த வகுப்பு நாற்காலியொன்றில் மதனகோபன் வீட்டில் பாடின தாசியுமுட்கார்ந்திருந்தாள். ஆனால் இராஜாராம் இதைக் கவனிக்கவில்லை. கோபால பிள்ளை சுற்றுமுற்றும் பார்த்து, அப்பொழுதுதான் அவளைப் பார்த்தவன்போல அபிநயித்து, "பிரதர், கவனித்தீர்களா! அந்தப் பெண் இங்கு வந்திருக்கிறாள். நமக்கு நான்காவது சேரில் உட்கார்ந்திருக்கிறாள். சாடையாகப் பார்த்துக்கொள்ளும் அவள் சமீபத்திலுட்கார்ந்திருக்கும் ஆசாமி கொஞ்சம் சந்தேகப் பேர்வழி மாதிரி இருக்கிறான். எதற்கும் விஷயத்தை யறிந்து விடுகிறேன். என்னுடைய இடத்தைப் பார்த்துக்கொள்ளும்'' என்று சொல்லி விட்டு வெளியிற் சென்றவன், மறுபடியும் ஒரு நிமிஷத்தில் திருப்பி வந்து முன்னிருந்த இடத்திலுட்காராமல் அத் தாசியுடன் வந்திருந்தவன் உட்கார்ந்திருந்த நாற்காலிக்குப் பக்கத்தில் காலியாயிருந்த நாற்காலியி லுட்கார்ந்து

வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா மெலியார்மேன் மேக பகை.

கொண்டான். கொஞ்ச நேரம் அந்தப் பெண்ணைப் பார்ப்பதும் பிறகு கடைக்கண்ணால் இராஜாராமைப் பார்த்துப் புன்சிரிப்புச் சிரிப்பதுமாகவிருந்து கடைசியில் பெண்ணுடன் வந்திருந்தவனோடு பேசுவதாகத் தன் நண்பனுக்குக் காண்பித்துக் கொண்டான். இருவருஞ் சற்று நேரம் நிதானமாக வார்த்தை யாடினர். பின்பு இவர்களுடைய சம்பாஷணையில் அந்தத் தாசியும் கலந்துகொண்டாள். மூவருங் கலந்து கொஞ்ச நேரம் பேசியிருந்த பிறகு அந்தப் பெண் இராஜாராமைப் பார்த்தாள். அவளுடன் வந்திருந்தவனும் பார்த்தான். கோபால பிள்ளையுஞ் சிரித்துக்கொண்டு பார்த்துக் கண்ணைச் சிமிட்டினான். கடைசியில் அவர்களிடத்தில் ஏதோ முடிவு செய்துகொண்டவன்போல் காண்பித்துக்கொண்டு எழுந்துவந்து மலர்ந்த முகத்துடன் இராஜாராமருகிலுட்கார்ந்து, "பிரதர்! காரியம் முடிந்துவிட்டது. என் வார்த்தையைத் திரஸ்காரஞ் செய்யமாட்டீரென்ற மனவுறுதியால் தம்முடைய சம்மதமில்லாமலே அவர்களுடைய ஏற்பாடுகளுக்கு வாக்குக் கொடுத்துவிட்டு வந்தேன்" என்று சொன்னான்.

இரா:—"இவ்வளவு சீக்கிரத்தில் எவ்விதம் முடித்தீர்? என்னமோ என்னைப் பரிகாசஞ் செய்கிறீரென்றே சந்தேகிக்கிறேன்" என்றான்.

கோபா:—பிரதர்! நான் சொல்வது பொய்யோ மெய்யோ என்பதற்குத் தாம் அந்தப் பெண்ணைச் சற்றுபாரும் என்று சொல்லவே, இராஜாராமும் அப்பெண்ணைப் பார்க்க, அவள் இவனை நமஸ்கரித்துப் புன்முறுவல் பூத்தாள். "என்ன பிரதர்! இப்பொழுது நம்பிக்கைதானே" என்று கேட்டான்.

இரா:—"சரி பிரதர், நடந்த விஷயத்தைச் சொல்லுங்கள் கேட்போம்" என்று சொன்னான்.

கோபா:—நான் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தது சுமார் பதினைந்து நிமிஷமேயெனினும் அநேக விஷயங்களைக் கிரகித்துக்கொண்டேன். நாடகம் ஆரம்பிக்கிற சமயமாகி விட்டதால் சுருக்கமாகச் சங்கதியைச் சொல்லி முடிக்கிறேன். அவர்களிடத்தில் எவ்வாறு பேசவாரம்பித்தேன்; எவ்விதம் விஷயத்தைக் கலந்துகொண்டேன் என்பனவற்றைச் சாவதானமாக நாளையதினஞ் சொல்லுகிறேன். அவள் யாரோ ஒரு நாட்டுக்கோட்டைச் செட்டியிடத்திலிருக்கிறாளாம். அவளுடைய தமையன் விவாகத்திற்காக வேண்டி, அச்செட்டியிடம் இரண்டாயிரம் ரூபாய் கடன் வாங்கி யிருக்கிறாளாம். மேலும் அவள் இப்பொழுது அணிந்துகொண்டிருக்கும் வயிரத்தோடு அச் செட்டியுடையதாம். அதன் விலை இரண்டாயிரம் ரூபாயாம். இவளுக்கு அவனிடத்திலிருக்க இஷ்டமில்லையாம். அவனும் தனக்குச் சேரவேண்டிய ரூபாயையும் தோட்டையும் கொடுத்துவிட்டால் இவளுடைய இஷ்டம் போலிருக்கலா மென்கிறானாம். இப்பெண் கொஞ்சம் வார்த்தைக்குக் கட்டுப்பட்டவள் போலிருக்கிறது. வேறொருத்தியானால் வேலையைப் பார் என்று தன் இஷ்டம் போலிருந்து விடுவாள். இவள் அவ்வாறில்லை. நாலாயிரம் ரூபாய் தற்சமயம் வேண்டியிருக்கிறது என்றாள். நீ அதைப்பற்றி விசாரப்பட வேண்டியதில்லை. நாலாயிரமன்று பத்தாயிரம் வேண்டுமானாலுங் கூட என் சிநேகிதர் கொடுக்கத் தயாராயிருக்கிறார். ஆனால் நீ அவர் சொற்படி நடக்கவேண்டும். உன் குலத்தொழிலை உன் கனவிலும் நினைக்கக்கூடாது என்று சொன்னேன். அதற்கு அவள் இசைந்தாள். பாட்டுக் கச்சேரியில் தங்களைப் பார்த்தது முதல், தங்கள் மீது ஒரு விதமான பிரிய மேற்பட்டுவிட்டதாகவும் சொன்னாள். அவ்வாறு காரியத்தை முடித்துவிட்டேன். இனித் தங்களுடைய கருத்தை வெளியிட வேண்டியதுதான்" என்று சொன்னான்.

இரா:—"தாமே முடித்துவிட்ட பிறகு இனி நான் சொல்ல வேண்டியதென்ன விருக்கிறது?" என்றான்.

கோபா:—"இன்னுமொரு விஷயம். முதலிலேயே நாலாயிரஞ் செலவாகிறதே என்று பயந்துவிடக் கூடாது. அவள் தங்களிடம் வந்த பிறகு அவளுடைய சாப்பாட்டுச் செலவைத் தவிர வேறொன்றுங் கிடையாது" என்றான்.

இரா:—"ஆம் பிரதர்! இப்பொழுது திடீரென்று ரொக்கமாக நாலாயிரம் வேண்டுமென்றால் என்ன செய்வது? கடன்தான் யார் கொடுப்பார்கள்!" என்று கேட்டான்.

கோபா:—"தாங்கள் பார்த்து வேண்டுமென்றால் கிடைக்காதா? தற்சமயம் தங்களிடத்திலில்லாவிடினும் கடன் கிடைப்பதில் யாதொரு தடையுமில்லை. வேண்டுமென்றால் நானே அதற்கு ஏற்பாடு செய்கிறேன். பத்து நூறு

அன்பில னான்ற துணையிலன் றான்றுவ்வா னென்பரியு மேதிலான் றுப்பு.

அதிகமாக எழுதிக்கொண்டு, கொடு வென்றால் நான் நீ யென்று ஓடிவருகிறவர்கள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். அவ்விஷயத்தைப்பற்றிக் கவலைகொள்ள வேண்டியதில்லை. அது என் பொருப்பு மற்றபடி தங்களுக்குச் சம்மதந்தானே'' என்றான்.

இரா:—''சம்மதமில்லையென்றால் தமக்கன்றோ குறைவு'' என்றான்.

கோபா:—''அதனால் குற்றமில்லை பிரதர், வேண்டாமென்றால் இப்பொழுது தெரிவித்துவிடுகிறேன் சொல்லுங்கள். பிறகு வருந்துவதில் பிரயோஜனமில்லை'' என்றான்.

இரா:—''இதில் வருத்தமென்ன, பிரதர்! எனக்குப் பூர்ண சம்மதமே'' என்றான்.

நாடகமாரம்பிக்கப்பட்டது. எனினும் இராஜாராமுடைய பார்வையும் எண்ணமும் அத்தாசி மீதேயிருந்தன. மத்தியில், ''என்ன பிரதர்! அந்தப் பெண்ணுடைய பெயரை விசாரித்தறிந்து கொண்டீரா?'' என்று கோபால பிள்ளையைக் கேட்க, அவன், ''பிரதர்! மன்னிக்கவேண்டும். தங்களுடைய நாமதேயமும் அவளுடைய பெயரும் மிகப் பொருத்தமானவையேயாகும். இராஜாமணியென அவள் அழைக்கப்படுகிறாளாம்'' என்று சொன்னான்.

நாடகமும் முடிந்தது ; ஜனங்களெல்லாரும் புறப்பட்டனர். நாம் குறித்த நால்வரும் வெளியில் வந்தனர். ''என்ன பிரதர்! எங்குச் செல்ல உத்தேச''மென்று கோபால பிள்ளை கேட்க, இராஜாராம், ''தங்களுடைய இஷ்டம்போல்'' என்று சொல்ல, கோபால பிள்ளை சிரித்துக் கொண்டு, ''உங்கள் மூவரையும் இராஜாமணியி னில்லத்தில் விட்டுவிட்டு நான் என்வீடுசென்று நாளையதினம் காலையில் தங்களை அங்கு வந்து சந்திக்கிறேன்'' என்று சொல்ல, அதற்கு மற்ற மூவரும் சம்மதிக்க நால்வரும் கோச்சுவண்டியி லேறினார்கள். சுமார் பதினைந்து நிமிஷம் வண்டி அதிவிரைவாகச்சென்று நின்றது. இராஜாமணி யிறங்கவே மற்ற மூவரும் பின் தொடர்ந்தனர். இவ்விதம் கோபாலபிள்ளை ஒன்றுமறியா இராஜாராமைத் தாசிவீடு சேர்த்துவிட்டுத் தான் செல்லவேண்டிய விடத்திற்குச் சென்றான்.

மறுநாட்காலை சுமார் எட்டுமணிக்கு கோபால பிள்ளை காப்பி சாப்பிட்டுவிட்டு இராஜாமணியின் வீட்டிற்குச் சென்று இராஜாராமைப் பார்த்துக் காலை வந்தனங் கூறிவிட்டு, ''பிரதர்! உங்களுடைய யோகமே யோகம். எந்தக் காரியத்திற்குப் போனாலும் ஜயமே! வரும் வழியில் அகஸ்மாத்தமாய் ஒருவரைச் சந்தித்தேன். பணத்திற்கு அவரிடம் ஏற்பாடு செய்துவிட்டேன். இரண்டு ரூபாய் வட்டி சொன்னார். ஐந்நூறு அதிகமாக எழுதிக்கொண்டு ஒரு வட்டிக்குக் கொடுக்கும்படி பேசி முடித்தேன். ஸ்டாம்புப் பேப்பரும் வாங்கிவந்து விட்டேன். தாம் எழுதவேண்டியது தான்'' என்று சொல்லிக் காகிதத்தைக் கொடுத்தான். இராஜாராமும் தன் நண்பன் சொன்ன விதம் பத்திரம் எழுதிக் கையொப்பம் வைத்தான். கோபால பிள்ளை ஒரு சாட்சிக் கையெழுத்துப் போட்டான். நாடகக் கொட்டகைக்குத் தாசியுடன் வந்திருந்த அவள் மாமன் ஒரு கையெழுத்திட்டான்.

பிறகு நண்பர்களிருவரும் புறப்பட்டனர். இராஜாராமுடைய வீட்டிற்குவந்தனர் போஜனமானபின் இருவரும் ரிஜிஸ்தராபீசுக்குச் சென்றனர். பத்திரம் ரிஜிஸ்தர் செய்யப்பட்டது. இருவரும் திரும்பினார்கள். கோபால பிள்ளை தன் நண்பனிடம் விடைபெற்றுச் சென்றான். சாயங்காலம் ஐந்து மணிக்குக் கோபால பிள்ளை பத்திரத்தை வாபசு பெற்றுக்கொண்டு, எழுதிக் கொண்டவன் வீட்டிற்குச் சென்று நாலாயிரத்து ஐந்நூறு ரூபாயை வாங்கிக்கொண்டு பத்திரத்தைக் கொடுத்துவிட்டுப் போனான். ரூபாய் மதனகோபனில்லஞ் சேர்ந்தது. இராஜாராம் தாசி வீடடைந்தான்.

துர்க்குண சிகாமணியான மதனகோபனும் அவனுடைய தோழர்களும், சர்வ சக்திவாய்ந்த எம்பெருமான் எங்கும் ஏகமாய் வியாபித்து நின்று எல்லாவற்றையுங் கவனித்து வருகிறாரென்பதைக் கருதாமலும், பிறருக்குத் தீங்கிழைத்தால் தமக்குக் கேடு தலைமேல் என்பதையெண்ணிப் பாராமலும், நாற்றத் துருத்தியான தம் சரீரத்தை நீரின்மேற் குமிழியன்ன நிலையற்றதென நினைக்காமலும் வஞ்சகத்தொழிலைக் கைக்கொண்டு தம் வழிப்பட்ட வாலிபர்களையெல்லாம் விலைமாதர் வீடு புகுத்தித் தம்வயிற்றைப் பெருக்கிக் கொண்டு தம்முடைய அரிய வாணாட்களை வீணாட்களாக்கித் தீரா நரகத்திற்கு விதை நாட்டுவார்கள். இவ்வுலக மாய்கையு மிதுவேயன்றோ!

அஞ்சு மறியா னமைவில னீகலான் றஞ்ச மெளியன் பகைக்கு.

நான்காம் அத்தியாயம்
இரத்தினத்தின் மனோவேதனை

முன் அத்தியாயத்திற் கூறினவைகள் நிகழ்ந்த மறுநாட் காலை, சுமார் ஒன்பது மணிக்குக் கோபாலபிள்ளை வாடிய முகத்துடன் கணக்குப் புஸ்தகமொன்றைக் கையிற் பிடித்துக்கொண்டு இரத்தினத்தைப் பார்ப்பதின் பொருட்டு அம்புஜத்தின் வீட்டிற்குச் சென்றான். அங்கு கரைகாணக் களிப்புடன் பகடையாடிக் கொண்டிருந்த இரத்தினமும் தாசியும் இவனைக் கண்டவுடன் ஆட்டத்தை நிறுத்தினார்கள். அம்புஜம் வந்தவனுக்கு உபசார வார்த்தைகள் கூறித் தட்டில் தாம்பூலம் வைத்துவிட்டு வெளியே சென்றாள். இரத்தினமும் காலை வந்தனங்கூறி, "ஆதவனைக் கண்ட தாமரைபோற் சதா விகசித்துச் சந்தோஷம் பரிணமித்திருக்கும் தம்முடைய முகம் இன்று சந்திரனில்லா வானம்போ லிருள் கொண்டு விசனக்குறி காட்டவேண்டியதின் காரணமென்ன? சென்ற மூன்று நாட்களாகத் தாம் ஏன் இங்கு வரவில்லை? இன்று மளிகைக்கு வரலாமென்று எண்ணிக்கொண்டிருக்கத் தாமே வந்துவிட்டீர். தங்களுடைய கவற்சியை நோக்கும்பொழுது என் மனம் மிக வருந்துகின்றது. ஆதலின் காரணத்தை தயவுசெய்து சீக்கிரம் தெரிவிக்க வேண்டுகிறேன்" எனக் கேட்டான்.

கோபா:—பிரதர்! என்று நாம் இந்த உலகிற் பிறந்தோமோ அன்றே கவலையும் நம்முடன் கூடப் பிறந்திருக்கிறது. சந்தோஷ மின்னதென்றறியாவொருவன் இருப்பினுமிருக்கக் கூடுமேயன்றித் துக்கத்தை யறியாதவர் எவருமில்லை. நிற்க: கொஞ்ச நாட்களாக வியாபாரம் செவ்வனே நடைபெறுவதாயில்லை யென்பதை முந்தின நாள் தமக்குத் தெரிவித்தேன். சரக்குகள் பிடித்துச் சேகரஞ் செய்வதற்கு வேண்டிச் சிலரிடம் கைமாற்றாகக் கொஞ்சம் பணம் வாங்கியிருந்தேன். அவர்களெல்லோரும் ஏககாலத்தில் நிர்ப்பந்தப்படுத்திப் பணம் கேட்கவே ரொக்கமாக்க் கையில் போதிய பணமில்லாததினால் பிடித்த சரக்குகளை அரைவிலைக்கும் கால் விலைக்கும் விற்கவேண்டியதாயிற்று. எனினும் எல்லோருக்கும் பணத்தைத் திருப்பிக் கொடுக்க என்னால் முடியவில்லை. ஒரு மாதத் தவணைக்குச் சென்ற மாதத்தில் திண்டுக்கல்லிலிருக்கும் தங்களுடைய நிலத்தை யடமானம் வைத்துப் பத்தாயிரம் ரூபாய் கடன்வாங்கினோமே அன்னவனும் இந்த மூன்று நாட்களாக வந்து தொந்திரவு செய்கிறான். அந்தக் கடனையடைப்பதற்கு என்னாலியன்ற மட்டும் முயன்றும் முடியாதுபோயிற்று. இன்னது செய்வதென்பது எனக்கு விளங்கவில்லை. தங்களைக் கேட்டுப் போகலாமென்று வந்தேன்" என்று சொன்னான்.

இரத்:—"இதற்காக வேண்டிக் கவலைப்படுவானேன், பிரதர். திண்டுக்கல்லிலிருக்கும் நம் நிலத்தை விற்றுக் கடன்காரர்களுக்குக் கொடுத்து விடுவோம். தாம் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. வியாபாரமும் சரியாக நடக்கிறதில்லை. வரக்கூடிய வரும்படியும் நம் செலவிற்குப் போதுமானதாயில்லை. வேறேதேனும் தொழில் செய்யலாமென்றாலோ இன்னது தான் செய்வதென்றுந் தோன்றுவ தாயில்லை" எனக்கூறி யோசித்தான்.

கோபா:—"பிரதர்! கொஞ்ச நாட்களாக ஒரு யோசனை தோன்றியிருக்கிறது. அதைத் தங்களிடம் தெரிவிக்கவேண்டுமென்றிருந்தும் மறந்துவிட்டேன். 'டிராமா கண்டிராக்டு' (குத்தகை) எடுக்கலாமென்ற உத்தேசம். யாதொருவிதமான கஷ்டமின்றியும் முதலில்லாமலும் ஒருநொடியில் நூற்றுக்கணக்கான இலாபத்தைச் சம்பாதிக்கலாம். தங்களுடைய அபிப்பிராயம் என்னவோ" என்று கேட்டான்.

இரத்:—"தங்களுக்கு எது இஷ்டமோ அதைச் செய்யலாம். இந்த விதமான விஷயங்களில் இனிமேல் என்னுடைய சம்மதத்தைத் தாம் கேட்கவேண்டியதில்லை, பிரதர்! தம்முடைய மனதிற்குச் சரியென்று பட்டால் தடையின்றிச் செய்யலாம். ஒரு முறை நஷ்டமேற்பட்டாலும் அடுத்த தடவை இலாபம் கிடைக்காமலா போகும். இல்லை. ஆகவே தங்கள் மனம்போற் செய்யலாம்" என்று சொன்னான்.

கோபா:—"நல்ல வேளை. எங்கு கூடாதென்று சொல்லிவிடுகிறீரோ என்று சந்தேகித்தேன். இன்றைய நாடகத்தை ஆயிரத்தைந்நூறு ரூபாய்க்குக் கண்டிராக்ட் எடுத்திருக்கிறேன். நோட்டீசும் பிரசுரஞ் செய்து விட்டேன். இதோ பாரும்" என்று ஒரு நோட்டீசைக் கொடுத்தான்.

இரத்:—"மளிகைப் பெயரையே வைத்துவிட்டாற் போலிருக்கிறது. சரி, இன்றிரவு நானும் கொட்டகைக்கு வருகிறேன். தாம் சென்று வேண்டிய காரியாதிகளைப் பாரும். நிலத்தை வாங்குவதற்குத் தகுதியான ஒரு ஆசாமியையும்

பார்த்துவையும்'' என்று சொல்லிக் கோபாலபிள்ளையை விடைகொடுத்து அனுப்பிவிட்டான்.

அன்றிரவு சுமார் எட்டரை மணிக்கு இரத்தினமும் அம்புஜமும் கோச்வண்டியிலேறிக் கொண்டு நாடகக் கொட்டகைக்குச் சென்றார்கள். இவர்கள் வந்து சேர்ந்த மறு விநாடியே ஆரம்பித்த மழை சுமார் பத்தரை மணிவரையும் பெய்ந்து கொண்டே யிருந்ததினால், அன்று நாடகம் பார்க்க வந்தோர் மிகச் சிலரே யாவர். வசூல் செய்யப்பட்ட பணமும் மிகச் சொற்பமேயாம். ஆயிரம் ரூபாயுக்கு அதிகமாகவே அன்றைய 'கண்ட்ராக்டில்' இரத்தினத்திற்கு நஷ்டமுண்டாயிற்று. எனினும் கோபால பிள்ளையின் உற்சாக வார்த்தைகளால் மனதைச் சாந்தப்படுத்தித் தைரியங்கொண்டு அடுத்த ஆட்டத்தை ஆயிரம் ரூபாய்க்கு ஒப்புக்கொள்ளுமாறு இரத்தினம் தன் நண்பனுக்குச் சொன்னான். அதிலுஞ் சரிபாதி ரூபாய் நஷ்டமேற்பட்டது. அப்பொழுதும் இரத்தினம் மனச்சோர்வு படாமற் பார்த்துக்கொண்டு அடுத்த சனிக்கிழமை ஆட்டத்தை இரண்டாயிரம் ரூபாயுக்குக் கோபால பிள்ளை குத்தகைக்கு எடுத்து இரத்தினத்தின் சம்மதத்தையும் பெற்றான். மதனகோபனின் எண்ணம் ஈடேறவும் இரத்தினத்தின் கெட்ட காலத்திற்கேற்பவும் அன்றைய குத்தகையிலும் சுமார் ஆயிரம் ரூபாய் நஷ்டமுண்டாயிற்று.

அடுத்தநாட் காலை, மும்முறையும் விடாமல் நஷ்டமேற்பட்டதால், சற்றே மனோவியாகூலத்துட னுட்கார்ந்துகொண்டிருந்த இரத்தினத்தைக் கண்ட அம்புஜம், "என் துரையே! தங்கள் முகம் இவ்வாறு வாடி யிருப்பதற்குக் காரணம் என்ன? தாம் என்னைத் தொட்டுச் சுமார் இரண்டு மாதங்க ளாகின்றன. ஒருநாளேனும் தங்கள் கமலவதனம் இவ்விதம் வாட்டமுற்றிருந்ததை நான் பார்த்ததில்லையே. இன்று தமக்கு மனவருத்தமுண்டா யிருப்பது எதற்காகவென்பதைத் தயவுசெய்து அடியாளுக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன். என் மனம் எதையெதையோ நினைக்கின்றது; தாமதிக்காமற் கூறவேண்டும்'' என்று மிக்க மனவருத்தங் கொண்டவள்போல் அபிநயித்துக் கேட்டாள்.

இரத் :—'என் அன்பே! விசேஷமாக ஒன்றுமில்லை. நாடகக் குத்தகையில் மூன்று தரமும் நஷ்டமேற்பட்டதாற் கொஞ்சம் மனவருத்தம்' என்று சொன்னான்.

அம்புஜம் :—"இதற்காகவேண்டி விசனப்படலாமோ? எத்தகைய வியாபாரத்திலும் இலாப நஷ்டமிருந்தே யிருக்கிறது. ஒருமுறையில் நஷ்டமுண்டானாலும் மறுதரம் இலாபங் கிடைக்காமற் போகாது. ஆனால் மூன்று தரமும் நஷ்டமேற்பட்டதென்று சொல்லுவீர்கள். இருப்பினும் மனச்சோர்வுபடாமலும், அந்த வியாபாரத்தைக் கைநழுவவிடாமலும் மறுமுறையுஞ் செய்து பார்க்கவேண்டும் இதில் தங்களுக்கிஷ்டமானால் நானென்று சொல்ல விரும்புகிறேன். புதிய ஆக்டர்களை வரவழைத்துச் சனங்களுக்கு விருப்பமானதொரு நாடகத்தை நடத்தினால் தக்க ஊதியங் கிடைக்குமென்பது என் அபிப்பிராயம். பின் தங்களிஷ்டம்'' என்று சொன்னாள்.

இரத் :—"கண்மணி! அது நல்ல யோசனைதான். அவ்விதமே செய்வோம். நம் கோபால பிள்ளை வந்தவுடன் இதைத் தெரிவிக்கிறேன்'' என்று சொல்லிக்கொண் டிருக்கும்பொழுது, அங்கு வந்த,

கோபால பிள்ளை :—(காலை வந்தனங்கூறி) என்ன, ஏதோ என்னைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள் போலிருக்கிறதே?'' என்றுரைத்துவிட்டு உட்கார்ந்தான்.

இரத் :—தங்களைப்பற்றி ஒன்றும் பேசவில்லை. ஆனால் தங்களிடத்திற் கூறவேண்டிய விஷயமொன்றுண்டு என்றுரைத்து அம்புஜத்தின் ஏற்பாட்டைச் சொன்னான்

கோபா :–அதுவும் நல்ல யோசனைதான். நான் அதற்கு வேண்டியவற்றை இன்றே செய்கிறேன். அடுத்த சனிக்கிழமை நல்ல ஆட்டமாக வைப்போம் என்று சொன்னான்.

இரத் :—சரி: அது அவ்வாறாகுக. திண்டுக்கல் நிலத்தை விற்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தீர்களா? என வினவினான்.

அம்பு :—நிலத்தை எதற்காக விற்கவேண்டுமென்கிறீர்கள்? எனக் கேட்டாள்.

இரத் :—வியாபார விஷயத்தில் கைமாற்றாகக் கொஞ்சம் பணம் வாங்கியிருந்தோம். அதைக் கொடுப்பதற்காகத்தான் என்றுரைத்தான்.

அம்பு :–அதற்காக நிலத்தை ஏன் விற்கவேண்டும்? பணத்தைச் சம்பாதித்துவிடலாம். பூமி கிடைப்பதென்றால் அவ்வளவு எளிதல்லவே. அவசரமாயிருந்தால் என்னிடமிருக்கும் நகைகளை அடமானம் வைத்துக் கடன்காரர்களுக்குக் கொடுத்துவிடலாம்

சிறுத்தொண்டர்

[கனக சபாபதி தெரிசனம்-மெட்டு]

[இராகம் தன்யாஸ்-ஆதிதாளம்]

(பல்லவி)

பெரியார் தெரிசனம் கிடைத்தால் நமது
பிறவிப் பிணிபோகும்

(அநுபல்லவி)

அறியார் பயனென்றுங் குறியார் தெய்வத்தைப்
பிரியார் புலன்வழித் திரியார் நில மிசைப்—பெரி

(சரணங்கள்)

(1) காமக்ரோத லோப மோக மாச்சர்யமதங்
காதவழி யோடிக்கண் கலங்கிடுமே
தீமைக்குரிய வெல்லாம் பூமிக்குளே புகுந்து
செத்தோம் பிழைத்தோ மென்று
சித்தங்கலங்கிடுமே—பெரி

(2) மோன சமாதிநிலை தானே வருந்திரண்டு
முத்திக்கு வித்தான பெரியோரைக் கண்டு
தீனரக்ஷக திரிபுவன கர்த்தனென்றுள்ள
சிவனார் தம்மையே தங்கள் அகமதி
லடக்கிய —பெரி

இன்றுதான் என் ஜன்மம் சாபல்ய மாயிற்று. இத்தனை நாள் செய்த அன்னதானத்தின் பலனே ஓர் உருவெடுத்து வந்ததோ. அன்றி புண்ணிய மென்பவை யாவும் நண்ணி யொன்றாய்ச் சேர்ந்த திருஉருவோ! அல்லது ஆயிரக் கணக்காய் அமுதுண்ண வரும் சிவனடியார் அனைவரும் கண்ணுக்கழகாய் மண்ணுக் கணிகலமாய் திண்ணமாய்ச் சேர்ந்த பொற்புருவோ! இத்தகைய உத்தமர்தம் வயிறும் பசித்ததோ! அந்தோ! இம்மஹானுபாவர் நிஷ்டையிலிருக்கிறாரே—கூப்பிட்டால் நிஷ்டை கலைந்ததென்று கோபிப்பாரோ—அந்தச் சந்தேகம் நமக்கெதற்கு? நாம் வந்த காரியத்தைப் பார்ப்போம். வருவது வந்தே தீரும்.

[இராகம் அடாணா—ரூபகதாளம்]

(பல்லவி.)

தெண்டனிட்டேன்-ஸ்வாமி—தொண்டன் —தெண்

(அநுபல்லவி)

சிறுத் தொண்டன் வலங்கொண்டு கும்பிட்டெ
டெழுந் தண்டித் —தெண்

(சரணங்கள்)

(1)பண்டு செய்த வினை கண்டு கலங்கிட
பந்த மூவாசைகள் நொந்து விலகிட
உண்டு சிவபோகம் என்று திடமுடனுயர் வானவர் தாமாய் வருஞ்
சிவயோகியர் தொழு நாயகா —தெண்

(2)பார்க்கப் பார்க்கப்பர மானந்தங் கூடுதே
பங்கயத் தங்கமு கங்கண்டு நாடுதே
தேக்கும் பக்தியின் பதமென்னுள்ள மாகுதே
திருவருளுரு பெறுமுமதொரு
திருமண மெழு மரை மலரடி —தெண்

ஆழ்ந்த நிஷ்டைபோலும் அனுபவித்தவர்களுக் கல்லவா அதன் அருமை தெரியும். மூஂகுற்ற மகற்றித் திக்கெட்டிலும் மிக்காரின் மிக்க பக்குவ சீலரே! ஞானதினகர மோன வித்தகரே! அடியேன் சிறுத் தொண்டன் வந்தனம் புரிகின்றேன். குற்றத்தை க்ஷமித்து நாயேனைக் கடைக்கணித்துக் காத்தருள வேண்டும்.

வைரவர்:—தீர்க்காயுஷ்மான் பவ! யாரது? ஹோ! ஹோ! நீதான் சிறுத்தொண்ட பக்தனோ! நீதானோ அன்னக் கொடியொன்றை நாட்டி யிருப்பவன்? சரி சரி! பேஷ்! நன்றாயிருக்கிறது உன் ஒழுக்கம். இதென்ன அன்னதானம்? என்ன பிரயோஜனத்தை உத்தேசித்தோ? அன்னமென்று வருவோர்களுக்கு அடுத்திருந்து ஆதரித்து உபசரித்து அமுதிடுவதன்றோ அன்னதான மெனப்படும். அதிதிகள் வரும் வேளையில் அருகிலில்லாமல் அவர்களைத் தேடும் பாவனையாய் வெளியிலிருந்து விட்டு அவர்களை வந்த வழி ஓட்டிவிடுவதோ நின் தொழில்?

சிறு:—சுவாமி! அடியேனை க்ஷமிக்க வேண்டும், நான் கள்ள உள்ளத்தோடு வெளிப்போனவன் அல்லன். தினே தினே பன்னூற்றுக் கணக்காக சிவனடியார்கள் வந்து நான் தெரிந்தும் தெரியாமலுஞ் செய்யும் உபசாரணையைப் பெற்று அமுதுண்டு போயிருக்க, இன்று, பகவானது திருவருளோ—ஒருவரையேனுங் காணாது அடியேன் மனங்கலங்கி வருந்தி மயங்கி எங்கு சென்றேனும் எதிர்ப்பட்ட அடியாரை அழைத்து வருவதாகப் புறப்பட்டதேயன்றி வேறன்று. மஹானுபாவராகிய தாங்கள் அச்சமயம் அடியேன் அகத்தை அணுகி ஆளனில்லா வீட்டில் அமுதுண்ணல் அடாதென அகன்று போயினதாக அறிந்தேன். அறிந்ததும் தங்களிடம் ஓடோடியும் வந்தேன். குற்றமாயின் திருவுளம் பற்றாது பொறுத்துக் கொண்டு

[கொஞ்சஞ் சஞ்சலமா மெட்டு.]

[இராகம் உசேனி-ரூபகம்]

(கண்ணிகள்)

வாரும் என்மனைக்கு—ஸ்வாமி—வாரும்

(1) மறை முடி தனி னடம் புரிந்திடும்
பாதுபாக னே ரடியரே --வாரும்

காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான் பேணாமை பேணப் படும்,

(2) வண்ணப் போஜனம் பரிவோடு
 உண்ணத் திருவுளம் புரிந்து —வாரும்
(3) மதுரங் கொண்ட கனிகளுண்டு
 மகிழ் வொடுந்தாம் கருணை கொண்டு—வா
(4) வகை வகையான பதார்த்தமே
 மிகையாய் நற்சுவையாய் உண்ண—வாரும்
(5) மலர்ப்பதந் தனை மனைதனிற் படுங்கனந்தா—வா
(6) வருந்தி எத்தனை தவங்கள் செய்தோமோ
 வண்ண மிடுந்தங்கள் திங்கள் முகங்காண
திருந்துஞ் சிவபோகச் செல்வந் திருந்திட
 தீதறும் பற்றுகள் நீங்கிய
தேவரீர் சித்த மகிழ்ந்துடன் —வாரும்

சுவாமி! ஏதோ அடியேன் கேவலம் சாமான்யன். வித்தக ஞான சத்துவ முணராப் பேதை. நான் மனமாற ஒரு குற்றமும் செய்யாத போனாலும் மறதியால் மனமயங்கி ஏதேனும் பிழை செய்திருந்தால் பொறுத்துக் கொணடு என் மனைக்கு வந்து அமுதுண்டு அடியேனை ஆதரிக்கவேண்டும்.

வை:—சரி! ஏதோ நீ சொல்லுவதை அங்கீகரிக்கின்றேன். உன் அன்னதான சாலையில் வழக்கமாக என்னென்ன கறிகள் செய்வதோ? என் மனதுக் கிசைந்தவை ஏதேனும் உண்டோ?

சிறு:—சுவாமி! தங்கள் திருவுள்ளத்துக்கு இசைந்த கறிகளைத் தெரிவித்தால், அவைகளையே செய்து அளிக்கக் காத்துக்கொண் டிருக்கின்றேன். எந்த விதமாக, என்ன கறியைச் செய்யச் சொல்லுகின்றீர்களோ, அந்த விதமாக அந்தக் கறியை அடியேன் அகமகிழ்வோடு படைப்பேன் என்பதைத் தங்கள் திருவுள்ளம் அறியவேண்டும். திருவாய் மலர்ந்தருள்வதுதான் தாமதம்.

வை:—நான் விரும்புங் கறியை நீ சருவையோ?

சிறு:—ஸ்வாமி! சத்தியமாக ஸம்ப்ரமமாகத் தருவேன்.

வை:—தவறுவாயோ?

சிறு:—தாங்கள் கவலைப்பட வேண்டியதே இல்லை. தவறமாட்டேன்.

வை:—ஹே! பக்தா! தினம் தினம் நான் சாப்பிடுவதில்லை. ஆறு மாதத்திற் கொருமுறை அரிய தவத்தை விட்டெழுந்து அமுது கொள்வது வழக்கம். நான் உண்ணும் அந்த ஒரு வேளையுணவே எனக்கு ஆறு மாதம் ஆதரவு செய்யத் தக்கதாய் இருக்கவேண்டுமன்றோ!

சிறு:—ஆம்.

வை:—நான் விரும்பிய கறியை மற்றவர்கள் தேடியிடுவது சிறிது துர்லபமாயினும் உன்னால் எளிதில் முடியுமென்று நம்பியே உன்னிடம் வந்தது. பொன்னுள்ளார் என்னதான் செய்யமாட்டார்! என் விருப்பத்தைத் தெரிந்தபிறகு முடியாதென்றால் எனக்கது மிகவும் அகௌர்வமாக நேரும். ஆகையால் இப்பொழுதே நீ ஆலோசித்து உன் மனதைத் தெரிவிப்பாய்.

சிறு:—ஸ்வாமி நான் வாக்குத் தவறுவேன் என்பதாக மாத்திரம் கிஞ்சித்தும் எண்ண வேண்டாம்.

[தப்பிப் பிரதிக்ஞ—மெட்டு]
[தோடி—ரூபகம்]

(பல்லவி)

தப்பிப் பிரகிப் போவேன் என்றெண்ண வேண்டாம்
 ஸ்வாமி—தப்பி

(அநுபல்லவி)

எப்படியு மதைக் கொடாமல் எனதுயிர் உடல்
 தரிக்குமோ சாமி—தப்பி

(சரணம்)

அன்புடன் தாங்கள் வேண்டுங் கறியை
 அருமையாத் தேடி வருவேன் நொடியில்
முன் பதனையே மொழிவீர் ஐயா
 முக்காலுஞ் சத்தியம் செப்பியபடிச்
 செய்யத்—தப்பி

தாங்கள் யோசனை செய்யாமல் கட்டளை யிடுங்கள். மனம்போலவே நடந்துகொள்ளுவேன்.

வை:—சரி அப்படியானால் யான் வழக்கமாக உண்ணுங் கறியின் லக்ஷணத்தைக் கேட்பாய்:—

[எண்சீர்க்கழநெடிலடி யாசிரிய விருத்தம்.]

அவையவங்கள் ஊனமில்லாக் குழந்தையாக
 ஐந்து வயதுடையவனாய் அரிய வேதம்
எவைகளுமாய்ந்தறிந்தவனாய்த் தாய்க்கோர்பிள்ளை!
 எனவிருக்கு மொருவனை நீ கொண்டு வந்து
பவ மகலத் திரு மஞ்சள் நீரா லாட்டி
 பக்தியுடன் அவன் தாய் தன் மடியில் வைத்து
கவலை யில்லாதவன் தந்தை யறுத்துச் சேயைக்
 கறி சமைத்தால் யாம்புசிக்க கருத்தாமையா,
பக்தா கேட்டனையோ? நான் இன்னொரு முறை விளக்கமாய்ச் சொல்லுகிறேன் கவனமாய்க் கேட்டுக் கொள்ளவும்.

கூன், குருடு, செவிடு, பேடு, முடம் முதலிய அங்கஹீன மொன்றுமில்லாத ஆண்குழந்தையாய், ஐந்து வயதுடையவனாய், நல்ல புத்திமானாய், தாய்க்கோர் பிள்ளையானவனைத் தெரிந்தெடுத்து, அவன் பாவம் போகத் திருமஞ்சன மாட்டி, அவனைப் பெற்ற தாய், பக்தி பூர்வமாய் அவனை மடியில் வைத்திருக்க யாதொரு வியாகூலமும் இல்லாமல் தந்தையானவன் அக்குழந்தையை அறுத்துக் கறி சமைத்து வைத்தால் யான் போஜனங் கொள்ளுவேன். அப்படிக் கில்லாமல் ஏதோ நீ கூறிய கறி வகைகளை யுண்ண எனக்குச் சற்றேனும் சம்மதமில்லை நீயேதான், நான் குறிப்பிடும் கறிச்சரக்கை எப்படியும் உதவுவதாக

கொடுத்துங் கொளல்வேண்டு மன்ற வடுத்திருந்து மாணாத செய்வான் பகை.

உறுதி கூறினை. சரி, அதுபோல் செய்யச் சம்மதமானால் செய்வது, இல்லையானால் போவது.

சிறு:—ஸ்வாமி! தாங்கள் அவ்வாறெண்ண வேண்டாம். வாக்குத் தவறி இந்த உயிர் வைத்துக் கொண்டிருப்பேனா. அது ஒரு நாளு மில்லை. எப்படியேனும் தங்கள் கட்டளையை நிறைவேற்றுவேன் என்பதில் சந்தேகம் கொள்ளவேண்டாம்.

வை:—மெத்த சந்தோஷம். இதற்கு எவ்வளவு காலம் வேண்டுமோ? நான் இங்கு முற்பகலுக்கப்புறம் இருக்கமாட்டேன்.

சிறு:—சுவாமி அதற்குள் எல்லாவற்றையும் சித்தப்படுத்திக்கொண்டு தங்களை அழைத்துப் போகிறேன்.

வை:—சரி, போய் வரவும்.

சிறு:—நமஸ்காரம்.

வை:—தீர்க்காயுஷ்மான் பவ.

[சிறுத்தொண்டர் போதல்]

அங்கம் III

காட்சி. 1

இடம்: பிள்ளையார் கோவில்

[சிறுத்தொண்டர் வருதல்]

சிறு:—என்ன விபரீதமா யிருக்கிறது. ஆண்பிள்ளையாம், ஐந்து வயதுடையவனும், அவயவ பூரணனும், அருங்கலை விநோதனும், எங்கு போய்த் தேடுவது? யார் கொடுப்பார்! தங்கம் பொன்னை அங்கை நிறைய வாரி வாரிக் கொடுப்பினும் அடியார் சொன்னபடியாய் இப்படி எவர்தான் புத்திரனைக் கொடுக்கச் சம்மதிப்பார்?

"குழலினிது யாழினிது கொல்லென்பர் தம்மக்
மழலைச் சொல் கேளா தவர்" [கள்

என்ற பொய்யா மொழியாரின் மெய்யா மொழி பொய்யா மொழியாகுமோ? குழந்தைப் பருவத்தில் புத்தியில் விற்பன்னனாகிய புத்திரன் ஒருவனது கொஞ்சுங் குதலைமொழியைக் கேட்டு ஆநந்தங் கொள்ளாது, கேவலம் அழிவதற் கேதுவாகிய அற்பப் பொருளையோ மதிப்பார்கள்? முற்றத் துறந்த முனிவரும் துறப்பரோ மக்கள்மேற் காதல் என்பார்களே! முனிவர்களுக்கே அப்படியானால் சாமான்ய பாமரர்களுக்குக் கேட்பானேன். அவ்வாறு, சுபலக்ஷணங்களோடு கூடிய பாலக னொருவனை அருமையினி லருமையாய் அடைந்தாலும் அவனைத் தாய் மடியில் வைத்திருக்கத் தந்தை அரிந்து கொடுக்க வேண்டுமாமே. யாரோ செய்வார் இந்த கொடிய பாதகத்தை! எது எது நாம் விலைக்கு வாங்குவதென்ப தெல்லாம் வீண் பேச்சு. அகிலமெல்லாந் திரிந்து அழகேசனையே அடகுவைத்தாலும் அவ்வண்ணமாக அருமைப் புத்திரனை அரிந்து கொடுக்க யாரும் சம்மதிக்கமாட்டார்கள். அதைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருப்பது காலப்போக்கும் பைத்தியமுமேயாகும். வேறு என்ன செய்வது? அந்தோ என் எண்ணப்படி நடக்குமோ! ஐயர் சொன்ன அமைதிப் பிரகாரம் நமது செல்வச் சிரஞ்சீவி சீராளன்தான் இருக்கிறான். சாமுத்திரிகா லக்ஷணம் ஒருமித்து வாழும் அழகு சௌந்தர்யன். ஐந்து வயதுடையவன் தான். வேத மறைந்து சங்கீதம் ஓதும் மதலைக் குதலை மாதுர்ய வசனன்தான். தாய்க்கோர் பிள்ளைதான். எல்லாம் அமைந்த என்னருமைச் சிறுவனைக்கொன்று கறி சமைக்க அவன் அன்னை சம்மதிக்க வேண்டுமே. எனக்கோ பூரண சம்மதம். எடுத்த விரதத்தை தொடுத்துக் காப்பதென் கடமை. அந்தோ! பத்து மாதம் சுமந்து வயிறுழைந்து பெற்று வளர்த்த அவளுக்கு இந்த சேதி நாராசங் காய்ச்சி விட்டதுபோலன்றோ இருக்கும்? வற்புறுத்தவும் மார்க்க மில்லையே. இருவரும் மனமொத்துச் செய்ய வேண்டுமாமே? ஐயோ! செய்யும் வகை அறியாது தியங்கவும் வேளை வந்ததே. இவ்வளவு நாள் கண்ணுங் கருத்துமாய்ப் பாதுகாத்து வந்த விரதமும் அழியப் போகின்றதே.—ஹா!—ஈசா!—!

(பிள்ளையாரைப் பார்த்து)

ஒ! லம்போதரா! ஆகுவாகனா! விக்ன விநாயகா! கஜானனா! வக்ரதுண்டா! வல்லபை மணாளா! வாடுகின்ற என்னை வாழ்விக்க வொண்ணாதோ! பாவி படுந் துயரை பார்த்துந்தன் சீர்த்ததிருவருளாற் காத்துக் கரைசேர்த்த லாகாதோ. கோவிற் புதுக்கி குளம் வெட்டி கும்பாபிஷேகமும் குற்றமறச் செய்வேனே! ஸ்வாமி! உன்னைக் கும்பிட்டார் வெந்துயரை அந்த க்ஷணத்திற் போக்குவாயே! இந்த ஏழையின் இன்னலைப் போக்குவது உனக்கென்ன ஓர் மலையா! தொலையாத் துயர்க் கடல்வாழ் மடியாத் தொடரலைவாய்ப் பட்ட வாழ்வில் வருங், கவலையால், உலைவாய்ப் பட்ட ஊதுமி போல் உள்ளங் கருகி உயிரொழிந்து போவதற்கோ பாவி இந்த ஜன்மமெடுத்தேன்!

(வானத்தைப் பார்த்து)

ஒ உம்பர்கள் பரவிய உப்பர்கயிலாசா! அம்புஜ பாதா! அடியவர் நேசா! நம்பிய என் மன மாலய நிவாசா! சகலலோக தீன தயாபரா! கங்காதரா! சர்வேசுவர சத்திய பராபரா! அரகரா! சிவசிவ! சம்போ! சங்கரா! வேதமருளும் பாதநடனா! கர்த்த சுத்தாத்வித வாக்ய சிற் சொரூப! நித்திய வித்யாஸ்பத பரமபரம பரமார்த்தா! மலர ஹித தரும நிலய மவுன மோக்ஷா! சுக கசித அற்புத விற்பன சற்குண முக்குண முழு முதலே! நின் அழியாக்கருணை

(இதன் தொடர்ச்சி 199-ம் பக்கம் பார்க்க)

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

நரஸிம்மாவதாரம்

NARASIMHAVATAR

பிரகலாதனுக்கு நற்புத்தி புகட்டும்படி ஏவப்பெற்ற ஆசிரியர்கள் அவனைத் தங்கள் கிருகம் அழைத்து வந்து நல்வார்த்தை கூறி, 'குழந்தாய்! உன் பிதாவின் துவேஷியான விஷ்ணுவைப் புகழ்ந்து பேசும்படி உனக்கு புத்தி மாறாட்டம் ஏற்பட்டது எங்ஙனம்? உனக்கு இயல்பாய் உண்டானதா? அல்லது யாராவது உனக்கு இவ்வித உபதேசம் செய்தார்களா? நீ ஸத்தியவானல்லவா, உண்மையைக் கூறுவாயாக'' என்று நயமாய்க் கேட்டனர். அதற்குப் பிரகலாதன், 'குருபுத்திரர்களே' தான், பரன் என்கிற எண்ணம் ஒரு வீணான ஆக்கிரகம்; அது பகவானது மாயையால் உண்டாகிறது. அவரது கிருபை ஏற்பட்டால், இவ்வித பேதபுத்தி நீங்கும். இரும்பானது அயக்காந்த சமீபத்தில் சுழலுவதுபோல், என் மனமும் சக்ரபாணியான பரம புருஷனிடம் தானே இழுபடுகிறது'' என்று பதிலளித்தான்.

இது செவியுற்ற ஆசிரியர்கள், பிரகலாதனை அஸுரகுலமாகிற சந்தனவனத்திற்கு விஷவிருக்ஷம் போல் பிறந்தான் என்றும், அந்த வம்சத்தை அழிப்பதற்கு ஒரு கோடரிபோல் ஏற்பட்ட விஷ்ணுவுக்கு கோடரிக் காம்புபோல் ஆனான் என்றும் நினைத்தனர்; அவனைப் பலவாறு மிரட்டினர். குலக்கிரமமாய் வந்துள்ள ஞானோபதேசத்தை அனுசரித்து நடக்கும்படி ஸாமம், தானம் முதலிய உபாயங்களால் வற்புறுத்தினர். பின்னர், தர்மார்த்த காம மோக்ஷங்களைக் கூறும் சாஸ்திரங்களைக். கற்பித்தனர்.

பிறகு ஒரு சமயம் அவர்கள் அவனது தாயாரைக்கொண்டு அவனுக்கு அலங்காராதிகள் செய்வித்து, ஹிரண்யகசிபுவினிடம் அனுப்பினர். அஸுரராஜனும் பிரகலாதனை அன்புடன் தன் மடியில் ஏற்றிவைத்துக்கொண்டு, அதுவரையில் அவன் ஆசிரியர்களிடமிருந்து கற்றுணர்ந்ததின் ஸாராம்சத்தைக் கூறும்படி கேட்டான். உடனே பிரகலாதன், 'பிதாவே! விஷ்ணுவிடம் பக்தி செய்வது மிகவும் உத்தமமானது. இவ்வித பக்தி அடியிற் கண்டவாறு ஒன்பது விதமாகும்:—'ச்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவனம் | அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்ய மாத்ம நிவேதனம் || இதி பும்ஸார்ப்பிதா விஷ்ணௌ பக்தி: சேந் நவலக்ஷணா!'' அதாவது (1] பகவானுடைய குணங்களைக் கேட்டல்; (2) அவற்றை வாக்கால் வெளியிட்டுக் கூறல்; (3) அடிக்கடி அவற்றை மனத்தில் ஸ்மரித்தல்; (4) பாதங்களைத் தரிசித்தல்; (5) பூஜித்தல்; (6) நமஸ்கரித்தல் (7) பலவித கைங்கரியம் செய்தல்; (8) பகவானிடம் பரமஸ்நேகம் பாராட்டுதல்; (9) ஸர்வ கர்மங்களையும் பகவதர்ப்பணம் செய்தல். இதுதான் கல்விகளின் ஸாராம்சம்' எனப் பதிலளித்தான். இது கேட்டதும் ஹிரண்யகசிபுவுக்கு ஆறாக் கோபமுண்டாயிற்று. உதடுகள் துடித்தன. கண்கள் சிவந்தன. அவன் குருபுத்திரனைப் பார்த்து, 'விப்ர சிரேஷ்டனே! இதுதான் நீர் செய்துள்ள உபதேசமோ? இதுவரையில் என் மீது சிநேகமுள்ளவர்போல் கபடமாய் நடித்து, எனதருமைப் புதல்வனுக்கு இவ்வித துர்ப்புத்தி புகட்டிவிட்டீர்'' என்று கடிந்து பேசினான்.

இதற்கு ஆசிரியனும், 'அஸுர சிரேஷ்டனே, இவ்வாறு நீர் என்மீது குறைகூறுவது சரியல்ல. என்னாலேயோ மற்றவர்களாலேயோ உமது புத்திரனது புத்தி கெடுக்கப்பட்டதாய் நினைத்தல் பிசகு. இவனுக்கு இவ்வித ஞானம் சுபாவசித்தமாகவே ஏற்பட்டிருக்கிறது எங்கள் பேரில் சற்றும் தோஷமில்லை' எனப் பதிலளித்தார். இது கேட்ட ஹிரண்யகசிபுவானவன், அவனுக்கு அவர் அவ்வாறு உபதேசித்திராவிடில், அவனுக்கு அஸத்புத்தி எவ்வாறு உதித்திருக்கக் கூடுமென்று வினவினான். அதற்குப் பிரகலாதன், 'ஸம்ஸார ஸாகரத்தில் ஆழ்ந்து, உலக சுகங்களில் பற்று வைத்து அவற்றை அனுபவித்து வருபவர்களுக்கு, தங்களாலேயோ, குரு உபதேசத்தாலேயோ ஸ்ரீ பகவானிடத்தில் பக்தி உண்டாவதில்லை. மற்றொரு குருடனால் வழிகாட்டப்பட்ட குருடன் ஸரியான மார்க்கத்தை அறிய முடியாததுபோல், ஸம்ஸார பாசங்களால் கட்டுண்ட அஞ்ஞானிகள், பாகவதோத்தமர்களால் அறியத்தக்க விஷ்ணுமகிமையை அறியமாட்டார்கள். காமாதிகளற்ற பாகவதர்களின் பாத தூளிகளால் பரிசுத்தமாக்கப்படாதவர்கள்

எட்பக வன்ன சிறுமைத்தே யாயினு முட்பகை யுள்ளதாங் கேடு.

ஸ்ரீமந்நாராயணனது பாதாரவிந்தத்தை அடைய மாட்டார்கள்'' என்று கூறி முடித்தான்.

காதுக்கு நாராசம்போன்ற இவ்வார்த்தையைக் கேட்டதும், ஹிரண்யகசிபு வெகு ஆக்கிரோஷங் கொண்டு, பிரகலாதனைத் தன் மடியிலிருந்து திடீரென்று கீழே தள்ளி சிவந்த கண்களுடன், பின் வருமாறு சொல்லலுற்றான் :— 'அசுரர்களே! இந்தப் பிரகலாதன் எனது முக்கிய சத்துருவும், என் சகோதரனைக் கொன்றுமுள்ள விஷ்ணுவைப் பூஜித்துக் கொண்டாடுகிறான். இவன் எவ்விதத்தி லும் கொல்லப்படத் தகுந்தவன். இவனைத் தேசத்தைவிட்டுத் துரத்துங்கள்; எவ்விதமாயாவது ஹதம் செய்யுங்கள். இவனுக்கு வயதோ ஐந்து. இதற்குள் பிதாவினிடம் ஸகஜமாயிருக்கவேண்டிய ஸ்நேஹத்தை ஒழித்து, சத்துருபோல் நடக்கிறான். தன் சரீரத்திலே பிறந்த பிள்ளையானாலும், பிரதிகூலமா யிருந்தால், ரோகம்போல், அவன் ஒழிக்கத்தக்கவனே. தேகத்தில் ஒரு அவயவம் கெட்டுவிட்டால், மற்ற அவயவங்களின் நன்மையின் பொருட்டு அதைச் சேதிக்கவேண்டும். ஆகையால், மித்திர வேடந்தரித்து, சத்துருவாக இருக்கும் இவனை, ஆசனம், சயனம், போஜனம் முதலியவற்றில் விஷப்பிரயோகாதிகள் செய்து கொன்று விடுங்கள்' என்று ஆஞ்ஞாபித்தான். இவ்வாறு ஏவப்பட்ட கிங்கரர்கள் பலவித ஆயுதங்களால் பிரகலாதனை வெகுவாறு இம்சித்தனர்; சூலங்களால் மர்மஸ்தானங்களில் குத்தினார்கள். ''வெட்டு, குத்து'' என்ற சப்தங்களால் பயமுறுத்தினர். பிரகலாதனோ ஸ்ரீமந் நாராயணனிடம் மனத்தைச் செலுத்தி, ஆநந்தானுபவம் செய்துகொண்டிருந்தான். அசுரர்கள் செய்த உபத்திரவங்க ளெல்லாம், பக்தியில்லாதவனுடைய ஸத்கர்மங்கள்போல பயனற்றதாயின. அவனுக்கு யாதொரு தீங்கும் ஏற்படவில்லை. இது கேட்ட ஹிரண்யகசிபு ஆச்சரிய முற்றான். அவனைக் கொல்வதற்கு முன்னினும் தீவிரமான உபாயங்களைச் செய்யலுற்றான்; திக்கஜங்களைக்கொண்டும், மகா ஸர்ப்பங்களைக்கொண்டும், அவனைக் கொல்ல முயன்றான் பிறகு பலவித மாயைகளைப் பிரயோகிக்கச் செய்தான். சூனியம் முதலிய மாரண வித்தைகளை உபயோகித்தான்; அவனைப் பலவாறு கட்டி இம்சித்தான்; விஷங் கலந்த போஜனங்களை ஊட்டச் செய்தான்; மலையின் உச்சியிலிருந்து உருட்டித் தள்ளச் செய்தான்; ஆழ்ந்த ஜலத்தில் அமிழ்த்தினான். பெரும் அக்கினியால் எரிக்கச் செய்தான். ஒன்றும் பலிக்கவில்லை. பாபமற்ற பிரகலாதனுக்கு யாதொரு தீங்கும் ஏற்படவில்லை.

இதுகண்டு, ஹிரண்யகசிபு பெருஞ் சிந்தனையில் ஆழ்ந்தான் : ''விந்தை என்னே! இவனைக் கொல்ல எவ்வளவோ உபாயங்கள்செய்து பார்த்தேன். இவன் தனது மகிமையால் ஒவ்வொன்றிலிருந்து தப்பி வந்திருக்கிறான். பாலனானாலும் சற்றும் பயப்படாமலிருக்கிறான். சுனச்சேபன் தன்னை விற்ற பிதாவினிடத்திலும் அஸூயை பாராட்டாம லிருந்ததுபோல், இவ்வாறு இம்சித்து வரும் என்னிடம் இவன் துவேஷமில்லாமலிருக்கிறான். இவனுடைய மகிமை அளவிட வொண்ணாததே! இவனுக்கு மரணமில்லை. இவனிடமுள்ள விரோதத்தால், ஒருக்கால் எனக்கே மரணம் ஏற்படுமோ என்னவோ?'' என்று சிந்தையுற்று, ஹிரண்யகசிபு முகம் வாடினவனாய்க் கீழ் நோக்கலுற்றான்.

அச்சமயம் சண்டாமர்க்கர்கள் அவனைப் புகழ்ந்து பேசி உற்சாகப்படுத்தினார்கள். அஸுர குருவான சுக்கிராசாரியர் வரும் வரையில் பிரகலாதனைக் கட்டி பந்தோபஸ்தாய் வைக்கும்படி கேட்டுக் கொண்டனர். இதுகேட்டு ஹிரண்யகசிபுவும் மனந்தெளிந்தான்; பிரகலாதனை அவர்களிடம் ஒப்புவித்து, அவனுக்கு ராஜ நீதிகளையும், கிருகஸ்த தருமங்களையும் புகட்டும்படி அவர்களைக் கேட்டுக்கொண்டான்.

பின்னர், பிரகலாதன் ஆசாரிய கிருகம் சென்று, அங்குள்ள அஸுர குமாரர்களுடன் கூடி விளையாட ஆரம்பித்தான். குருவானவர் வேறு காரியமாயிருக்கும்போது, அவன் தன் தோழர்களைத் தனிமையில் அழைத்துப் பலவித தத்வோபதேசம் செய்துவந்தான். மானிடஜன்மம் கிடைப்பது அரிதென்றும், அது சாசுவதமில்லையென்றும், ஆகையால் அதை வீணாக்காமல், பால்யத்திலேயே ப்ரபஞ்சம், ஜீவாத்மா, பரமாத்மா, இவற்றின் ஸ்வரூபமறிந்து உலக சுகங்களில் பற்று வைக்காது நடந்து, பரமபுருஷனை அந்தரங்கமாய்ப் பஜித்து நற்கதி பெறவேண்டுமென்றும் அவர்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் நற்புத்தி யூட்டினான். இவ்வித ஞானம் அவனுக்கு எவ்வாறு உதித்ததென்று அவர்கள் வினவ, தான் தன் தாயாரின் கர்ப்பத்திலிருந்தபோது, நாரதர் அவளுக்குச் செய்த உபதேசத்தைத் தான் கேட்ட

றிந்ததாகத் தெரிவித்தான். இவனது உபதேசத்தில் அவர்களது மனமும் இழுபட்டது. குரு செய்துவந்த லௌகிக உபதேசங்களை அவர்கள் வெறுத்தனர். அனைவரும் பெரும் விஷ்ணு பக்தர்களாகிவிட்டனர். இவ்வாறு பிரகலாதன், தான் கெட்டது மன்றி, மற்றைய அஸுரபுத்திரர்களையும் புத்திகலைத்தது கண்டு, சண்டாமர்க்கர்கள் நடுங்கினர். உடனே இந்த நிலைமையை ஹிரண்ய கசிபுவுக்குத் தெரிவித்தனர்.

இது கேட்டதும், தைத்யேசுவரனுக்கு அடங்காக் கோபமுண்டாயிற்று. தான் அசன்மார்க்கத்தில் போவதுமன்றி, பிறரையும் அதை அனுசரித்து நடக்கச் செய்கின்ற பிரகலாதனை எவ்விதமாயாவது ஸம்ஹரிப்பதே சரி என்று தீர்மானித்தான். கைகுவித்து வணங்கிப் பரமசாந்தமாய் நிற்கும் பிரகலாதனை நோக்கி அவன், பெருமூச்செறிந்து, "அடே துஷ்டா, மகாமூடா, குலத்தை யழிக்க வந்த கோடரிக்காம்பே, இப்பொழுதே உன்னை இயமபுரத்துக்கு அனுப்பிவிடுவேன். மூன்று லோகங்களும் என்னைக்கண்டு நடுங்குகின்றன. எனக்கு ஆதீனமாயுள்ளன. என்னை எதிர்ப்போர் எவருமில்லை. அப்படி யிருக்க, எந்த பலத்தைக்கொண்டு, நீ எனது ஆக்ஞை மீறி நடக்கத் துணிந்தாய்" என்று வெகு கடுமையாய்க் கேட்டான்.

இவ்வாறு கேட்கப்பட்ட பிரகலாதன், 'அஸுரேசனே' எனக்கு மாத்திரமல்ல. உமக்கும், உம்மிலும் மேலானோர்களுக்கும் பலமாக உள்ளவர் ஒருவரே. ஸ்தாவர ஜங்கம வஸ்துக்களடங்கிய பிரபஞ்சமும், பிரும்மாதி தேவர்களும் அவரது ஆதீனமே. ஸர்வ'பிரபஞ்சவ்யாபியும், காலரூபியுமான விஷ்ணுவானவர் ஸத்வ, ரஜஸ், தமஸ் என்னும் குணங்களைக்கொண்டு ஜகத் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம் என்னும் லீலைகளைச் செய்துவருகிறார். நீர் உமது அஸுரஸ்வபாவத்தை விட்டொழித்து, எல்லாப் பிராணிகளிடத்தும் ஸமபுத்தி பாராட்டிப் பேரானந்த மடைவீராக! ஆத்ம நாசத்தை விளைவிக்கக்கூடிய காமக் குரோதாதி இழிகுணங்களையும், மனது முதலிய ஆறு இந்திரியங்களையும் அடிக்கியாள முடியாத சிலர், பத்து திக்குகளையும் ஜயித்து விட்டதாக வீணகம் பாராட்டுகிறார்கள்!" என்று பதிலளித்தான்.

இவ்வாறு சொல்லக்கேட்ட ஹிரண்யகசிபுவுக்கு உண்டான கோபத்துக்குக் கேட்கவேண்டுமோ? உடனே அவன், "மூடா, உனக்கு மரணம் கிட்டிவிட்டது; இல்லாவிடில், நீ இவ்வாறு பிதற்ற மாட்டாய்! சாகப்போகிறவர்களுக்குத் தான் இவ்வித துர்ப்புத்திகள் தோன்றும். நல்லது; என்னைத் தவிர வேறு யாரோ ஒருவன் எல்லா லோகங்களுக்கும் ஈசுவரனாகஇருப்பதாகச்சொன்னாயே. அவன் எங்கும் நிறைந்திருப்பவனானால், ஏன் இந்த ஸ்தம்பத்தில்அவன் காணப்படவில்லை, இதோ என் கத்தியால் உன் சிரசைக் கொய்யப் போகிறேன். நீ சரணமடைந்துள்ள ஹரியானவன் உன்னைக் காப்பாற்றட்டும், பார்ப்போம்" என்று பாகவதோத்தமனான பிரகலாதனைக்கடிந்து பேசிக்கொண்டே, கையும் வாளுமாய் ஸிம்மாஸனத்திலிருந்து குதித்து, அங்குள்ள ஸ்தம்பத்தில் தன் முஷ்டியால் ஓங்கியடித்தான். அப்போது அந்த ஸ்தம்பத்தில், அண்ட கடாகமும் பிளக்கும்படி பயங்கரமான ஒரு பெருஞ் சப்தமுண்டாயிற்று. அதனால் பிரம்மாதி தேவதைகள் தங்கள் ஸ்தானங்களிலிருந்து நழுவித் தவிக்கலாயினர். பகவான் தான் எங்கும் நிறைந்திருப்பவர் என்பதை மெய்ப்பிப்பதற்காகவும், பிரகலாதன் வார்த்தையை ஸ்திரப் படுத்துதவற்காகவும், ஹிரண்ய கசிபுவுக்கு முன்னர் பிரம்மதேவன் அளித்திருந்த வரத்தைப் பொய்யாக்காமலிருப்பதற்காகவும், மிருகமில்லாததும் மனுஷியனில்லாதுமான ஓர் அற்புத ரூபத்துடன் அந்தக் கம்பத்தில் ஆவிர்ப்பவித்தார். பெருஞ் சப்தமுண்டானதும், ஹிரண்யகசிபு பிரமித்து ஸபையில் நாலுபக்கமும் சுற்றிப்பார்த்து ஒன்றும் காணாமல், பிறகு கம்பத்தில் தோன்றிய பயங்கரமான ரூபத்தைக் கண்டு, 'இது மிருகமுமல்ல, மனுஷியனுமல்ல. என்ன அற்புதமான நரஸிம்ம ரூபம்!' என்று வியந்து நடுங்கலுற்றான். அப்போது நரஹரிரூபியான பகவான் அவன்முன் ஆவிர்ப்பவித்தார். என்ன உருவம்! சந்திரகிரணம்போல் பயங்கரமான கண்கள்; வெளுத்த ரோமங்கள்; கூர்மையான கோரைப்பற்கள்; நிச்சலமாய் உயர்ந்து நிற்கும் காதுகள்; குகைபோன்ற வாய்; ஆகாயத்தை அளாவிய சரீரம்; விசாலமான வக்ஷஸ்; ஸூக்ஷ்மமான இடை; ஆயுதங்களாக உதவக்கூடிய பயங்கரமான நகங்கள்; கிட்ட அணுகமுடியாத தேஜஸ்'

இவ்வித ரூபத்தைக் கண்டு ஹிரண்யகசிபு "மாயாவியான விஷ்ணுவே இவ்வுருக்கொண்டு என்னைக் கொல்ல வந்திருக்கிறான்போலும்!" என்று சொல்லிக்கொண்டே, தன் கதையைக் கையி

லேந்திக் கர்ச்சித்து,நரஸிம்மத்தை எதிர்க்க ஆரம்பித்தான். அக்கினியில் விழுந்த வெட்டுக்கிளி போல் பகவானுடைய ஒளியில் அவனிருப்பது தெரியாமல் மங்கிப் போயிற்று. பிறகு அவன் அவரைத் தன் கதையால் ஓங்கியடித்தான். அச்சமயம் சுதந்தரனான பகவான், கெருடன் பாம்பைக் கௌவுவதுபோல் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டார். அப்போது அவன் அவர் கையிலிருந்து நழுவி, கத்தி கேடயங்களை எடுத்துக் கொண்டு மீண்டும் அவரை எதிர்த்தான் ; வெகு வேகமாய், மேலும் கீழுமாய்ச் சலித்துத் தன் பராக்கிரமத்தைக் காட்டலுற்றான். அப்போது ஸ்ரீ ஹரியானவர் அட்டகாஸம் செய்து, ஸர்ப்பம் எலியைப் பிடிப்பதுபோல் பிடித்து, வாசற்படிக்கு இழுத்துக் கொண்டுபோய் அவனைத் தன் துடை மீது தள்ளி, தனது நகங்களால்அவன் தேகத்தைக் கிழித்தார்;கோரமானநாவினால்அவனதுரத்தத்தை உரிந்தார்; அவனது குடலை மாலையாய்த் தரித்துக் கொண்டார். இரத்த பிந்துக்களால் நனைந்து சிவந்துள்ள அவரது பிடரிமயிர்கள் பார்க்க வெகு பயங்கரமா யிருந்தன. அப்போது ஹிரண்யனது சைநிகர்கள் ஆயுதபாணிகளாய் அவரை எதிர்த்தனர். அவர்களனைவரையும் அவர் ஸம்ஹரித்தார். பிறகு அவர் ஸபையிலுள்ள ஸிம்ஹாஸனத்தின் மீதேறி வீற்றிருந்தார். அவரது ரூபம் பெருங் கோபத்தால் ஜ்வலித்துப் பார்க்கப் பயங்கரமா யிருந்தது. எவரும் அவர் கிட்ட அணுக அஞ்சினர். தேவகண்டகனான ஹிரண்யகசிபு அழிந்ததைக் கண்டு களிப்புற்ற தேவாதிகள் அவர்மீது புஷ்பமாரி பொழிந்தனர். துந்துபி வாத்தியங்கள் முழங்கின. ருத்திரன், பிரமன் முதலானோர் அஞ்சலிசெய்து நின்று, நரஸிம்மனைத் தனித்தனியே புகழ்ந்து போற்றினர். அவரது கோபாவேசத்தைத் தணிக்கும்பொருட்டு ஸ்ரீதேவியை அவரிடம் அனுப்பினர். அவளும் அபூர்வமான அந்த கோரரூபத்தைக் கண்டு நடுங்கி, கிட்ட அணுகவில்லை. அப்போது பிரமதேவன் பிரகலாதனை நோக்கி 'குழந்தாய், உன் தகப்பன் பொருட்டு ஆறாச் சினங்கொண்டுள்ள பகவானைச் சாந்தப் படுத்துவாயாக!' என்று வேண்டினார். பிரகலாதனும் நரஹரியிடம் அணுகி, அஞ்சலிசெய்து அவர் பாதங்களில் ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தான். இவ்வாறு வணங்கிய பாகவதோத்தமனான குழந்தையின்மீது பகவான் கருணைகூர்ந்தார் ; அவனைத் தூக்கி எடுத்து, அவன் சிரத்தின்மீது ஸர்வபாபங்களி லிருந்தும், ஆபத்துக்களி லிருந்தும் அபயமளிக்கத் தக்க தமது கையை வைத்தார். உடனே பிரகலாதனுக்கு எல்லா அசுபங்களும் தொலைந்தன. பரமாத்ம தரிசனம் அவன் மனத்தில் ஏற்பட்டது. அவன் பரமானந்தங் கொண்டான். ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். தேகம் புளகிதமாயிற்று. மகா ஞானம் உதித்தது. தங்குதடையின்றி பரமபுருஷனான பகவானைத் தோத்திரம் செய்ய ஆரம்பித்தான். பிரமாதிகளும் வர்ணிக்கவொண்ணாத மகிமையுடைய ஆதிபுருஷனைத் தான் எவ்வாறு துதிக்கக்கூடுமென்று வருந்தினான். "ஸர்வேசுவரனே! ஸத்வ மூர்த்தியான உமக்குப் பிரும்மாதிகள் கிங்கரர்கள் என் போன்றவர்களும் உம்மிடம் பக்தியுள்ளவர்கள். உமது துவேஷியான ஹிரண்யகசிபுவோ ஸம்ஹரிக்கப்பட்டான். இனி உமது கோபத்தை யடக்கி, எல்லோருக்கும் க்ஷேமத்தை யளிப்பீராக! உமது அவதாரங்கள் லோக ஹிதத்தின் பொருட் டுள்ளவை. இந்த நரஸிம்மாவதாரமும் ஸாதுக்களின் அனுக்கிரகத்தின் பொருட்டும், தர்மரக்ஷணார்த்த மாகவும் ஏற்பட்டுள்ளது. இந்த அற்புத ரூபத்தில் எனக்கு யாதொரு பயமும் கிடையாது. பிரும்மாதி தேவர்களின் ஐசுவரியங்கள் நீடித்து நிற்கா. அவற்றில் எனக்குக் கொஞ்சமேனும் பற்று இல்லை. நீர் என் மீது கருணை கூர்ந்து, ஸம்ஸார துக்கத்திலிருந்து விடுவித்து, எப்போதும் உமது பார்ச்வத்திலிருந்து பேரானந்தம் பெறும்படி அனுக்கிரகிக்க வேண்டும். பிரமனது வாக்கியத்தை நிலைநிறுத்தும்பொருட்டு, என்னை ரக்ஷித்து, என் பிதாவை இவ்வாறு வதைத்துள்ளீர். உமது கிருபையை என்னென்று கூறுவேன்! உமது மகிமையை யார் கண்டறியக்கூடும்? பரமபுருஷனான உம்மிடம் எனக்கு நிரந்தரமான பக்தி இருக்குமாறு அனுக்கிரகிப்பீராக!" என்று இவ்வாறும், இன்னும் பலவிதமாகவும் பிரகலாதன் துதித்துப் புகழ்ந்தான்.

பகவானது கோபம் தணிந்தது. அவர் அவனைப் பார்த்து, 'குழந்தாய், உனக்கு சகல மங்களங்களும் உண்டாகட்டும். உனது பக்தியால் நான் மிகச் சந்தோஷமடைந்தேன். யாது வரம் வேண்டும்? உனது ஸர்வாபீஷ்டத்தையும் பூர்த்திசெய்கிறேன். எனது தரிசனம் ஏற்பட்டவர்களுக்கு யாதொரு கோரிக்கையும் ஈடேறாமலிராது" என்று கேட்டார். பிரகலாதனோ, பிரபஞ்ச சுகங்

களில் சற்றும் மனம் ஈடுபடாது, அவர் எவ்வளவு சொல்லியும் பிரம்மாதி ஐசுவரியங்களும் வேண்டாமென்று கூறி, பகவானிடம் அளவற்ற பக்தியே எப்போதும் தனக்கு இருக்கவேண்டுமென்று பிரார்த்தித்தான். இது கேட்டுப் பகவான் புன்சிரிப்புக்கொண்டு, 'குழந்தாய் உனது பக்தியை மெச்சினேன். உன்னைப்போன்ற பாகவதர்கள் கிடைப்பதரிது. உனக்கு இஷ்டமில்லா விடினும், இந்த மன்வந்தரம் முடிய நீ இங்கிருந்து, தைத்தியேசுவரர்களின் போகங்களை யனுபவித்து வருவாயாக! எப்போதும் என் கதைகளைச் சொல்லிக்கொண்டும், ஸத்கர்மங்களை யனுஷ்டித்தும், ஸன்மார்க்கத்தில் நடந்து வருவாயாக! இறுதியில் ஸர்வ பந்தங்களும் தொலைந்து, நீ என்னை யடைவாய். இந்தச் சரித்திரத்தை ஸ்மரிப்பவனுக்கு எல்லாப் பாபங்களும் நீங்கும்'' என்று அனுக்கிரஹித்தார்.

பிறகு பிரகலாதன், 'பகவானே, என் பிதா செய்துள்ள குற்றத்தை க்ஷமித்து, அவருக்கு நற்கதி யளிக்க வேண்டும்' எனப் பிரார்த்தித்தான். பகவானும், 'என் கரஸ்பர்சம் பெற்றும், உன்னைப் புத்திரனாக அடைந்து முள்ளவனுக்குப் பாபங்களே கிடையாது. அவனது குலம் இருபத்தோரு தலைமுறை பரிசுத்தமாய்விட்டது. அவனுக்கு நற்கதி ஏற்படும். கவலைப்படாதே. உன் பித்ரு பக்தியும் மெச்சத்தக்கதே! அவனுக்குச் செய்யவேண்டிய உத்தரக்கிரியைகளை விதிப்படி செய்துமுடிப்பாயாக'' என்று திருவாக்கருளினார்.

பிரகலாதன் அவ்வாறே பித்ரு காரியங்களைச் செய்தான். பிறகு விப்ராதிகள் அவனை தைத்தியேசுவரனாக அபிஷேகம் செய்தனர்.

இப்போது பிரஹலாதனால் சாந்தப்படுத்தப்பட்ட நரஹரியைப் பிரும்மதேவன் அணுகி, பலவாறு துதித்துப் புகழ்ந்தார். பகவானும் மனங்களித்து, அதன்மேலாவது ஹிரண்ய கசிபு போன்ற துஷ்டர்களுக்கு முன் யோஜியாமல் அவ்வித அசாத்தியமான வரங்களை அளிக்காமலிருக்கும்படி அவருக்குப் புத்திமதிகூறி விடுத்தார். பின்னர் எல்லோரும் புகழ, பகவான் அந்தர்த்தானமானார். பிரகலாதனும் பகவானது நியமனப்படி, செங்கோல் செலுத்தி, ஸன்மார்க்கத்தில் நடந்து, பரம பாகவதோத்தமனாய்க் காலங்கழித்துவந்தான்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

ப்ரதிஞ்ஞா யௌகந்தராயணம்

(வாஸவதத்தா பரிணயம்)

ப்ரத்யோதன் கூறிய வரனது லக்ஷணங்கள் எல்லாம், அவனைத் தவிர மற்ற எவரிடமும் காண்பதரிது என்று கஞ்சுகி சொல்ல, அரசனும் கூடியவரையில் நற்குணங்கள் பொருந்திய மாப்பிள்ளையைத் தேடுவது பெண்ணின் தகப்பனது கடமையென்றும், அதன் பிறகு ஏற்படக்கூடியது பெண்ணின் அதிருஷ்டத்தைப் பொருத்தது என்றும் பதிலளித்தான். பெண்ணின் விவாக விஷயத்தில், தாய்மார்களின் அபிப்பிராயத்தைக் கவனிக்கவேண்டிய தவசியமாகையால், காசிராஜன் சொல்லியனுப்பிய கல்யாணச் செய்தியைக் குறித்து ஆலோசிப்பதற்காகத் தனது ராணியை அழைத்து வரும்படி ப்ரத்யோதன் கட்டளையிட்டான்.

அதற்குள், வத்ஸராஜனது ஞாபகம் வர, அவனைப் பிடித்து வருவதற்காகப் போயிருந்த ஸாலங்காயனன் அதுவரையில் யாதொரு தகவலும் சொல்லி யனுப்பாமலிருந்ததுபற்றி ப்ரத்யோதன் விசாரமுற்றான். "வத்ஸராஜனுக்கு யானை வேட்டையில் மிகுந்த ஆசையுண்டு. நானும் அவனை ஏமாற்றிப் பிடிக்கத் தக்க சூழ்ச்சி செய்துள்ளேன். எனினும், வத்ஸனது மந்திரிகளான யௌகந்தராயணாதிகள் வெகு ஜாக்கிரதையாய் அவனைப் பாதுகாக்க ஏற்பாடு செய்துவருவார்கள். ஒருக்கால் எனது பிரயத்தினம் வீணாய்ப் போகுமோவென்று சந்தேகிக்கிறேன்'' என்று இவ்வாறு ப்ரத்யோதன் தன் மனத்திலே தர்க்கிக்கலானான்.

அச்சமயம், ராணி அரசனிடம் வந்தாள். வாஸவதத்தைக்கு வீணை அப்பியஸிப்பதில் பெரும் அவா உண்டாயிருப்பதாய்த் தெரிவித்து, அது விஷயத்தில் தக்கதோர் ஆசாரியனை நியமிக்க வேண்டுமென்று கேட்டாள். அதற்குப் ப்ரத்யோதன், அவளுக்கு விவாக காலம் வந்துவிட்டதால், வேறொருவரை ஆசாரியனாக நியமிப்பது தகுதியல்ல வென்றும், அவளது கணவனே அவளுக்கு அதை உபதேசிக்கத் தக்கவனென்றும் சொன்னான். ''என் அருமைக் குழந்தைக்கு இதற்குள் விவாக காலம் வந்துவிட்டதா என்ன?''

என்று ராணி சொல்ல அரசன் வியந்து, "இதுவரையில் வாஸவதத்தைக்கு விவாகம் செய்ய வேண்டுமென நம்மை நிர்ப்பந்தித்துவிட்டு, இப்போது, சம்மதமில்லாதவள்போல் பேசுகிறாயே" என்று கேட்டான். ராணியும், கன்யாப்பிரதானம் செய்வது தனக்குச் சம்மதமெனினும் அவளை விட்டுப் பிரிய மனம்வாராமல், தான் வருத்தப்படுவதாய்க் கூறி, யாருக்கு அவளை மணந்துகொடுப்பதாய் அவர் தீர்மானித்திருக்கிறார் என்று வினவினாள். தாய்மார்களுக்கு ஒரு பக்கத்தில், தர்ம சாஸ்திரப்படி காலத்தில் பெண்ணை மணந்து கொடுக்காவிட்டால் லஜ்ஜையும், மற்றொரு பக்கத்தில், அவளைவிட்டுப் பிரியவேண்டுமென்கிற துக்கமும் இருப்பது ஸகஜமெனக் கூறிவிட்டு, ப்ரத்யோதன், வாஸவதத்தையின் விவாக விஷயமாய் நற்குணங்கள் வாய்ந்துள்ள பலதேச மன்னர்கள் தூதர்களனுப்பி பிரார்த்தித்திருப்பதாயும், அதைப்பற்றி அவளது அபிப்பிராயம் என்னவென்றும் கேட்டான். அதற்கு ராணி, 'உங்களுக்கு யார் இஷ்டமோ, அவருக்கு நம் குழந்தையை மணந்து கொடுக்கலாம்' என, ப்ரத்யோதன், 'நீ விளையாட்டாய்ப் பேசி, என் பேரில் வெகு பாரம் சுமத்தப் பார்க்கிறாய்! பின்னர் ஒருக்கால், ஏதாவது விபரீதம் நேர்ந்தால், என் மீது குறைகூறுவாய். ஆகையால் நமது பந்துக்களும், உத்தம குணங்கள் நிறைந்துமுள்ள மகததேசாதிபதி, காசிராஜன், மைதிலன், சூரசேனன் முதலானோருள், எவர் நமது வாஸவதத்தைக்குத் தகுந்த வரன் என்று உனது அபிப்பிராயத்தைக் கூறுவாயாக!" என்று நியமித்தான்.

இச்சமயம் கஞ்சுகி அவசரமாய் அங்குவந்து 'வத்ஸராஜன்' என்று பரபரப்புடன் கூறினான். இதுகேட்ட ப்ரத்யோதன், 'வத்ஸராஜனுக்கு என்ன?' என்று கேட்க, கஞ்சுகியும் 'வேந்தே, மிகப் பிரியமான செய்தி உரைக்கும் அவசரத்தில், சொல்லவேண்டியதைக் கிரமமாய்க் கூறாமல், சுருக்கிச் சொல்லிவிட்டேன். க்ஷமித்தருள வேண்டும்' என்று அரசன் பாதங்களில் விழுந்தான். பின்னர், பயப்படாமல் நிகழ்ந்ததைக் கூறும்படி அரசன் நியமிக்க, கஞ்சுகியும், மந்திரிச் சிரேஷ்டனான ஸாலங்காயனனால் வத்ஸராஜன் சிறைபிடிக்கப்பட்டுவிட்டான் என்று தெரிவித்தான். இதைச் செவியுற்ற ப்ரத்யோதன் அளவற்ற ஆநந்தமடைந்தான். அவ்வித காரியம் அஸம்பாவிதமென நினைத்து, அது வாஸ்தவந்தானா என்பதற்காக, அதுவிஷயமாய்ப் பலவித பிரச்னைகள் செய்தான்:

ப்ரத்யோதன்:—"நீ என்ன சொன்னாய்!"

கஞ்சுகீ:—"மந்திரிவர்யனான ஸாலங்காயனனால் வத்ஸ ராஜன் சிறைபிடிக்கப்பட்டான்!"

ப்:—'உதயனனா?'

க:—'ஆமாம்!'

ப்:—"சதானீகனது புத்திரனா?"

க:—'நிச்சயமாய் அவன்தான்.'

ப்:—ஸஹஸ்ரானீகனது பேரனா?"

க:—"அவனேதான்."

ப்:—'கௌசாம்பீ மன்னனா?'

க:—'சந்தேகமன்னியில்.'

ப்:—'ஸங்கீதத்தில் கைதேர்ந்தவனா?'

க:—'அப்படித்தான் சொல்லுகிறார்கள்.'

ப்:—'வத்ஸராஜன்தானே?'

க:—'சந்தேகமேன்? வத்ஸராஜனே'

ப்:—'மந்திரி யௌகந்தராயணன் இறந்துவிட்டானோ?'

க:—"இல்லை. அவர் கௌசாம்பியில் இருக்கிறார்"

ப்:—'அப்படியானால் வத்ஸராஜன் பிடிபட்டதாக நாம் நம்பமாட்டோம்."

க:—'அரசே, தாங்கள் நிச்சயமாய் நம்பலாம்'

ப்: —'மந்தர பர்வதம் கைளால் சுழற்றப்பட்டது என்பதுபோல், வத்ஸராஜன் சிறையிடப்பட்டான் என்று நீ கூறுவது நம்பத்தக்கதல்ல. யுத்த களங்களில், யௌகந்தராயணனது ஸஹாயத்தால் வத்ஸராஜன் செய்துள்ள பராக்கிரமச் செயல்களைப்பற்றிச் சத்துருக்கள் புகழ்ந்து கூறும் வாக்கியங்கள் நமது காதில் இன்னமும் சப்தித்துக்கொண்டிருக்கின்றனவே."

க:—"என்றாலும், கிருபை கூர்ந்து நான் சொல்வதை நம்பவேண்டும். நான் விப்ரன்; வயது முதிர்ந்தவன். தங்கள் ஸன்னிதானத்தில் இதுவரையில் பொய்யென்பது உரைத்தவனல்லேன்."

ப்:—'ஆம். வாஸ்தவந்தான். யார்மூலமாய் ஸாலங்காயனன் இச் செய்தி சொல்லியனுப்பியிருக்கிறான்?'

க:—'தூதன் ஒருவனும் வரவில்லை. வத்ஸராஜனை ரதத்தில் ஏற்றி வைத்துக்கொண்டு, ஸாலங்காயனனே நேரில் வந்திருக்கிறார்."

ப்:—"அப்படியா? வெகு சந்தோஷம்! இனி நமது ஸைன்யங்கள் கவசாதிகளைக் கழற்றி விட்டு, இஷ்டம்போல் சுகமாயிருக்கலாம். இது காறும் வத்ஸராஜனுக்குப் பயந்து இரகசியமாய் எனக்கு வேவுகாரர் அனுப்பிவந்துள்ள அரசர்கள் பலரும் இனிச் சிந்தையற்று வாழலாம். விஸ்தரித்துக் கூறுவானேன். 'மகாஸேனன்' என்று எனக்கு ஏற்பட்டுள்ள பெயரானது இப்பொழுது தான் நிஜமான பொருளுள்ளதாய் ஆயிற்று."

ராணி:—"ஸாலங்காயனன் வத்ஸராஜனை இங்குக் கொண்டுவந்திருக்கிறானா என்ன?"

ப்:—'ஆமாம்'.

ரா:—'அப்படியானால், வாஸவதத்தையைவேறு எவருக்கும் மணந்துகொடுக்க வேண்டுவதில்லை.'

பின்னர் மகாசேனன் கஞ்சுகியை நோக்கி, வத்ஸராஜனை ராஜபுத்திரனுக்குரிய மரியாதைகளுடன் அழைத்துவரும்படி ஸாலங்காயனனுக்குத் தெரிவிக்கும்படி கட்டளையிட்டான். இதற்குள் அரசனும், ராணியும் தங்களுக்கேற்பட்ட பரமானந்த ஸம்பவத்தைக் குறித்துப் பேசிக் களித்தார்கள். மற்றைய அரசர்கள் தன்னை வணங்கி, தனது சம்பந்தத்தைக் கோரினாலும், வத்ஸராஜன் மட்டில் தன்னைச் சிறிதும் லக்ஷியம் செய்யாதிருந்ததுபற்றி, ப்ரத்யோதன் கொஞ்சம் வருத்தமுற்றான். அவன் அவ்வாறு கர்வமாயிருக்கக் காரணம் யாது என்று ராணி வினவ, அரசனும், "பிரஸித்த ராஜரிஷிகள் நிறைந்துள்ளதும், வேதஸாரமான பாரதத்தில் கூறப்பட்டுள்ளதும், பரத சக்கரவர்த்தியின் ஸம்பந்த முள்ளதுமான வம்சத்தில் பிறந்தவன் வத்ஸராஜன். குலக்கிரமமாய்க் கிடைத்துள்ள ஸங்கீத வித்யையில் கை தேர்ந்தவன்; யௌவனம், விசேஷ ஸௌந்தரியம் நிரம்பியவன். பிரஜைகளுக்கு அவனிடமுள்ள அந்தரங்க பிரீதிக்கு அளவே இல்லை. இவ்வாறு உத்தம குலம், குணங்கள் முதலியன பொருந்தியுள்ளவன் அகங்கொள்வது ஸகஜமே!" என்று பதிலளித்தான். 'இவ்வளவு வரகுணங்கள் பூர்ணமாயுள்ள வத்ஸராஜனிடம் ப்ரத்யோதனனுக்குக் கோபம் ஏற்படக் காரணம் யாது' என ராணிகேட்க, அரசனும், புதரில் போடப்பட்ட அக்கினிபோல் தனது ஆக்ஞை எல்லாத் தேசங்களிலும் பரவி, அவற்றை அடக்கியிருந்தாலும், வத்ஸனது ராஜ்யத்தில் தனது பராக்கிரமம் அதுவரையில் தலைகாட்ட வொண்ணாமல் போனதுதான் தனக்கு வருத்தமெனக் கூறினான்.

அப்போது கஞ்சுகி அரசனிடம் வந்து, வத்ஸராஜனது கோஷவதீஎன்னும் உத்தம வீணையை ஸாலங்காயனன் மஹாராஜனுக்கு அனுப்பினதாகச் சொல்லி அதை அவனிடம் ஸமர்ப்பித்தான். அவனும் அதை வெகு சந்தோஷத்துடன் கிரகித்துக்கொண்டு, யானைகளை வசீகரணம் செய்யத்தக்க அதன் மகிமையைப் புகழ்ந்து பேசினான். பிறகு அதை யாருக்குக் கொடுக்கலாமென்று யோஜித்தான். அவனது மூத்த குமாரனான கோபாலகன் என்பவன் அர்த்த சாஸ்திர ஸாரமறிந்தவன். இளையவனான அனுபாலகனோ ஸங்கீதத்வேஷி. மல்லவித்தையில் சிரத்தையுள்ளவன்; வாஸவதத்தை வீணாப்பியாஸம் செய்ய ஆரம்பித்திருப்பதால், அவளிடம் அதைக்கொடுத்துவைப்பதாய் அவன் தீர்மானித்தான்.

பிறகு ப்ரத்யோதன் வத்ஸராஜனுக்கு ஏற்பட்டுள்ள விரணங்களுக்குத் தக்க பரிகாரம் செய்து, அவனிடம் மரியாதையாய் நடந்து வரவேண்டுமென்று ஆஞ்ஞாபித்தான். இப்போது ராணிவாஸவதத்தையை யாருக்குக் கொடுப்பதாய் அரசன் தீர்மானித்திருக்கிறான் என்று கேட்டாள். நிச்சயம் ஏற்படவில்லையென்று அரசன் சொன்னான். அச்சமயம் ஸாலங்காயனன் அரசனது ஸன்னிதானம் வரப்போவதாய்ச் செய்தி சொல்லியனுப்பினான். "வத்ஸராஜன் மீது முதலில் நான் தீராப்பகை பாராட்டினேன்; அவன் பிடிபட்டது கேட்டு, உதாஸீனனா யிருந்தேன். அவனுக்கு விரணங்கள் ஏற்பட்டு, உயிருக்கு ஆபத்து நேரிடும் போலிருக்கிறது என்று கேட்டு ஸ்நேகபாவத்தால் என் மனம் வாடுகிறது" என்று நினைத்துக் கொண்டே, ப்ரத்யோதன் மந்திரி வரவை எதிர்பார்க்கலானான்.

(192-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒழியா ப்ரவாகம் அடியேனை மட்டும் அணுகாது போனதென்னே! பலவாறு இந்தப்படி நாயேன் வருந்துவது உனக்கு விளையாட்டாய் இருக்கிறதோ! ஆபத்தில் உதவி அருள்புரியும் புகழுடையாய்! என் தாபத்தைத் தீர்க்கத், தெய்வமே, இது வேளை ஐயா! உன்னையே நம்பி உறுதி கொண்டுள்ள என்னைத் தள்ளவும் போகுமோ. என் மனைவியின் உள்ளந்தான் நோகுமோ. துள்ளித் துடித் தழிந்து வாடுமோ. ஏழைக்கிரங்கும் இன்புருவே! என் வாழ்வை உனக்கே தத்தஞ் செய்தேன். என் பத்தினியின் சித்தத்தையும் நீயே ஆள்வாய். என் மனப்படி அவள் சம்மதப்படும் வண்ணம் தண்ணருள் புரிவாய்.

வர்த்தமானக் குறிப்புகள்

NEWS AND NOTES

பற்பல மாகாணங்களில் கல்விச் செலவு:—பர்மா மாகாணத்தில் ஒவ்வொரு மாணவருக்கும் சராசரி 36 ரூபாயும், பஞ்சாப்பில் 28 ரூபாயும், ஐக்கிய மாகாணத்தில் 27 ரூபாயும், பர்மாவில் 24 ரூபாயும், சென்னையில் 18 ரூபாயும் செலவழிக்கப்படுகிறது.

* * ০

பிரிட்டிஷ் மியூஸியத்தில் (கண் காட்சிசாலையில்) 30 லட்சம் புத்தகங்கள் இருக்கின்றன. இவைகள் வைக்கப்பட்டிருக்கும் அலமாரிப் பலகைகளின் மொத்த நீளம் 53 மைல்! புத்தகங்களைத் தூசு தட்டிவைக்க முப்பது வேலைக்காரர்கள் இருக்கின்றனர். அப்படியிருந்தும் பதினெட்டு மாதத்துக் கொருமுறைதான் ஒவ்வொரு புத்தகத்தையும் தட்டுவது சாத்தியமாகிறது.

* * *

கிரேட்பிரிட்டனிலுள்ள பற்பல சர்வ கலாசாலைகளிலும் இதுகாலை படிக்கும் இந்தியமாணாக்கர்களின் தொகை பின்வருமாறு:—லண்டன் 360, கேம்பிரிட்ஜ் 117, ஆக்ஸ்போர்ட் 86, எடின்பரோ 166, கிளாஸ்கோ 62, மான்செஸ்டர் 51, பிரிஸ்டல் 24, ஷெப்பீல்டு 21, லீட்ஸ் 17, பெல்பாஸ்ட் 13, அபெரிஸ்ட்வித் 4. இவர்களை யல்லாமல் பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்கும் மாணாக்கர்கள் 588 பேர் இருக்கின்றனராம்.

* * *

துருவத்தை அடைய இரண்டாவது அமெரிக்கர்:—வடதுருவம் மற்றொருமுறை ஜயிக்கப்பட்டுவிட்டது. கமாண்டர் பியரி என்பவர் சில வருஷங்களுக்குமுன் பயங்கரமான பனியினால் சூழப்பட்ட துருவம் என்னும் கோட்டையைப் பிடித்தார். மனிதர்கள் இதுவரையில் படாத கஷ்டமெல்லாம் அனுபவித்தார் ஐந்துவருஷம் கஷ்டப்பட்டார். பிறகு நட்சத்திரங்களும் கோடுகளுமுள்ள அமெரிக்காவின் கொடியை துருவம் என்று சொல்லப்படும் உலகத்தின் மேலுச்சியில் நாட்டினர். இவ்விடம் முழுதும் எங்கு பார்த்தாலும் உறைபனியே. சரித்திரத்தில் இரண்டாம் தடவையாக துருவம் அடையப்பட்டது; இந்தத் தடவையும் ஒரு அமெரிக்கரே. இப்போது அடைந்தது புதுமாதிரியாய் வாயுவின மூலமாக. புது மாதிரியாய் துருவக் கோட்டையைப் பிடிக்க பகிரதப் பிரயத்தனங்கள் செய்யப்பட்டன. முன் தடவைகளில் பட்ட கஷ்டத்துக்கெல்லாம் மாற்றுகள் தயாரித்து மனிதனால் சாத்தியமான மட்டும் சவுகரியம் செய்யப்பட்டு வந்தது. அநேக புதுமாதிரியான பிரயோகங்கள் அனுஷ்டானத்தில் பரிசோதிக்கப்பட்டன. இவையெல்லாம் துருவத்தை யடைவதிலுள்ள கஷ்டத்தை கொஞ்சம் கொஞ்சமாய் நீக்கிவந்தன.

இம்முயற்சிகளில் எல்லோருக்கும் முந்தினவர் கமாண்டர் போர்டு என்னும் அமெரிக்கர்; கீர்த்தி அவருடையதே. ஆடம்பரமில்லாமல் பெயர்கூட வெளியில் தெரியாத இவர், மற்றவர்கள் கண்டு பிடிக்க இன்னும் முடியாத துருவத்தைக் கண்டு பிடித்துவிட்டார்.

கமாண்டர் போர்டு மூன்று யந்திரங்களுள்ள ஆகாயவிமானத்தில் பாரிலாண்டி விருந்து புறப்பட்டார். அப்போதேதான் 'நார்ஜ்' என்னும் ஆகாயக் கப்பலில் காப்டன் அமுன்ஸனும் புறப்பட்டார். அதேகாலத்தில் அலாஸ்காவில் தன்னிரண்டு ஆகாய விமானத்தோடும் அநேக கஷ்டங்கள் அனுபவித்த காப்டன் வில்கின் என்பவரும் புறப்பட்டார். பின் இருவரும் இன்னும் போய்க்கொண்டிருக்கிறார்கள்!

* * *

கிரேட் பிரிட்டனில் சென்ற ஆண்டில் 3,000 விவாகப் பிரிவினை வழக்குகள் நடைபெற்றன. பிரான்ஸு தேசத்தில் 50,000 விவாகப் பிரிவினை வழக்குகள் நடைபெற்றனவாம்!

* * *

ஒரு தகப்பனின் வாஞ்சை:—ஜுனகாத்திலிருக்கும் படேல் ஷானபாயின் பிள்ளையாகிய அம்பாலால் ஒரு மண்ணெண்ணெய் விளக்கை எடுத்துச் செல்லுகையில் கை எரிந்துபோயிற்று. வைத்தியரிடம் காண்பித்தபோது, ஒரு திடசரீரியின் உடம்பிலிருந்து சதைபெடுத்துத் தைத்தாலன்றி குணமாகாதென்று வைத்தியர் சொன்னார். அதன்மேல், பையனின் தகப்பனார் தமது உடம்பிலிருந்தே சதையைக் கிழித்து, 6 சதுர அங்குலம் வரையில் கொடுத்தார். இதன் பலனாக சிலகாலம் அவர் தேக அசௌக்கியமா யிருந்த போதிலும், இப்போது குணமடைந்து விட்டாரென டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகை கூறுகிறது.

1926 அமிருதாஞ்சனம் காலண்டர்கள் 1926

அழகிய மூன்று கலர்களில் ஸ்ரீ கிருஷ்ணன், மோஹினி ஆகியவர்களின் படங்கள், பிரபல சித்திரக்காரர்களால் எழுதப்பட்டவை.

ஒன்று விலை ரூ *0—2—0*; டஜன் ரூ. *1—4—0*; *100* ரூ. *9—12—0*.

தினசரி கிழிக்கக்கூடிய ஆபீஸ் காலண்டர் **1**-க்கு அ **4**. (தபால் பாக்கிங் சார்ஜ் வேறு.)

அமிருதாஞ்சனம்

ஸர்வ நோய்களுக்கும் ஸித்த ஔஷதம்

அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. எல்லா நோய்களுக்கும், தோலைப்பற்றிய 'சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இருமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து (விலை அணா பத்து). அமிருதாஞ்சனம் எல்லாவிடத்திலும் கிடைக்கும்.

இதர அமிருதாஞ்சனம் ஔஷதங்கள்

படைத்தைலம். — இது எல்லா விதமான படைகளையும் போக்கும் இரண்டு தடவை உபயோகித்தவுடன். எவ்வித படையும் போய்விடும். விலை டப்பி ஒன்றுக்கு அணா ஆறு.

தந்தசூரணம்.—பல் துலக்க இது நல்லதாள். பல் வியாதி, ஈறுவலி முதலியநோய்கள் நீங்கும். தினந்தோறும் உபயோகித்தால் பல் வெண்மையாகி முகவசீகரமுண்டாகும். விலை டப்பி ஒன்று அணா 2.

அமிருதாஞ்சனம் டிப்போ,

நெ. 7, தம்புசெட்டி தெருவு, ஜார்ஜ் டவுன்,

சென்னைப்பட்டணம்.

THE QUEEN OF HAIR OILS

KAMINIA OIL (Registered)

கூந்தல் வளர் எண்ணெய்களுள் ராணி

காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்)

இந்தக் காமினியா எண்ணெய் அதிக விலை உயர்ந்த சாமான்களடங்கியது. இது மயிர் உதிர்வதையும் மண்டை குடைச்சலையும் நிறுத்தி, பொடுகைப் போக்கிப் புது மயிர் வளர்ச்சியை விருத்திசெய்து வர்ணம் மாறிய கூந்தலை சுபாவ வர்ணத்திற்குத் திருப்பும். இது வியாபாரிகளுக்கும், மூளை சம்பந்தமாய் உழைப்புள்ளவர்களுக்கும், மாணாக்கர்களுக்கும், மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை விருத்திசெய்து தலையின் அடிப்பாகத்தைச் சுத்திசெய்யும். இதுவும் தவிர, காமினியா ஆயில், அதிக வாசனையு முடையது.

நற்சாக்ஷி பத்திரம்

மூவத்துப்புழையி லிருக்கும் மிஸ்டர் பன்ஸோஸ் எழுதுகிறார்:—காமினியா தைலத்தை நான் மிகவும் சந்தோஷத்துடன் உபயோகித்தேன். அதின் அபூர்வமான குணங்களைப் பற்றி உங்களுக்கு வந்தனம் செய்யப் போதுமான காரணத்தைக் கண்டேன். இந்தத் தைலம் அதிக குளிர்ச்சியைக் கொடுப்பதும் தவிர, கொடிய தலைவலியை தூரத்துகின்ற நிபுண "டாக்டர்". தயவுசெய்து ஒரு புட்டி காமினியா ஆயில் வி. பி-யில் சீக்கிரம் அனுப்பவும்.

மைசூர் பொருட் காட்சியில் தங்கமெடலும், அலஹாபாத் பொருட்காட்சியில் நல்ல நற்சாக்ஷிப் பத்திரமும் பெற்றிருக்கிறது.

ஒரு தரம் உபயோகிக்கவும்

ஒரு புட்டியின் விலை ரூ.	1	0	0	வி. பி. தபால் செலவு ரூ.	0	5	0	பிரத்தியேகம்
4—புட்டிகள் ,,	2	10	0	,, ,, ,,	0	14	0	,,

☞ எச்சரிக்கை:—காமினியா ஆயில் ஒவ்வொரு முக்கியமான பட்டணங்களிலும் கிராமங்களிலுமுள்ள கடைகளில் விற்கப்படுகிறது. உங்களுடைய சமீபத்தில் காமினியா ஆயில் விற்பவர் இல்லாவிடில், கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேராய் ஆர்டர் அனுப்பவும். ஆனால் உங்களூர் வியாபாரிகளிடம் வாங்கும்பொழுது, தங்களுக்கு அதிக லாபம் கிடைக்கும். வேறு மாதிரியான தெரியாத எண்ணெய்களை இதுதான் நல்ல எண்ணெய் என்று இந்தக் காமினியா ஆயிலுக்குப் பதிலாய்க் கொடுக்க முயற்சிசெய்வார்கள். காமினியா ஆயிலைத் தவிர நல்ல குணமுடைய வேறு எண்ணெய்கள் கிடையாததினால், அவர்கள் முயற்சிக்கு ஏமாறாமல் எப்பொழுதும் இக் காமினியா ஆயிலே வேண்டுமென்று சொல்லிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஸோல் ஏஜண்டுகள்:— ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,
155, ஜும்மா மஸீத், பம்பாய்.

Printed at the B. N. Press & Published by V. Kuppuswami Aiyar, 69, Brodies' Road, Mylapore, Madras.